உ

செந்திலாண்டவன் திருவடி துணை

# இரண்டு பக்த சிரோமணிகள்

1. மாணிக்க வாசகர்

2. ஸ்ரீ ராமதாஸர்

(படங்களுடன் கூடியது)


வரகவி-திரு. அ. சுப்ரமண்ய பாரதீ

எழுதியது



திருத்தமான இரண்டாம் பதிப்பு

மாடர்ன் பப்ளிஷிங் ஹவுஸ்,

திருவல்லிக்கேணி, சென்னை.


காபிரைட்]

1925

[விலை அணா 8

FIRST PRINTED ... APRIL, 1925

SECOND EDITION ... SEPTEMBER, 1925

உ

செந்திலாண்டவன் திருவடி துணை

# முன்னுரை

இந்துக்களாகிய நம்மவர்களுள் சைவம், வைஷ்ணவம் என்கிற இரண்டு மதங்கள் பிரதானமாக இருப்பவை. இவ்விரு மதத்தினருள்ளும் பகவத் பக்த சிரோமணிகளாக விளங்கிய மகான்கள் அநேகருளர். அவர்களுடைய சரித்திரங்களைச் சிறுவர்கள் படிப்பார்களானால், இகபர சுகங்களுக் காதாரமான ஒழுக்கங்களிலே மேன்மை யடைவார்கள் என்பதில் ஒரு சிறிதும் ஐய மில்லை. ஆகையினாலேதான், அவைகளை அநேக கல்விமான்கள் பிரசங்க மூலமாகவும் காலக்ஷேப மூலமாகவும் உலகத்திலுள்ள ஏனையர்க்குப் போதித்து வருகின்றனர். அப்படியே புத்தக வாயிலாகவும் போதிப்பது இக்காலத்தில் எளிதிலே செய்யக்கூடிய ஒரு முறை யாகையினால், அந்த முறையைப் பின்பற்றி இந்நூல் வெளிவந்துள்ளது.

இதில் மாணிக்க வாசகர், ஸ்ரீ ராமதாஸர் என்னும் இரண்டு பக்த சிரோமணிகளின் சரித்திரங்கள் அடங்கி யிருக்கின்றன. இவ்விரு பக்த சிரோமணிகளும் பக்தி முறையில் ஒரே வழியைப் பின்பற்றியவர்களா யிருக்கின்றமையினால், இவர்களது சரித்திரங்களைச் சிறுவர் சிறுமியர் படித்துணரக்கூடிய எளிய நடையில் எழுதினேன். மாணிக்க வாசகரின் சரித்திரம், திருவாதவூரர் புராணம் என்று வெளிவந்துள்ள அரிய நூலைத் தழுவி எழுதப்பட்டிருக்கிறது. ஸ்ரீ ராமதாஸருடைய சரித்திரம், பக்த விஜயம் என்னும் நூலைத் தழுவி யெழுதப்பட்டதே யானாலும், சில இடங்களில் இன்பம் நோக்கி விரித்தெழுதப்பட் டிருக்கிறது.

இவ்விரண்டு சரித்திரங்களையும் ஒரே சமயத்தில் படிப்பவர்கள் சைவ, வைஷ்ணவ பேத மின்றி, ஈசுவர பக்தியில் ஈடுபடுவார்கள் என்ற நோக்கங்கொண்டே, இவை இரண்டும் ஒரே புத்தகத்தில் அடக்கப்பட்டன.

பள்ளிக்கூடச் சிறுவர்களுக்கு உப பாடமாகக் கொள்ளத்தக்க முறையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளதாதலால், உபாத்தியாயர்கள் கவனஞ் செலுத்துவார்களென நம்புகிறேன்.

"குமார விலாசம்"
இராயப்பேட்டை
8—9—25

திரு. அ. சுப்ரமண்ய பாரதி

# பொருளடக்கம்

## I. மாணிக்க வாசகர்


பக்கம்

1. மந்திரிச் சருக்கம் ... 1
2. திருப்பெருந்துறைச் சருக்கம் ... 7
3. குதிரையிட்ட சருக்கம் ... 24
4. மண்சுமந்த சருக்கம் ... 34
5. திருவம்பலச் சருக்கம் ... 50
6. புத்தரை வாதில்வென்ற சருக்கம் ... 56
7. திருவடிபெற்ற சருக்கம் ... 64


## II. ஸ்ரீ ராமதாஸர்


1. இளமைப் பருவம் ... 69
2. உத்தியோகம் பெறுதல் ... 75
3. உத்தியோகம் செய்தல் ... 81
4. ஸ்ரீ ராமபிரானுக்குக் கோவில் கட்டுதல் ... 85
5. இராஜத்துரோகக் குற்றத்திற்கு உள்ளாதல் ... 89
6. தண்டனையடைதல் ... 94
7. நவாபு ராமதாஸரின் மகிமை அறிதல் ... 98
8. ராமதாஸர் ஸ்ரீ ராமதரிசனஞ் செய்தல் ... 105



குருதரிசனம் கண்ட வாதவூரர்

உ

செந்திலாண்டவன்

திருவடி துணை

# இரண்டு பக்த சிரோமணிகள்

## I

## மாணிக்க வாசகர்

### 1. மந்திரிச் சருக்கம்

இந்தியாவின் தென் கோடியில் சேர, சோழ, பாண்டிய ராஜ்யங்கள் என மூன்று ராஜ்யங்கள் இருந்தன. இவற்றைச் சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு என்றும் கூறுவார்கள். சேரர், சோழர், பாண்டியர் என்னும் அரசர்கள் இம்மூன்று நாடுகளையும் முறையே பரிபாலித்து வந்தமையினால், இவை களுக்கு அவரவர்களின் பெயர்களே அமைந்தன.

அம்மூன்று அரசர்களும் மகா நீதிமான்களாகவும் தெய்வ பக்தி யுடையவர்களாகவும் விளங்கியபடியால், அவர்கள் ஆண்டு வந்த நாடுகள் மூன்றும் சகல நன்மைகளுக்கும் இருப்பிடமாய் விளங்கின. இவற்றுள் பாண்டி வளநாட்டில், கயிலையங்கிரி வாசனாகிய சிவபெருமானுடைய திருவருட் செல்வம் பெற்ற அகஸ்திய முனிவர் வந்திருந்து இயல், இசை, நாடகம் என்னும் மூன்று தமிழ்களையும் விளக்கியருளினார்.

அமிழ்தினுமினிய தமிழ்வளம் அமைந்த அந்த நாட்டில் திருவாதவூர் என்னும் ஓர் ஊர் உண்டு. அந்த ஊரில் வசித்து வந்த பிராமணர்களுள் ஆமாத்திய குலப் பிராமணர் ஒருவர்க்கு, அவர் முன்னே செய்த தவமே மானிடத் திருமேனி பெற்றதென, ஒரு புத்திரன் பிறந்தான். அந்தப் புத்திரனுக்குத் திருவாதவூரர் என்னும் திருப்பெயரிட்டு, அந்த அந்தணர் அவரை மிகவும் அருமையாக வளர்த்து வந்தார்.

அப்பால் ஆறுவது மாதத்தில் திருவாதவூரர்க்கு அவர் தந்தையார் அன்னப்பிராசனம் (அமுதுண்பித்தல்) செய்வித்தார்; அதன் பின் மூன்றுவது வயதிலே சௌளமும், (குடுமி வைத்தல்), ஏழாவது வயது வந்ததும்—

"இது நூன்மற் றல்லதுநூ லில்லையெனு மறுசமய
வித நூலுந் தலநூலும் விரிந்தபுரா தனநூலும்
பொதுநூலென் றுலகனைத்தும் புகழ்மறைநூ லுஞ்சைவ
முதநூலுந் தரிப்பார்க்கு முந்நூலுந் தரித்தார்கள்"

என்றபடி, மெய்ம்மையுள்ள நூல் இதுவே அல்லாமல் இப்படிப்பட்ட நூல் வேறே இல்லை என்று வாதிக்கும் ஆறுவகைச் சமயிகளின் நூல்களும், ஸ்தல புராண நூல்களும், விரிந்து விளங்குகின்ற பதினெண் புராண நூல்களும், பழைமையாகிய சிவாகம நூல்களும் தரிப்பவராகிய வாதவூரர்க்கு, முப்புரி நூல் மார்பிலே தரிப்பித்தார்; அஃதாவது உபநயனம் செய்வித்தார்.

உபநயனம் அடைந்தபின் திருவாதவூரர், "எக்கலையுங் கற்றுணர்ந்தா ரீரெட்டாண் டெல்லையினில்," என்கிறபடி பதினாறு வயதளவிலே சகல கலைகளையும் கற்றுணர்ந்து, அறிவிலே பெரியவரானார்; ஒழுக்கங்களிலே உயர்ந்தவரானார். அவரை, அறிஞர் பலரும் மதித்து, மரியாதை செய்து வருவாராயினர்.

திருவாதவூரார் இவ்வாறு மேன்மையடைந்து விளங்கும் காலத்திலே மதுரையில் அரிமர்த்தன பாண்டியன் என்னும் ஓர் அரசன் பாண்டி வளநாட்டை ஆண்டு வந்தான். அவ்வரசனுக்கு வாதவூராருடைய மகிமை தெரியவந்தது. "அறிவுடையொருவனை அரசனும் விரும்பும்" என்பதற்கேற்றபடி, அவன் வாதவூராரிடம் விருப்பங்கொண்டு, அவரை வரவழைத்துத் தனக்கு ஓர் அமைச்சராக்கிக்கொண்டான். வாதவூரார், படைகளை நடத்தும் விதத்தைப் போதிக்கும் நூலையும், மநு வென்னும் அரசன் கூறிய பெருமை வாய்ந்த நூலையும் ஐயந்திரிபறக் கற்றுணர்ந்தவ ராதலால், பாண்டியனுடைய கண்களைப்போ லிருந்த அமைச்சர்களுக்கெல்லாம் தலைவரானார். அரசன் அவர்க்கு, தென்னவன் பிரமராயன் என்னும் திருப்பெயர் தந்து, நவரத்தின ஆபரணங்களும், பீதாம்பரமும், சந்திர வட்டக் குடையும், சிவிகையும், வெண்சாமரைகளும், யானைகளும், குதிரைகளும், சேனைகளும் கொடுத்து, அவரை மிகப் பெருமையாக நடத்தி வந்தான்.

திருவாதவூரார், வானத்திலிருந்து நக்ஷத்திரக் கூட்டங்கள் சூழப் பூமியிலே வந்த சந்திரனைப்போல், ஏனைய மந்திரி பிரதானிகள் சூழ விளங்கினார்; நீதியை நிலை நிறுத்துவது தமது கடமைகளில் ஒன்றெனத் தீர்மானித்து, முறை தவறாமல் ராஜரிகம் செய்து வந்தார்; தருமம் தவறாமல் நடப்பவர்க்கு ஒரு கவசமாகவும், தவறி நடப்பவர்க்கு இடுக்கண் விளைவிப்பவராகவும், அடங்கி நல்ல வழியிலே நடப்பவர்களுக்கு இன்பத்தைச் செய்பவராகவும், ஏழைகளுக்கு அன்னையாகவும், சிவபெருமானிடத்திலே அன்புடையவராகவும் இருந்து, பாண்டிய ராஜனுடைய ஆணையை நடுநிலைமை தவறாமல் செலுத்தி வந்தார்.

இப்படியிருந்து வருகையில், கொடிய பாவச் செயல்களுக்காளான உயிர்களெல்லாம் படும் பாட்டை அறிந்த வாதவூரர், உலக வாழ்வு பயனில்லாதது என்னும் உணர்வை யடைந்தார்; அதன் பின் அவர், கூத்தாடிகளுடைய கருத்து வேறும் வேஷம் வேறும் ஆவதுபோல் சித்தம் வேறுபட்டவரானார். சற்குருநாதனை அடையவேண்டு மென்கிற ஆசைமாத்திரம் அடிக்கடி அவர் மனத்தில் உதித்துக்கொண்டிருந்தது. அதனால், அவர் தடாகங்களிலும் சோலைகளிலும் சென்று, வண்டுகள் குளிர்ந்த தேன் நிறைந்த மலர்களைத் தேடுவதுபோல், மெய்ப்பொருள் உணர்ந்து, அறிவு கைவரப்பெற்ற ஞானசாரியர் யாவரென்று தேடத் தொடங்கினார்.

இப்படியிருக்கையில் அரசன் வழக்கம்போல் ஒருநாள் சபைக்கு வந்து சிங்காசனத்திலே அமர்ந்தான். அமைச்சர்களும் ஏனைய அரச அங்கத்தினரும் வந்து வீற்றிருந்தனர். அரசன் தேச விசாரணை செய்துவருகையில், குதிரைப் படைகளைப் பாதுகாத்துவரும் காவலன் வந்து, பணிந்து நின்று, "நம்முடைய குதிரைப் படைகளுள் மரித்தவை போக, இறவாமல் இருப்பவை மிகவும் நோயுடையவைகளாயும் கிழங்களாயும் இருக்கின்றன. ஆராயின், சிறந்த குதிரை ஒன்றுமில்லை. அந்தக் குறையை விரைவில் நீக்கியருளல் வேண்டும்" என்று கேட்டுக்கொண்டான்.

வேந்தன், "அப்படியா நல்லது; அக்குறையை நீக்கியருளுவோம். நீ போ" என, அவனை அனுப்பிவிட்டு, தன் உடலும் உயிரும்போ லிருப்பவரும், சிவபெருமானிடம் அன்புடையவருமாகிய வாதவூரரை நோக்கி, "நமது பொக்கிஷசாலையைத் திறந்து வேண்டிய பொருளை எடுத்துக்கொண்டு, துறை முகத்திலே வந்திறங்கும் குதிரைகளில் நல்ல குதிரைகளாகப் பார்த்து,

நமக்கு வேண்டிய குதிரைகளை வாங்கிக்கொண்டு வாரும். தாமதியாமல் இன்றே புறப்படும். அதற்கு நீரே அருகரானவர்" என்று கட்டளையிட்டான்.

மனம் வேறொன்றிலே பற்றி நின்ற போதிலும், இராஜ காரியங்களைச் சரியாய்க் கவனித்துவரும் வாதவூரர், அரசன் கட்டளைக்கு உடன்பட்டுப் பொக்கிஷசாலையைத் திறந்து, வேண்டிய அளவு பொருள்களை எடுத்துக்கொண்டு, குதிரை வாங்கிவரப் புறப்பட்டார்.

திருவாதவூரர் மகா சிவபக்த சிரோமணி யாதலால், புறப்பட்டதும் நேரே ஆலயஞ் சென்று, அங்குள்ள பொற்றாமரைக் குளத்திலே நீராடிக் கர்மாநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு, அக்குளக்கரையிலே கோயில்கொண்டு எழுந்தருளியுள்ள விநாயகரை வணங்கித் தொழுது, பின் சொக்கநாதரையும் அங்கயற்கண் அம்மையாரையும் வணங்கித் தொழுது நின்று, "என்னை அடிமைகொண்ட ஐயனே! அடியார்க்கிரங்கி அருள்புரியும் துய்யனே! எனக்கு ஒரு குறையுளது. அதனை நிவர்த்தி செய்தருளல் வேண்டும். இப்பொழுது நான் எடுத்துச் செல்லும் இந்தப் பொருளெல்லாம் உனக்கும் உன் அன்பர்க்கும் பயன் படுமாறு செய்தல்வேண்டும். இதுதான் அடியேன் உன்னிடம் வேண்டுவது" என்று பிரார்த்தித்தார்.

அவர் அன்போடு பிரார்த்தித்த சமயம் குருக்கள் விபூதிப் பிரசாதம் கொண்டு வந்து தந்தார். அதைப் பெற்றுச் சிவபெருமானைத் தியானித்து நெற்றியில் அணிந்துகொண்ட வாதவூரர், "நமக்கு இதுபோ லில்லை நிமித்தம்" என்றெண்ணி, மனமுவந்து, மீண்டும் வேதநாதனாகிய சிவபெருமானைத் தொழுது விடை பெற்றுப் புறப்பட்டார்.

தலைமை அமைச்சராகிய வாதவூரர் புறப்பட்டதற்கு அறிகுறியாக மங்கள வாத்தியங்கள் பல முழங்கின. மாதர்கள் பலர் நின்று கவரிகளெடுத்து வீசினர்; மங்களகீதம் பாடினர். பாடகர் பலர் வாழ்த்துப்பாக்கள் பாடி மகிழ்ந்தனர். வீரர்கள் பலர் விருதுகளையும் பதாகைகளையும் உயர்த்தினர். அந்தணர் பலர் கூடிநின்று, வேத மந்திர மோதி ஆசீர்வதித்தனர்.

இவ்வாறு இராஜாங்கத்திற்குரிய ஆடம்பரங்கள் பல நிகழ, வாதவூரர் தமது பல்லக்கில் ஏறிச் சென்றார். அதனைச் சூழ முன்னும் பின்னும் இருபக்கங்களிலும் படைவீரர் பலர் ஆயுதபாணிகளாகச் சென்றனர்.

கண்களைக் கவரும்படியான திவ்விய அலங்காரங்கள் அமையப்பெற்ற பல்லக்கில் சிவபெருமானே மானிடத் திரு மேனி கொண்டதற் கொப்ப விளங்கும் வாதவூர்வள்ளலை மதுரையம்பதியில் புண்ணியவசத்தினால், அக்காலத்தில் வசித்துவந்த புண்ணிய சீலர்கள் பலரும் தரிசித்து மகிழ்ந்தனர்; "இத்தகைய மகா சிவபக்த சிரோமணியைத் தன்னுடைய அமைச்சராகப் பெற்ற நமது அரசனுடைய புண்ணியம் அளவிடுவதற்கரிது" என்றும் புகழ்ந்தனர்.

இப்படியாக மதுரையிலுள்ளவர் மகிழ்ந்து புகழச் சேனை களுடன் புறப்பட்ட வாதவூரர் அந்த நகரைக் கடந்து, மேற்றி சைக் கடலானது உடைந்துபோய்க் கீழ்த் திசையிலே புரண்டு வருவது போல், நகரங்களும் காடுகளும் மலைகளும் நிறைந்த வழியே பலகாத தூரம் போனார்.

## 2. திருப்பெருந்துறைச் சருக்கம்

தம்மிடத்தில் மாறாத அன்புடைய பரம பக்தராகிய வாதவூரர் இவ்வாறு புறப்பட்டு வருவதை, எல்லாம் அறிய வல்ல சிவபெருமான் உணர்ந்து, அவரை அடிமைகொள்ளத் திருவுளங்கொண்டார். உடனே தம்முடைய அடியார்களுள் சிலரையும், கணநாதருள் சிலரையும் மானிட உருக் கொள்ளும்படி ஆணையிட்டார் ; பின் தாம் ஆசாரிய மூர்த்தங்கொண்டு, அவர்களோடு கயிலையை விட்டுப் புறப்பட்டு, அழகிய தமது திருவடித்தாமரைகள் மண்மிசை பொருந்த நடந்து, ஒப்பற்ற தெய்வத் தன்மையுள்ள திருப்பெருந்துறைக்கு வந்து சேர்ந்தார்.

அங்கே சந்தனம், சண்பகம், புன்னை, கோங்கு, பாதிரி, பலா, கமுகு, தென்னை, மா, குரா, ஆல், அத்தி முதலிய மரங்களடர்ந்த ஓர் அழகிய சோலை யிருந்தது. அந்தச் சோலையின் கண், கலாப மயில்களும், இனிய குரலுடைய குயில்களும், கிளிகளும், மற்றும் பலவகையான பறவைகளும் எப்போதும் இனிது கூடி விளையாடி மகிழும். அங்கே எப்போதும் மரங்களிலுள்ள மலர்களிலிருந்து தேன் சொரியும். வண்டுகள் தேனை யுண்டு பாடும். அந்தக் காட்சியினால் அச்சோலையானது, மலர்களைக் கரத்தி லேந்திக்கொண்டு, பகவானுடைய ஸந்நிதியிலே கண்களிலிருந்து நீர் பெருக நின்று துதிக்கும் அன்பர்களின் திருக்கூட்டம்போல் விளங்கியது.

இத்தகைய வளமும் அழகும் பொருந்திய சோலையின் நடுவே, தவமென்னும் கிளைகளும், தருமமென்னும் தளிர்களும், உண்மையென்னும் மலர்களும் நிறைந்து, அறிவுடையவர்க

லைப்போல் விளங்கும் ஓர் அழகிய குருந்த விருக்ஷம் இருந்தது. கயிலையிலிருந்து புறப்பட்டு வந்த சிவபெருமான் அந்தக் குருந்த விருக்ஷத்தின் கீழே போய்த் தங்கி, திருவாதவூருடைய வருகையை எதிர்ப்பார்த்துக்கொண் டிருந்தார்.

அப்பால் வாதவூரர், தெய்வ வசத்தால் அக்காட்டு வழியே சென்றார். அச்சமயம், "இவர்க்கு இனி எந்த மயக்கமும் நீங்கும்; இனி இவர்க்குப் பிறப்பில்லை" என்று கையை மறித்துக் காட்டுகிறவர்களைப்போல் அங்கிருக்கும் காந்தல்களெல்லாம் மலர்ந்திருந்தன. "உம்மைக் காட்டிலும் எங்கள் பாவத்தை நீக்குபவர் யாவருளர்? நீரே எங்களுக்கு அநுக்கிரகம் செய்தல் வேண்டும்" என்று பல் வரிசை தோன்ற இரங்கி நிற்பவர்களைப் போல் அங்கிருந்த மிருதுவாகிய முல்லைகள் மலர்ந்திருந்தன. "அழகிய தமிழ் வேதம் பாடுகின்ற புண்ணிய சீலராகிய திருவாதவூரர் எந்தப் பொருள்களிலும் கலந்து நிற்கும் சிவபெருமானிடம் தீக்ஷையடையப் போகிறபடியால், இவருடைய இந்தப் பிறப்பே உலகம் புகழத் தக்கதாய் விளங்கும் ஒரு நல்ல பிறப்பு" என்று மகிழ்வனபோல் அங்கிருந்த மரங்கள் மலர்களிலிருந்து தேனாகிய ஆநந்தக் கண்ணீரைப் பெருக்கின.

இவ்வாறு அசேதன வஸ்துக்களும் மகிழ, சிவஞான உபதேசத்தைத் தமிழ்ப் பாடல்களாகச் செய்யவல்ல வாதவூரர், காட்டு வழியைக் கடந்து சென்று, கடலின் நடுவே விழுந்து துன்பப்பட்டு அலைகிறவர்கள் சந்தோஷமாய்க் கரையை அடைவதுபோல் திருப்பெருந்துறையை அடைந்தார். அவர் அங்கே போய்ச் சேர்ந்த அச்சமயத்தில், சிவபெருமான் தங்கியிருந்த அந்தச் சோலையிலுள்ள மரங்கள் மலர்ந்திருந்தன. அந்தக் காட்சியானது ஆமாத்தியகுல திலகராகிய வாதவூரருக்குப் பரம

சிவன் அநுக்கிரகஞ்செய்ய வந்திருக்கும் திருத்தலமெனக் கருதி, மேலேயிருந்து அமரர்கள் புஷ்பவருஷத்தை வருஷிப்பது போலிருந்தது.

அங்கிருந்த தாழைகள், மகரந்தப் பொடியுடன்கூடிய வெண்மையான மலருடன் வளர்ந்து நின்றன. அந்தக் காட்சியானது, குறையாத பக்தியுடன் திருநீறணிந்து திருவமுதேந்திக்கொண்டு, வழிநடையினால் களைத்துவரும் வாதவூரரை உபசரிக்கச் சிவனடியார் பலர் வந்து நிற்பதுபோ லிருந்தது. அங்கே தடாகங்களிலும் ஓடைகளிலும் மிகுந்த தாமரைகள் மொட்டுகளுடனும் தேன்சொரியும் மலர்களுடனும் விளங்கின. அந்தக் காட்சியானது, எங்கும் நிறைந்து விளங்கும் பரம்பொருளாகிய சிவபெருமான், குருந்தமர நிழலில் வந்து அமர்ந்தது கண்டு அகமகிழ்ந்து கண்களிலிருந்து ஆநந்தபாஷ்பம் பெருக முகமலர்ச்சியடைந்த தபோதனரின் கூட்டம் போலிருந்தது.

இத்தகைய காட்சிகள் மலிந்த திருப்பெருந்துறைக்கு வாதவூரர் எழுந்தருளியபோது, சிவபெருமான் வந்து தங்கி யிருந்த அச்சோலையில் தொண்டர் பலர் சிவாகமம் ஓதுவது செவியிலே பட்டது. அதைக் கேட்டதும் வாதவூரர், தம்முடன் வந்த தூதர்களிலே சிலரை அழைத்து, " நீங்கள் இந்தச் சோலைக்குள்ளே போய் அங்கே சிவாகமம் ஓதுவது யாவரெனக் கண்டறிந்து வாருங்கள் " என்று கூறியனுப்பினர். அவர்கள் அவ்வாறே அச்சோலைக்குள்ளே போய்ப் பார்த்து வெகு விரைவில் திரும்பி வந்து வாதவூரரைப் பணிந்து நின்று, " ஸ்வாமி, இச்சோலையின் நடுவே ஓர் அழகிய குருந்தமரம் இருக்கிறது. அதன்கீழே ஒரு பெரியவர் அநேக அடியார்கள்சூழ வீற்றிருக்கின்றனர். அந்தப் பெரியவர், சிவபெருமானே மானிடத் திருமேனி கொண்

டதுபோல் விளங்குகிறார். அவரைச் சூழ நிற்கும் அடியார்க ளெல்லோரும் சிவாகமம் ஓதுகின்றனர்" என்று கூறினர்.

இதைக் கேட்டதும் திருவாதவூராருடைய நெஞ்சம் நெருப் பில் விட்ட நெய்யைப்போல் உருகியது. உருகவே வாதவூரர், "ஓ! என்னை யாளவந்த குருநாதன் இவரே" என வெண்ணி, உடல் புளகமடைய உவந்து, சரேலெனப் பல்லக்கிலிருந்து இறங்கி அச்சோலைக்குட் சென்று அந்தத் தெய்வசபையைக் கண்டார். அங்கே, தொண்டர் பலர் சூழக் குருந்த நீழலில் வீற்றிருக்கும் பெரியவர், தம் செவியிலும் சிரசிலும் கண்டத்திலும் மார்பிலும் கரங்களிலும் உருத்திராக்ஷ மணிந்து, விபூதியை நெற்றியில் திரிபுண்டரமாகவும் உடல் முழுதும் உத்தூளனமாகவும் தரித் துக்கொண் டிருந்தார். அவர் தம் திருக்கரத்தில் புத்தகமொன் றும் வைத்துக்கொண்டு சிவப்பழமாக விளங்கினர்.

அவரைக் கண்ட வாதவூரர்,வியப்பும் மகிழ்ச்சியு மடைந்து மனமுருகி ஸந்நிதியிலே நின்று மனத்தால் வணங்கி, "சுவாமி, தமது திருக்கரத்திலுள்ள புத்தகம் யாது?" என்று வினவினர்.

பெரியவர்: "இது மெய்ம்மையான சிவஞானபோதம்" எனத் திருவாய் மலர்ந்தருளினர்.

வாதவூரர்:"சுவாமி, சிவமாவ தென்ன? ஞானமாவதென்ன? போதமாவ தென்ன? இவற்றைத் தாங்கள் எனக்கு விவரித்துச் சொல்வீரானால், அந்த நாளிலே கல்லால விருக்ஷத்தின் கீழே எழுந்தருளியிருந்த பரம்பொருள் தாங்களே என்பதில் ஐய மில்லை! அடியேனும் தமக்கு அடிமையாவேன்!" என்றார்.

பெரியவர் இதைக் கேட்டதும் சிறுநகை செய்து, "அன்ப, சிவமென்றது ஒப்பற்ற மெய்ப்பொருள்; ஞான மென்றது அதனைத் தெரிதல்; போதம் என்றது தெரிந்ததைத் தெளிதல்" எனத் திருவாய் மலர்ந்தருளினர்.

இம்மொழிகளைக் கேட்ட வாதவூரர், "ஆகா, பொன்னம்பலத்திலே திருக்கூத்தாடுகின்ற ஐயரே இவர் என்பதில் ஐயமில்லை ; என்னை யாட்கொள்ளவே இந்தத் திருமேனி கொண்டார் என்பது திண்ணம்! இதனை நான் உணர்ந்து கொண்டேன் !" என்றெண்ணி உச்சிமேற் கரங்கூப்பி,

" மின்னினு நிலைமை யில்லா விழுப்பொருள் யாவும் வேண்டேன்
உன்னடி யணைந்து நாயே னுறுபவ மொழித்தல் வேண்டும்
என்னையின் றடிமை கொள்வா யெம்முயிர்க் கிறைவா வென்று
முன்னுற வணங்கி நின்றார் முகமெலாங் கண்ணீர் வார."

வாதவூரர் இவ்வாறு வணங்கி நிற்கவே, சிவபெருமானைச் சூழ்ந்துநின்ற அடியார்களில் ஒருவர் அவரை நோக்கி, "இந்த அடியாரின் தீவினையை நீக்கி இரக்ஷிக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

சிதம்பரத்திலே திருநடனஞ்செய்யும் அருட்பரஞ்சோதியாகையினால், சிவபெருமான், வாதவூரரிடம் கிருபை வைத்து, சூரியன்முன்னே விகசிக்கும் தாமரைமலர் போன்ற திருவாதவூரரின் திருமுகம் நோக்கி, "நீ முன் ஜன்மத்திலே செய்த தபோபலத்தினால் உன்னை அடிமை கொள்ளும் பொருட்டே இந்தத் திருப்பெருந்துறைக்கு யாம் வந்தோம் ; இனி சஞ்சலப்படவேண்டாம்" என்று மொழிந்தார். பின்னர் "நான் வறுமையுற்றேன்; அதனைத் தாங்கள் தீர்க்கவேண்டும்" என்று மனோதுக்கம் அடைந்துவந்த ஒருவன் கையிலே திரவியம் கொடுப்பதற்கு, இந்த நாள் உரிய நாளென்று பார்க்கும் விதி கிடையாதன்றோ? அதுபோல் அன்றைய தினத்தையே சுதினமாக எண்ணி, அங்கிருந்த அன்பரில் ஒருவரை நோக்கி, "தவமுடைய இவனைத் துன்பத்தினின்றும் நீக்கி, அடிமைகொள்ள இன்றையதினமே

நல்ல நாளாகும். ஆதலால் அதற்கு வேண்டிய காரியங்களை நீ விரைவிலே செய்து முடி'' என்று சிவபெருமான் ஆக்ஞாபித்தார்.

சிவபெருமான் ஆக்ஞைப்படி அந்தத் தொண்டர், மலர் மாலைகளினாலும், பொன்னை இடையிலே அழுத்தி முத்து மணிகளினால் விளிம்புசெய்த பட்டினாலும் ஓர் அழகிய கோவிலை அந்தச் சோலையின் ஒருபக்கம் அமைத்து, அதன் நடுவே ஒரு திவ்ய ஆசனமிட்டு, சிவபெருமானிடம் சென்று, "ஆக்ஞைப்படி அழகிய கோவில் அமைத்தாயிற்று" என்றார்.

சிவபெருமானாகிய பெரியவர், "நல்லது ; இன்றையதினம் இரவு பதினைந்து நாழிகை வேளையில் எல்லோரும் நித்திரை செய்யும் சமயத்தில், திருவாதவூரனாகிய இவனுடைய தீவினை நீங்கும். ஆகையினால் அதற்குமுன் யாம் அக்கோவிலுக்கு எழுந்தருள்வோம்'' என்று கூறியருளினர். அப்பால், சிவபெருமான் இரவில் குறித்த வேளைக்கு முன்னரே சபையிலிருந்து எழுந்து, ஸ்நானஞ்செய்து விலைமதிப்பில்லாத பட்டாடை உடுத்துத் திருநீறும் கண்டிகையும் அணிந்து கொண்டார் ; பின்னர்க் கணநாதர் துதிகூறி மகிழ, திருக்கோவிலுக்குச் சென்று, அங்கே தெற்குமுகமாக அமர்ந்தருளினர்.

அப்பால் திருவாதவூரரும் பரிசுத்த நீராடி, வெள்ளை வஸ்திர முடுத்துத் திருநீறு தரித்த திவ்ய திருமேனியுடன் அந்தக் கோவிலுக்குப் போனார் ; அங்கே குருநாதனை வணங்கி, அவருடைய திருவடியைச் சுத்த தீர்த்தத்தினால் விளக்கி, திவ்ய பரிமளமிகுந்த மலர்கொண்டு அர்ச்சித்து, அழகிய திருமேனி முழுவதும் பனிநீ ரளாவிய சந்தனம்பூசிச் செங்கழுநீர் மாலை சாத்தி, இரு கண்களாலும் ஆசைதீரத் தரிசித்து மனமகிழ்ந்தார்.

இப்படி இறைவன் தரிசனஞ்செய்து என்றுமடையாத

ஆநந்தமடைந்த வாதவூரர், தொண்டர்கள் முன்னரே சமைத்து வைத்திருந்த நிவேதனங்களாகிய சர்க்கரைப் பொங்கலையும் தேங் காய்த் துருவலையும் கொண்டுவந்து சிவபெருமான் முன்னே படைத்து, "என் ஐயனே, அமுதுண்டருளல் வேண்டும்" என்று வேண்டிக்கொண்டார்.

பக்தவத்ஸலனாகிய சிவபெருமான், மன மகிழ்ச்சியுடன் அந்தத் திருவமுதை யுண்டருளினார். அப்பால் வாதவூரர் சுத்த ஜலத்தினால் அவருடைய திருக்கரத்தைக் கழுவி ஆடையினாலே துடைத்துப் பின் அடைகாய் உதவித் தூபதீபம் காட்டி அழ கிய திருநீறிட்டுப் பின் கண்ணாடி காட்டி அவருடைய திரு முடிமேல் பட்டுக்குடை பிடித்தார்; அப்பால் வெண்சாமரை யும் ஆலவட்டமும் வீசி இருகரங்களிலும் மலரை ஏந்திக் கொண்டு நின்றார்.

இவ்வாறு நின்ற பரமபக்த சிரோமணியாகிய வாதவூர ரைச் சிவபெருமான் அருகிலழைத்து, அவர் திருச்செவியில் பஞ்சாக்ஷரம் ஓதி யருளினார். அப்பால் வாதவூரர் ஆநந்தபர வசராய் ஈசனுடைய திருவடியிலே விழுந்து பணிந்தார். ஈசன் மனமகிழ்ந்து தமது திருவடியை அவர் சிரமீது சூட்டியருளி னார். வாதவூரர் அந்த அரிய திருவடியைத் தமது கண்களில் ஒத்திக்கொண்டு மார்பிலணைத்துப் பெருமகிழ்ச்சியடைந்து மெய்யுணர்வுடன் எழுந்தார்.

அப்பொழுது தேவர்கள் மலர்மாரி பொழிவதுபோல் அந்தச் சோலையிலிருந்த மரங்களிலிருந்து மலர்கள் உதிர்ந்தன. பூதகணங்களும் கணநாதரும் வெண்சாமரைகளும் ஆலவட்ட மும் வீசிக்கொண்டு அமலனைத் துதித்தனர். வாதவூரர், தம்மி டம் கிருபை கூர்ந்து தமக்கு உபதேசித்தருளிய சிவ பெருமா

னுடைய பேரன்பை நினைத்து மனமுருகிக் கரங்கூப்பி வணங்கி,—

" ஐய னேயெனை யாண்டருள் புரியு
மாதி யேயுழை யணிமழு விருக்குங்
கைய னேகொடுங் காலனை முனியுங்
கால னேயிரு கண்ணினுண் மணியே
செய்ய னேயடி போற்றியென் பெரிய
செல்வ மேயடி போற்றிபொய் யினர்தம்
பொய்யனேயடி போற்றி யெவ் வுயிர்க்கும்
போத மேயடி போற்றி "

என்று துதிபாடி நின்றார்.

அப்பால் வாதவூரர் விடியற்கால நேரத்தில் குருநாதரின் திருமேனியிலிருந்த சந்தனம் மலர்மாலை முதலியவைகளை நீக்கி யருளினர். அதன்பின் இருளும் நீங்கிப் பொழுது புலர்ந்தது.

பொழுது புலர்ந்ததும் சிவபெருமான் வாதவூரரை வேறொரு பக்கத்திற்கு அழைத்துக்கொண்டுபோய்ச் சொல்ல வேண்டிய தத்துவங்களை யெல்லாம் சொல்லி, " அன்பனே, எம்முடைய பார்வையாகிய சுட்சு தீக்ஷையினால் உன் சஞ்சித வினைகள் வெந்துபோயின. இந்தத் தேகத்துடன் உன்னுடைய பிராரத்துவம் நீங்கிப்போம்.எமது திருவருளானது உன்னுடைய ஆகாமிய வினைகளை நீக்கும். உன்னுடைய உயிரும் பொருளும் உடம்பும் உன்னுடையவையல்ல ; எம்முடையவைகளேயாம். இங்கே உன்னைப்போல் மானிட வடிவங்கொண்டு வந்தருளிய எமது திருவடிவத்தை நீ என்றும் மறவாமலிரு. இதுவே பொருள் " என்று போதித்தார்.

சிவபெருமானுடைய இந்த உபதேச மொழிகளைக் கேட்டு

மனமகிழ்ந்த வாதவூரர், அவருடைய திருவடியிலே பணிந்து எழுந்து நின்று, "பித்தனாகிய என்னுடைய குற்றம் பொறுத் தருளிய ஐயனே, என்னுடையதென்று இதுவரை நான் நினைத் திருந்த பொருளும், எனக்கு இடமாகிய தேகமும், யானும், தமது திருவருளினால் இனி தம்முடையவைகளாகவே நினைக்கி றேன்" என்று கூறித் தாம் அணிந்திருந்த ஆடையையும் ஆபரணங்களையும் களைந்து குருவின் திருமுன் வைத்தார்; அப்பால் பாண்டியன் குதிரைகொள்ளும்படி கொடுத்த பொருளை யும் அவர் முன்னே வைத்துப் பணிந்தெழுந்தார்.

சிவபெருமான் வாதவூரரை முகமலர்ச்சியோடு பார்த்துப் பின் அருகிலிருந்த தம் அடியாரில் ஒருவரை அழைத்து, "இந்தப் பொருளை யெல்லாம் சிவாலயத் திருப்பணிகளுக்கும் மகா தபசிகளுக்கும் வறிஞருக்கும் வாரிக் கொடு" என்றாக்ஞா பித்தார்.

அழகிய சிவிகையின்மேல் வெண்கொற்றக் குடை நிழலில் சேனைகள் சூழ ஓர் அரசனைப்போல் வந்த வாதவூரர், திருநீறு பூசிய திருமேனியும் கோவணவுடையும் குஞ்சிவிரிந்த சிரசும் உடையவராயினர். அவர் விழியினின்றும் ஆநந்தபாஷ்பம் தானே பெருகிற்று. அப்பால் அவர்—

"அன்புட னாக்கி நிற்ப ரழுவர்கை தொழுவர் வீழ்வர்
இன்புற வெழுவர் பின்பா லேகுவ ரிரங்கி மீள்வர்
நன்பகல் கங்குல் காணார் ஞானநல் வடிவே கண்டு
கொன்புனை பித்தர் பாலர் பிசாசர்தங் கொள்கை யானார்."

வாதவூரர் இவ்வித நிலைமையை அடைந்ததும், அவருடன் வந்த பரிசனங்களும் படைவீரர்களும் வந்து அவரைத் தொழுது, "சுவாமி, அரசர் கட்டளையின்படி குதிரைகளை வாங்கிக்

கொண்டுபோக வேண்டிய காரியத்தை மறந்திருப்பது சரியல்ல; அரசருக்குக் கோபமுண்டாகும்படி நடப்பது பெரிய தவருகு மல்லவா? இனி அந்த வேலையைக் கவனிப்போம்" என்றனர்.

இதைக்கேட்ட வாதவூரர், "நீங்கள் யாவர்? நான் யார்? போங்கள். வீண் பேச்சுக்கள் பேசவேண்டாம். போங்கள்" என்று கடிந்து கொண்டார். சேனைத் தலைவன் வியந்து, "ஏன் இவர் இப்படிப் பேசுகிருர்? இவர்க்கு என்ன நேர்ந்தது? நம்முடைய பேச்சையும் கேட்க மறுப்பதோடு நம்மீது அன்பில்லாதவராகவும் நம்மை அறியாதவராகவும் காட்டிக்கொள்கின்ருரே? இனி இவரை நம்புவதிலே பயனில்லை. நாம் இச்செய்தியை வேந்தரிடம் போய்ச் சொல்வோம்" என்றெண்ணி எல்லோருடனும் புறப்பட்டு மதுரைக்குப் போய் அரசனைக்கண்டு பணிந்து, "வேந்தர் பெருமானே, எம்மை அழைத்துச் சென்ற அமைச்சருடைய செய்கையை நாங்கள் என்னென்று சொல்வோம்?" எனத் தயங்கி நின்றனர்.

அரசன் திடுக்கிட்டு "நடந்ததைத் தயங்காமல் சொல்லுங்கள்" என்ருன். சேனைத் தலைவன், "இங்கிருந்து புறப்பட்டுச் சென்ற நாங்கள் பலகாதவழி தூரஞ்சென்று, திருப்பெருந்துறையென்னும் ஓர் ஊரை அடைந்தோம். அவ்வூரில் ஓர் அழகிய சோலையுளது. வாதவூரர் அந்தச் சோலையின் அருகே போனதும் பல்லக்கிலிருந்து இறங்கி அதற்குள் சென்ருர். அங்கே அதனடுவில் ஒரு குருந்தமரத்தினடியில் ஒரு பெரியவர் பல சீடர்சூழ வீற்றிருந்தார். அவரைக் கண்டதும் வாதவூரர் பெருமகிழ்ச்சியடைந்து, அவரோடு அன்பாய்ச் சில வார்த்தைகள் பேசிப் பின் அவர் திருவடியில், 'சங்கர சிவனே போற்றி' என்று விழுந்து பணிந்து, அவரிடம் தமது ஆடையாபரணங்களையும் பொருள்களையும் கொடுத்து, அப்பால் கோவணவுடையும்

திருநீறு பூசிய மேனியுமுடையவராய்ப் பித்தரைப் போலானார். நாங்கள் அவரைப் பார்த்து, 'இப்படிச் செய்வது முறைமை யல்ல' என்று கூறினோம். அவர் அதைக் கேட்காமல், 'நீங்கள் யார், நான் யார்?' என்று பேசுகின்றார். நாங்கள் என்ன செய் வோம்'' என்றான்.

இதைக்கேட்டதும் பாண்டியன், முகத்திலே வியர்வையுண் டாகக் கோபங்கொண்டு, நெருப்பெழ விழித்துப்பார்த்து, "இத் தகைய மதிமந்திரிக ளிருப்பார்களேயானால் அரசனுக் கென்ன குறைவு? குடிகளுக்குத்தான் என்ன குறைவு? படைகளுக்குத் தான் என்ன குறைவு?'' என்று கூறி, உடனே ஓர் ஓலை எழுதிக் கொடுத்து, ''இதனைத் தூதனொருவன் மூலமாக அவருக்கு அனுப்பி, நாளையதினமே அவரை இங்கே என்முன் கொண்டு வரவேண்டும்,'' என்று ஆக்ஞை தந்து சென்றான்.

அரசன் ஆணைப்படி சேனைத் தலைவன் தூதனொருவனிடம் திருவாதவூரருக்கு அந்த ஓலையைக் கொடுத்தனுப்பினான். தூதன் திருப்பெருந்துறைக்குப் போய் வாதவூரரைக் கண்டு, "சுவாமி, சத்திய சீலராகிய பாண்டிய ராஜன் அனுப்பிய திருமுகம் இது'' எனத் தான் கொண்டுவந்த திருமுகத்தைக் கொடுத்தான். வாதவூரர், சிவபெருமானுடைய திருமுகத்தை யல்லாமல் வேறொரு திருமுகத்தையுங் காண மனமில்லாதவரா யிருந்த மையினால், திருமுகங் கொண்டுவந்த தூதனைத் திரும்பியும் பாரா மல் "அந்த ஓலையை வாங்கிப் படியும்'' என்று அங்கிருந்த ஒருவர்க்குக் கூறினார். அவர் தூதனிடமிருந்து அந்த ஓலையை வாங்கிப் பின்வருமாறு படித்தார் :

தென்னவன் பிரமாயன் என்னும் மந்திரிக்குப் பாண் டிய ராஜன் எழுதிய நிருபம்:—

குதிரைகள் வாங்கும்பொருட்டுப் பெரும்பொருள் கொண்டு சென்ற நீர், குதிரைகள் வாங்காமல், பொருளை வேறு வழியிலே செலவிட்டுக் கோவணங் கொண்டதாக அறிகிறோம். இராஜ காரியம் பார்ப்பவருடைய சாமர்த்தியம் இப்படிப்பட்டதென்றறிய மகிழ்ச்சி யடைந்தோம்; பூலோகத்தில் அரசனாயிருந்து ஆள்வதை விட வீடுகள்தோறும் சென்று, பசிப்பிணி தீர இரந்துண்டு வாழ்வது பெருமையாகும் என்றும் கண்டுணர்ந்தோம்; உண்மையாகத் தம்மைப் பரிபாலித்து வந்த அரசருக்குப் பிழைசெய்து வேறொரு கருமம் செய்வது பயன்படுமென்று நீர் சாஸ்திரங்களிலே கண்ட துணிவையும் கண்டு மகிழ்ந்தோம். அரசரைச் சேர்ந்து வாழ்வது விஷத்தையுடைய ஸர்ப்பத்துடன் வாழ்வதைப்போ லாகுமென்று அறிவீரானால், இந்த எமது திருமுகம் கண்டதும் மதுரைமா நகரத்துக்கு வரக்கடவீர்.

இங்ஙனம்:
அரிமர்த்தன பாண்டியன்.

இதைக் கேட்டதும் வாதவூரர், "என்னை அடிமையாகக் கொண்ட சிவபெருமானுடைய துணைபெற்ற என்னிடம் யமனுடைய ஓலையை எடுத்துக்கொண்டு வரும் தூதரும் அணுக மாட்டார்களே! ஒரு கணப் பொழுதில் திரிபுரங்களையும் சிரித்து எரித்த சிவபெருமானுடைய அடியார்கள் ஒருவர்க்கு அஞ்சுவார்களோ?" என்று நினைத்து, சிவபெருமானை வணங்கி, "புண்ணியனே சரணம்! அரவாபரணனே சரணம்! மன்னன் பாண்டியன் எழுதியனுப்பியுள்ள ஓலையைக் கவனியும்" என்றார்.

குருநாதனாக வந்த சிவபெருமான், "அப்பா, அறிவில்லாதவரைப்போல் நீ கலங்காதே. இந்த நாடெல்லாம் மதிக்கும்படியான குதிரைகளைக் கொண்டுபோய்ப் பாண்டியனுக்கு நாமே

கொடுத்து வருவோம். நீ இப்பொழுதே பாண்டியனிடம் சென்று 'வேந்தே, நீர் ஓலை யனுப்பிய படியால் நான் முன்னே வந்து விட்டேன். ஆவணி மாதம் மூலநாளில் குதிரைகள் இங்கே வரும்' என்று அறிவித்துக்கொள். பாண்டியன் உன்னை ஏதேனும் துன்பத்திற் குள்ளாக்குவா னென்று நீ சிறிதும் அஞ்சவேண்டாம்" என்று கூறி, அவருக்குத் திருநீறணிந்து பொன்னாலும் இரத்தினங்களாலும் செய்த ஆபரணங்களும் அழகிய ஆடைகளும் வாகனமும் அளித்து, அரசன் கண்டு மகிழும் படி மந்திரிக்கேற்ற கோலஞ் செய்து, அப்பால் "நீ மன்னனிடம் இதைக் கொடு" என்று நல்ல மாணிக்கமொன்றையும் அவரிடம் கொடுத்து அனுப்பினார்.

வாதவூரர், கன்றைவிட்டுப் பிரியும் தலையீற்றுப் பசுவைப் போல் இருகண்களிலும் நீர் பெருக நின்று வணங்கி, "ஐயா, என்னை நீக்கினையோ?" என்று மனம் நொந்து, பகவானிடம் விடை கொண்டு புறப்பட்டு மதுரைக்குப் போய் மன்னன் அரிமர்த்தனனைக் கண்டு ஆசீர்வதித்து, சிவபெருமானளித்த மாணிக்கத்தையும் அவனிடம் கொடுத்து எதிரில் நின்றார்.

பாண்டியன் முறைப்படி அவரை வரவேற்று வீற்றிருக்கும்படி உபசரித்து, அந்த மாணிக்கத்தை வியப்புடன் பார்த்து மனத்திற்குள் மகிழ்ந்து, "நீர் போன காரியமென்ன? செய்த காரிய மென்ன?" என்று கேட்டான்.

வாதவூரர், "வேந்தே, தம்முடைய பொருளைக் கொண்டு போய் இலக்ஷணக் குறைபா டில்லாதவைகளாயும் நான்கு கதிகளும் அமைந்தவைகளாயுமுள்ள நல்ல ஜாதிக்குதிரைகள் வாங்கினேன். அந்தக் குதிரைகளை இங்கே கொண்டுவருவதற் கேற்ற நல்ல நாள், ஆவணி மாதத்தில் மூல நக்ஷத்திரம் கூடிய தினமே யென்று வேதியர் கூறியபடியால், அந்த நாளை எதிர்பார்த்துக்

கொண்டு நான் திருப்பெருந்துறையில் இருந்தேன். நமது சேனைத் தலைவர் அதற்குள் அவசரப்பட்டு இங்கே வந்து சமூகத்தில் என்மீது அபவாதம் சொல்லியிருக்கிறார்கள். அதைக் கேட்டுக்கொண்டு தாமும் எனக்குக் கோபமாகக் கடிதம் எழுதிவிட்டீர்கள். அதனாலே நான் முன்னே வந்தேன்.. ஆவணி மூலத்தன்று குதிரைகள் வரும்" என்றார்.

பாண்டியன் இதைக்கேட்டதும் மகிழ்வுற்று, "சுவாமி, நான் உம்மிடம் கொண்டிருக்கும் அன்பைக் கெடுக்கவேண்டுமென்றே சிலர் முன்னதாக என்னிடம் வந்து உங்கள் மீது குறை கூறியிருக்கிறார்கள் என்று அறிகிறேன். அவர்கள்பேச்சை நம்பி நானும் உமக்குக் கடுமையாய் ஓலை எழுதி விட்டேன். அதை நீங்கள் மறந்து எப்போதும்போல் இராஜ காரியங்களைக் கவனித்துவர வேண்டுகிறேன்" என்று சொல்லி, ஆடையாபரணங்களால் அவரை உபசரித்து வீட்டிற்கு அனுப்பினான்.

அப்பால், ஆவணி மாதம் மூல நக்ஷத்திர நாள் வருதற்கு இரண்டு தினமிருக்கையில், ஒரு மந்திரி அரசனைத் தனிப்படக் கண்டு, "வேந்தே, வாதவூரர் கூறியவை யாவும் பொய். அவர் இங்கிருந்து கொண்டுபோன திரவியங்களை யெல்லாம் திருப்பெருந்துறையில் கோவில் கட்டுவதற்காகச் சிவனடியார் ஒருவரிடம் கொடுத்து விட்டார். இது உண்மையென்று கண்டேன். அவர் குதிரைகள் வாங்கவே யில்லை" என்று கூறினான்.

வேந்தன், "ஓ அப்படியா! என்ன விந்தை யிது? வாதவூரன் ஏன் இப்படிப் பொய் சொல்லுகிறான்? என்ன மூடத்தனமிது? நமக்குத் துரோகஞ் செய்து இவன் தப்புவதெப்படி? இருக்கட்டும்; சில தூதர்களை இன்றே திருப்பெருந்துறைக்கு அனுப்பி அங்கே குதிரைகள் வந்திருக்கின்றனவா என்று

பார்த்துவரச் சொல்லும். அப்படியங்கே குதிரைகள் வந்திருக்க வில்லையானால் பிறகு பேசிக்கொள்வோம்" என்று கூறி யனுப் பினான்.

அந்த மந்திரி உடனே திருப்பெருந்துறைக்குச் சில தூதர் களை அனுப்பினான். அவர்கள் அங்கே போய்ச் சுற்றிப் பார்த் ததுமல்லாமல் அவ்வூரார் சிலரையும் விசாரித்தனர். வாதவூரார் குதிரை வாங்கினதாகவாவது குதிரைகள் அங்கே வந்ததாகவா வது அவர்களுக்கு ஒரு துப்பும் தெரியவில்லை. ஆகையினால், அவர்கள் திரும்பிவந்து தங்களை அங்கே அனுப்பிய மந்திரியைக் கண்டு, "பேருக்குக்கூட ஒரு குதிரை அங்கே இல்லை" என்று தெரிவித்தார்கள். அந்த அமைச்சன் அச்செய்தியைப் பாண்டிய னுக்கு அறிவித்தான்.

பாண்டியன் அதைக் கேட்டதும் வியப்பும் சினமு மடைந்து, "இங்கே நம்முடைய காரியம் செய்வதாகக் கூறிச் சென்று, பின் நமக்குத் துரோகம் செய்த அந்த வாதவூரனைப் பொறுத்தற்கரிய துயரஞ்செய்து, அவனிடமிருந்து நம்முடைய பொருளை மீண்டும் வாங்குங்கள்" எனத் தண்டல்காரர்களை நோக்கி ஆக்ஞை யிட்டான்.

அவர்கள் அரசனுடைய ஆக்ஞையைச் சிரசின்மேல் ஏற் றுக்கொண்டு வாதவூரரிடம் போய், "ஐயா, குதிரைகள் வாங்குவ தற்காகத் தாம் பொக்கிஷத்திலிருந்து எடுத்துப்போன பொருளை யெல்லாம் இப்பொழுது உம்மிடமிருந்து வாங்கும்படி அரசர் ஆக்ஞாபித்திருக்கிறார். ஏனென்றால், அரசர் தூதர் சிலரைத் திருப்பெருந்துறைக் கனுப்பி, அங்கே குதிரைகள் இருக்கின் றனவா வென்று பார்த்துவரச் சொன்னார். அவர்கள் போய்ப் பார்த்துவந்து அங்கே குதிரைகள் இல்லை என்று கூறிவிட்டார் கள். அதனால் அரசர் வெறுப்படைந்து உம்மிடம் வைத்திருந்த

சிநேகத்தை யொழித்துவிட்டார் ; இனி உம்மை இந்த வேலையி லும் வைத்திருக்கமாட்டார். தாமதியாமல் பொருளைத் தரவேண் டும்" என்றனர்.

வாதவூரர், சிவபெருமானைத் தியானித்தவண்ணம் ஒன்றும் கூறாமல் இருந்தார். பின் தண்டல்காரர்கள், அவரை அழைத்துப் போய்ச் சிறைச்சாலையில் அடைத்தார்கள். வாதவூரர் கொஞ்சமும் மனத்தளர்ச்சி யில்லாமல் சிறைக்கோட்டத்தி லிருந்தார்.

இவ்வாறு வாதவூரர்க்கு நேரிட்ட துன்பத்தைப் பார்க்க மனமில்லாதவன் போல் சூரியன் அஸ்தமனமானான். உலகத் தில் நல்ல யோக்கியர்களுக்கு நேரிடும் தீங்கைக் கண்டு நகைக் கும் கீழ்மக்களைப்போல், வாசனைகொண்ட முல்லைகள் மலர்ந்து சிரித்தன. தமிழ் வேதம் பாடவல்ல வாதவூரர்க்கு நேர்ந்த தீங் கைக் கேட்டுத் துன்பம் அடையும் பெரியார்களைப் போலக் கம லங்கள் குவிந்தன. தெய்வத்தன்மை வாய்ந்த திருவாதவூரர், தாம் சிறையிலிருப்பதைப் பிறர் கண்டால் நாணமடைவார் என்று கருதித் துன்பமடையும் மனத்தரைப்போல் இராத்திரி யாகிய பெண், இருளாகிய கரங்களைக்கொண்டு, அழகிய மது ரையிலுள்ளோர் கண்களைப் புதைத்தனள்.

அப்பால் "அந்தோ, இந்த வாதவூரர் எப்படி அரச னுடைய தண்டனையிலிருந்து தப்பப்போகிறார் ? இதற்கு நாம் என்ன செய்வோம்" என்றெண்ணி மதுரையிலிருந்தோர் யாவரும், தங்கள் தலைவருடைய பிரிவாற்றாமல் துன்ப மடையும் மகளிர்போல், அன்றிரவெல்லாம் நித்திரை செய்யா மல் வருந்தினர். பரிசுத்த மனமுடைய திருவாதவூரருக் குண்டான தீங்கைத் தங்களுக்குள்ள உரிமையை மேற் கொண்டு, ஐந்து முகமுடைய சிவபெருமானருளிய ஆறுமுகக் கடவுளுக்கு அறிவிப்பதுபோல் அன்றைய

தினம் பொழுது விடியும் நேரத்தில் சேவல்கள் கூவின. சிவபெருமானுடைய உண்மை வடிவை யுணர்ந்து செவ்விய தமிழ்வேத மென்கிற ஞான நூலை ஓதவல்ல மகானாகிய வாதவூரர்க்கு வந்த துன்பத்தைப் பொறுக்கமாட்டாமல் பரமசிவனுக்கு அறிவிப்பதுபோல் சொக்கநாதருடைய ஆலயத்தின் முன்னே சங்கங்கள் முழங்கின.

அதன்பின், "ஆகா, எங்கள் இறைவன் குதிரையிலேறும் நாள் இதுதானோ" என்று, செந்தாமரை மலர்மே லிருந்து பார்க்கும் திருமகளின் நெற்றிச் சிந்தூரப்பொட்டைப் போல் கிழக்குக் கடலில் இளஞ்சூரியன் உதயமானான். சூரிய னுதித்ததும், அரசன் எழுந்து வழக்கம்போல் கண், கால் முதலியவைகளைச் சுத்தஞ் செய்துகொண்டு, தூய நீராடி முத்துமாலை முதலிய ஆபரணங்கள் பூண்டு தன் அரண்மனையிலே வீற்றிருந்தான்.

இப்படியிருக்கையில், தண்டல்காரர்கள் வாதவூரரைக் கண்டு "எங்கே பொருள்? கொடும்; கொடுக்காவிட்டால் இன்றைக்கு உம்மை வருத்தப் போகிறோம். இந்த வெயிலிலே நில்லும்! இது அரசனுடைய கட்டளை" என்று கூறி அவரை வெயிலிலே நிறுத்தி வைத்தார்கள்.

வெயிலிலே நின்று தவிக்கும் வாதவூரர், தம்மை யாட்கொண்ட சிவபெருமானை எண்ணி, "ஜகதீசா! பாண்டியனுக்குக் குதிரைகள் கொடுப்பது நம்முடைய கடமையாகும் என்று கூறியது பொய்யோ? உம்மை அடுத்த அடியேனைப் பாண்டியனிடம் மறுபடியும் விட்டீர்! அந்தோ! ஆற்று நீர், கடலிலே கலந்தபின் அது கடல் நீராகுமே யல்லாமல் ஆற்றுநீ ராகுமோ? மங்கைபங்காளரே, உம்மிடத்திலே அன்பில்லாதவனென்று என்னை வெறுத்துவிட்டால், அடியேனுக்கு இங்கே வேறு துணை

யுண்டோ? நான் இப்படி வெயிலிலே நிற்பது உம்முடைய கீர்த்திக்கு ஒரு பெருமையாகுமா? தேவதேவனே, உமக்கு அடிமையான நான் இப்படி வருந்துவதைப் பார்த்தால் இனி எவர் உமக்கு அடிமையாவர்? நானென்னும் அகந்தை நீங்கிய நல்ல மனமுடையவர்கள் சொல்லும் சொல்லையல்லாமல் ஈனனாகிய என் சொல்லை ஏற்கப் போகிறதா உம்முடைய செவி?"— என்று குறைகூறி முறையிட்டுக் கண் கலங்கினார்.

பரம பக்த சீலராகிய வாதவூரர் இவ்வாறு முறையிட்டது குருமுகூர்த்தமாக எழுந்தருளிவந்து திருவடி தீக்ஷை தந்தருளிய சிவபெருமானுடைய திருச்செவியிலே பட்டது. உடனே அவர் வாதவூரரிடம் இரக்கங் கொண்டு அவருடைய துயரத்தைத் தீர்க்கத் திருவுளங் கொண்டார்.

---

## 3. குதிரையிட்ட சருக்கம்

தனயனுக்கு வந்த துன்பத்தை நீக்குவது தந்தையின் கடனாகையினால் சிவபெருமான், காட்டிலுள்ள நரிகளெல்லாம் பரிகளாகவும், தேவர்கள் அந்தக் குதிரைகளைச் செலுத்துகின்ற இராவுத்தராகவும் மனத்திலே நினைத்தார். நினைத்தமாத்திரத்தில் காட்டிலுள்ள நரிகளெல்லாம் பரிகளாக மாறிப் பெருந்திரளாக வந்து திருப்பெருந்துறையில் கூடின. தேவர்களெல்லாம் அவைகளுக்குப் பாகராயினர். அப்பால் சிவபெருமான் ஆரியதேசத்துக் குதிரை வர்த்தகனைப்போல் உருமாறினார். வேதம் அவருக்குக் குதிரையாக வந்து நின்றது. பகவான் அதன்மேலேறிக் கொண்டு, சவுக்குகள் கொண்ட குதிரைச் சேவகர்கள் திரண்டு இரண்டு பக்கங்களிலும் நெருங்கிவரக் கொம்பு, உடுக்கை, தாரை

முதலிய வாத்தியங்கள் முழங்கக் குதிரைகளோடு மதுரை போய்ச் சேர்ந்தார்.

இவ்வாறு குதிரைகள் வந்து சேர்ந்ததை அரசனுக்கு அந் நகர்க் காவலாளர் போய்க் கூறினர். அரசன் அதைக்கேட்டதும் மகிழ்ந்து, "அந்தோ! வாதவூரரை வீணே துன்பப்படுத்தினேமே! நிதானியாததனலே வந்த தவறு இது. வாதவூரருடைய திறமையும் மகிமையும் நன்குணர்ந்திருந்த நாம், அவருடைய பேச்சில் நம்பிக்கை கொள்ளாமல் அவரைத் தொந்தரவுக்குள்ளாக்கியது ஆலோசனையில்லாத செய்கையேயாம். இனி என்ன செய்வது?" என்றெண்ணி வருத்தமுற்றுச் சிறைச் சாலையிலிருக்கும் வாதவூரரைத் தன் முன் வரவழைத்துக் குதிரை வந்த செய்தி கூறி, "என்னை மன்னிக்க வேண்டும். நிதானியாமல் உம்மிடம் கோபங்கொண்டேன்" என்றுரைத்து அவர்க்கு விலையுயர்ந்த ஆடையாபரணங்கள் நல்கி, "வாரும், குதிரைகளைப் போய்ப் பார்த்து வரலாம்" என்முன்.

வாதவூரர், அரசனை அன்போடு பார்த்து, "எல்லாம் ஈசன் செயல்! அவன் அன்றி ஓர் அணுவும் அசையாதன்றோ?" என்று விடைதந்து மனத்திற்குள் தம்மை யாட்கொண்ட தயாபரனுடைய திருவருளை எண்ணி மகிழ்ந்து, "இதோ வந்தேன்" என்று அரசனோடு குதிரைகளைப் பார்க்கப் புறப்பட்டார். அரசன் "நல்லது போவோம்" என ஆசனத்தை விட்டு எழுந்து, வாதவூரருடன் அரண்மனைக்கு வெளியே வந்து, தன் கட்டளையினல் முன்பே வந்து நிற்கும் அழகிய சிவிகையின்மீதேறினன். வாதவூரரும் தம்முடைய பல்லக்கி லேறிக்கொண்டார். பகைவர்களும் அஞ்சத்தக்க சேனைகள் பெரிய ஆரவாரத்தோடு புறப்பட்டன. 'தாம் தாம்' என வாத்தியங்கள் முழங்கின. அப்பால் அரசன், 'வையாளிவெளி' என்கிற ஓரிடத்திற்

குப் போய், அங்கே அமைந்திருந்த முத்துப் பந்தலின் கீழுள்ள அழகிய பொன்னாசனத்திலே அமர்ந்தான். இயல், இசை, நாடகமென்னும் முத்தமிழ் உணர்ந்த புலவர்களும், வேதப் பிராமணர்களும் முறையே அரசனை வாழ்த்தினர். மங்கையர்கள் இருமருங்கு மிருந்து வெண்சாமரைகள் வீசினர். இப்படியிருக்கையில்,

"மங்குல்படி தடம்புரிசை வாத வூரர்
மனங்களிப்ப விழிகளிப்ப வழுவி லாத
திங்களெனுந் தன்மரபு விளங்க வென்றுந்
திருநீறு மஞ்செழுத்துஞ் சிறந்து மல்கச்
சங்கினுடன் காகளங்கண் முழவ மார்ப்பத்
தயங்கியெழுந் துகளுயர்வான் றன்மேற் செல்லத்
துங்கநெடுங் கடல்பரந்து வருதல் போலத்
துவன்றி வரும் பரித்திரளின் ரேற்றங் கண்டான்"

என்றவாறு, திருவாதவூருடைய மனமும் விழிகளும் மகிழக் குற்றமற்ற தன்னுடைய சந்திரவம்சம் விளங்கத் திருநீறும் பஞ்சாக்ஷரமும் சிறந்து என்றென்றும் நிலைபெறச் சங்குகளும் பேரிகைகளும் சின்னங்களும் சப்திக்கப் பூமியிலிருந்து தூள்களெழும்பி ஆகாயத்திலே பரவப் பெரிய கடலானது பெருகி வருவதுபோல் வரிசை வரிசையாகக் குதிரைகள் வருவதைப் பாண்டியன் கண்டான்.

அன்றையதினம் ஆவணிமூல நாளா யிருந்தபடியால் அரசன் அதை நினைந்து மகிழ்ந்தான். குதிரைகளை நடத்திவரும் இராவுத்தர்கள்,

"கட்டிய சுரிகையர் கவின்கொள் வாளினர்
பொட்டணி நுதலினர் பொலன்செய் மேனியர்
பட்டுடை மருங்கினர் பவள நீள்வடம்
விட்டொளி விளங்கிய வியன்கொண் மார்பினர்.

"புன்மயிர்ப் பீலியர் புலியின் றோலினர்
பின்மலர்ப் பாசிலை பிணைத்த குஞ்சியர்
வன்மொழிக் குரலினர் வயங்கு தூணியர்
வின்மலி கரத்தினர் வெறித்த பார்வையர்.

பொன்னியல் குழையினர் பொலன்செய் மாலையர்
பன்னிறச் சாத்தினர் பணித்த தோளினர்
சென்னியிற் கதிர்மணி யிலங்கு சேடனைப்
பின்னிவிட் டுளதெனப் பிணைத்த குஞ்சியர்"

ஆகிய இவர்களெல்லோரும் உடைவாளும் வேலாயுதமும் வில்லும் அம்பும் கத்திகளு முடையவராய், இருபக்கமும் சூழ்ந்து வர, சிவபெருமானாகிய குதிரைத் தலைவர், இடையில் பட்டாடை யுடுத்து, அதன்மேல் கச்சையை இறுக்கிக் கட்டிக் கொண்டு, அதில் உடைவாள் இலக, ஓர் அழகிய வெள்ளைக் குதிரையின்மேல் வந்தார்.

இவ்வாறாக இவர்கள் வருவதைப் பார்த்த மன்னன் உள்ள மகிழ்ந்து "இந்தக் குதிரைத் தலைவர் யாவராயிருப்பர் ? பிர்மா, விஷ்ணு, உருத்திரன் என்னும் தேவர்கள் மூவரில் யாவரேனும் ஒருவராய் இருக்கவேண்டு மென்பது திண்ணம். இல்லாவிட்டால் இவர்க்கு இவ்வளவு அழகமைய நியாயமில்லையே" என எண்ணி அதிசயித்தான்.

வாதவூரர், "முன்செய்த தவமே குதிரையின்மேலே வருகின்றது" என்று தமக்குள்ளே மகிழ்ந்து அதிசயித்து, "ஈசன் நான் எண்ணியதை முடித்தார் !" எனக் கருதிப் பரமாச்சரிய மடைந்தவராய், சிவபெருமானைத் தியானித்தபடி நின்றார்.

பாண்டியன் வாதவூரரைப் பார்த்து, "தெருவீதியிலே இந்தக் குதிரைகளைச் சற்று நடத்திக்காட்டும்படி குதிரைத் தலைவர்க்குச் சொல்லிவிட்டு வாரும்" என்றான். வாதவூரர், "என்ன இவர்

இப்படிச் சொல்லுகிறார்?" என்று நினைத்தவராய் "நல்லது போய்ச் சொல்கிறேன்" என்று கூறி வேகமாய்ச் சென்று, முகமலர்ச்சியுடன் சிவபெருமானாகிய குதிரைத் தலைவனை வணங்கி,

"மன்றன்மல ரோனுநெடு மாலுமுரு வேறா
யன்றுமுத லின்றுமறி யாதவகை நின்றாய்
வென்றிவிடை யன்றியுயர் வெம்பரியின் மீதே
இன்றுனை வணங்கமுன மெத்தவ முயன்றேன்"

என்று முகமன் கூறி, தெருவிலே குதிரைகளை நடத்திக் காட்டும்படி பாண்டியன் கூறியதையும் விநயமாய்த் தெரிவித்தார்.

சிவபெருமான் அதற்கிணங்கி, குதிரைகளை ஓட்டி நாகபந்தம், வட்டம், நெடுவீதி என்னும் குதிரையின் நடைபேதமெல்லாம் செவ்வையாக நடத்திக் காட்டினார்; மனோவேகமாக ஓடும் குதிரைகளை நல்ல நடனம் செய்யும்படி நடத்தினார். பாண்டியன் அதுகண்டு கரைகடந்த களிப்படைந்து, "இப்புரவிகளெல்லாம் தெய்வலோகப் புரவிகளோ? குற்றமொன்றும் சொல்லுவதற்கில்லாமல் இருக்கின்றனவே! இவைகளை நடத்தும் குதிரை வீரர்களும் மகா சாமர்த்தியசாலிகளாகக் காணப்படுகின்றார்களே! என்னே அதிசயமிது!" என்று கூறி வியந்தான்.

அப்பொழுது சிவபெருமான் குதிரைமேல் ஏறிய வண்ணம் அரசன் முன் போய் நின்றார். அரசன் அவரைக் கண்டு புகழ்ந்து, அவர்க்கு விலை மதித்திடற்கரிய ஒரு வஸ்திரங் கொடுத்தான். சிவபெருமான் அந்த வஸ்திரத்தைத் தமது கைச் சவுக்கினால் ஏற்றுக்கொண்டு புன்னகை செய்தார். அது கண்ட அரசன், "நாம் கொடுத்த வஸ்திரத்தை விருப்பமில்லாதவனைப் போல் அலக்ஷியமாய்ச் சவுக்கினால் ஏற்றுக்கொண்டதுமல்லாமல் சிரசிலே தரியாமல் அவமதித்த இவனுடைய துணிவுதா

னென்ன?" என்று கருதிச் சினங்கொண்டான். ஆகா! கடவுளின் மகிமையை என்னென்று கூறுவது! காணுதற்கரிய திருமேனியையுடைய அவர், கண்டவர் கண்களும் மனமு மகிழ வெளிப்பட்டு வந்திருப்பதைக் கண்டும், அரசன் அவரைக் கண்டுணரச் சக்தியில்லாதவனுனன்! என்னென்பது இதனை? அந்தப் பரம்பொருளின் கருணையினுல் ஞானமடைந்தாலன்றி யாரால் அவரை அறிய முடியும்?

இப்பொழுது அரசனுக்கு அருகிலிருந்த வாதவூரர், அவனுடைய திருமுகத் தோற்றங்கண்டு கோபங்கொண்டிருக்கிருனென்று உணர்ந்து, "வேந்தே, இவர்கள் தமக்கு வெகுமதியாகக் கொடுக்கப்படும் வஸ்திரங்களைத் தம் கைச்சவுக்கினுல் ஏற்பது இவர்களுடைய தேச வழக்கம்" எனக்கூறி, அவன் கோபத்தைத் தணித்தார்.

அப்பால் அரசன் அன்புகொண்டு, "இந்தக் குதிரைகளின் இலக்ஷணங்களைப்பற்றிக் கொஞ்சம் தெரிவிக்கும்படி சொல்லும்" என, வாதவூரர், குதிரை வீரர்களை நோக்கி அரசனுடைய விருப்பத்தைத் தெரிவித்தார். அவர்கள், குதிரைகளின் சுழி இலக்ஷணங்களை யெல்லாம் கூறிவந்து, அப்பால் அவைகளின் அவயவ இலக்ஷணங்களையும் நடையின் இலக்ஷணங்களையும் குரலின் தன்மையையும் நிற இலக்ஷணங்களையும் விவரமாய்க் கூறினுர்கள்.

அரசன் கேட்டு மனமகிழ்ந்து, குதிரைகளின் விலையை மதிப்பிடச் செய்து பார்த்து, அவைகளின் விலை தன்னிடமிருந்து வாதவூரர் கொண்டுபோன பொருளைவிட எட்டு மடங்கு அதிகமாயிருப்பது கண்டு, அதிசயமும் ஆநந்தமுமடைந்தான்; அப்பால், சிவபெருமானுகிய குதிரைத் தலைவ

ரைப் பார்த்துக் குதிரைகளைக் கபிறுமாறித் தரும்படி கேட்டு அவைகளைப் பெற்றுக்கொண்டான்.

பின்னர், சிவபெருமான் அரசனிடம் விடைகொண்டு தம்முடன் குதிரைவீரர்களாக வந்த தேவர்களுடன் தாம் வந்த வழியே சென்று ஊரைக் கடந்து கொஞ்சதூரம் போன பின் மறைந்தார். தேவர்களும் தமதுலகம் போய்ச் சேர்ந்தனர்.

இவர்கள் சென்றபின் பாண்டியன் குதிரைகளையெல்லாம் குதிரைச்சாலைக்கு அனுப்பிவிட்டுத் தன் அமைச்சரோடும் பரிசனங்களோடும் அரண்மனைசென்றான். வாதவூரரும் அரசனிடம் விடைகொண்டு தம் இல்லம் ஏகிப் பரமசிவனுடைய கருணையை எண்ணி எண்ணி மகிழ்ந்து அவரைத் துதித்துக் கொண்டிருந்தார். ஏனையரும் அரசனிடம் விடைகொண்டு தத்தம் இருப்பிடஞ் சென்றனர். நகர முழுவதும் வாதவூரரைப் புகழ்ந்தது ; அவர் கொண்டுவந்த பரியின் பெருமையைக் கண்டு மகிழ்ந்தது.

இப்படியிருக்கையில் அன்றிரவு அந்தப் பரிகளெல்லாம் சிவபெருமானுடைய திருவருளினலே கொடிய நரிகளாகி, ஊளையிடத் தொடங்கின. அந்தச் சத்தத்தினல் அந்நகர மாந்தரனைவரும் நித்திரை நீங்கி எழுந்து, யாதோ ஈதென வியந்து பயந்தனர் ; நாற்புறமும் ஓடிப் பார்த்தனர். இதற்குள் நரிகள் ஒன்ருெடொன்று சண்டையிட்டுக்கொண்டு குதித்து ஓடிக் குதிரைச்சாலையில் புகுந்து, குதிரைகளெல்லாம் வெருண்டு நடுங்கவும் குதிரைப் பாகர்கள் திடுக்கிடவும் அட்டகாசஞ் செய்தன. அன்றியும் அவைகள் சில குதிரைகளை ஒருங்குபடக் கொன்றுவிட்டு இராஜ வீதிகளிலும் ஆவண வீதிகளிலும் ஓடி ஊளையிட்டு யாவரையும் அச்சுறுத்தின.

இவ்வாறு நரிகளின் போராட்டம் மிகவே, அரசனுடைய

படைவீரர்களெல்லாம் ஒருங்கு திரண்டெழுந்து நரிகளைப் படை கொண்டு சாடக் கருதி,

"நீடு வாடை யிடந்தொறு நின்றணி
கூடு வார்மிகக் கூவி வெருட்டுவார்
ஓடு வாரொளித் தோடிப் புகுமிடந்
தேடு வாரெதிர் சென்றமர் செய்குவார்."

இவ்வாறு படைவீரர் மூண்டு வரவே நகர வாசிகள்,

"எங்க ளாருயிர் காத்தரு ளின்றணி
திங்க ளாரெனத் தெய்வம் பராவுவார்
அங்க பாட மடைத்தரண் செய்குவார்
மங்கு லாடு மதிற்றலை யேறுவார்.

நற்ற வஞ்செய நன்கில தானதோ
கொற்ற வன்செய்ய கோல்கொடி தானதோ—"

"இன்றைக்கு இதன் பயன் யாதோ" என்று எண்ணி நடுங்கினார்கள்.

அரசனுடைய குதிரைப்பாகர்கள் கூக்குரலிட்டுக் கொண்டு ஓடி அரண்மனைவாயிலில் நின்று கூவி, அரசனை அழைத்து "நேற்று வந்த குதிரைகளெல்லாம் நரிகளாக மாறிப் பெருந் தொந்தரை செய்கின்றன; நம்முடைய குதிரைகளில் அநேக குதிரைகளையும் கொன்றுவிட்டன. ஜனங்களெல்லாம் கதறுகிறார்கள். படைவீரர்கள் அவைகளை ஓடி ஓடித் துரத்தி அடிக்கிறார்கள்! அந்தோ ! என்ன செய்வோம். என்ன மாயமிது! புது வெள்ளம் வந்து பழைய வெள்ளத்தையும் கொண்டுபோயிற்று என்று கூறுவதற் கிணங்க, நம்மிடம் ஏற்கனவே இருந்த குதிரைகளிலும் பல ஒழிந்தனவே" என்றனர்.

இவ்வாறு அவர்கள் முறையிட்ட வோசையும், நரிகள் ஊளையிடும் சத்தமும் பாண்டியனுடைய செவியிலே, ஏககாலத்தில் பல வேலாயுதங்களைச் செருகினாற்போல விழுந்தன. இவ்வொலிகளைக் கேட்டதும் அரசன் இரண்டு கண்களிலும் அழல் சிந்த தேகத்திலே சிறு வியர்வுண்டாகச் சினங்கொண்டான்.

எல்லாம் அறியவல்ல சிவபெருமான், மாறனுடைய கோபங்கண்டதும், மாயமாய் வந்த நரிகளையெல்லாம் மறைத்தார். பாண்டியன் உடனே தன் கண்களுக்குச் சமானமான தண்டற்காரரை வரவழைத்து, "நரிகளை யெல்லாம் நல்ல குதிரைகளாக்கவல்ல சாமர்த்தியமுடைய நமது மந்திரியைப் பிடித்து வாருங்கள் என்முன்" என்று கட்டளையிட்டான். தண்டற்காரர் அரசனை வணங்கி "ஆக்ஞைப்படி கொண்டு வருகிறோம்" என்றோடி, வாதவூரருடைய மாளிகைக்குச் சென்று அங்கிருந்த காவலாளி மூலமாய்த் தங்கள் வருகையைத் தெரிவித்தார்கள்.

வாதவூரர் இந்தச் சமயத்தில், 'மலைபோலிருந்த பெரிய இராஜ காரியத்தை முடித்துவிட்டோம்' எனக் கவலை நீங்கிச் சிவபெருமானைத் தியானித்த வண்ணம் ஆநந்தமயமாய்த் தம்மையே மறந்திருந்தார். ஆகையினால், அவர்க்கு ஊரில் நடந்த அமளி ஒன்றுமே தெரியாது. இராஜ சேவகர்கள் தம்மை அழைத்துப்போக வந்திருக்கிறார்கள் என்று கேட்டதும் திடுக்கிட்டெழுந்து சற்று நிதானித்து வெளியே வந்தார்.

தண்டற்காரர்கள் அவரைப் பணிந்து, "சுவாமி, தங்களை வேந்தர் அழைத்துவரச் சொன்னார்" என்றார்கள். வாதவூரர், "இந்த வேளையிலே அழைக்கக் காரணமென்ன?" என, தண்டற்காரர்கள், "சுவாமி, நேற்று வந்த பரிகளெல்லாம் நரிகளாயின.

அதனால் அரசன் பெருஞ் சினங்கொண்டு தம்மை அழைக்கிறார்" என்றனர்.

வாதவூரர் சற்று ஆலோசித்துச் சிவபெருமானை நினைத்து, "என் ஐயனே, உமது திருவிளையாடலை யாரால் அறிய முடியும் ?" என்று எண்ணிச் சிறுமுறுவல் செய்து, திருநீறு தரித்துக்கொண்டு "பக்தர்க்கெளிய பரம்பொருளே, அரசனுடைய கோபத்திற்கு என்னை ஆளாக்குவதில் இன்னமும் உமக்கு விருப்பமிருக்கிறது போலும்! ஆயின் இதோ அவன்முன் சென்று அவனிடுந் தண்டனைக் குள்ளாகின்றேன்" என்று வருந்தியவாறே தண்டற்காரருடன் புறப்பட்டு அரண்மனைக்குப் போய் அரசனைக் கண்டார்.

அரசன், அவரைக் கண்டதும் மூண்டெழுகின்ற தீயைப் போல் கோபங்கொண்டு, அப்போது தன் பக்கமிருந்த ஏனைய அமைச்சர்களை நோக்கி, "நம்முடைய பொருளை யெல்லாம் கொண்டுபோய் யாசகர்களுக்குக் கொடுத்துவிட்டுக் காட்டிலுள்ள நரிகளையெல்லாம் பரிகளாக்கிக் கொண்டுவந்து, நம்மை ஏமாற்றிய இவனுடைய சாமர்த்தியத்தையும் நெஞ்சத் துணிவையும் கவனித்தீர்களா ? இவனுடைய துரோக சிந்தனையை நோக்கினீர்களா ? ஆகா! என்ன கொடுமை இது ?" என்று கூறித் தலையை அசைத்து வாதவூரரைப் பார்த்து, "ஓ எங்கே கற்றாய் இந்த வித்தைகளையெல்லாம் ? இந்த மோச நினைப்பேன் உனக்கு ?" என்றதட்டி அப்பால், "தன் கடமையிலிருந்து தவறியவர்களுக்குத் தண்டனை விதிக்க வேண்டியது அரசர்களுக்கு அடுத்த நீதியானாலும், வேதவிற்பந்நராகிய அந்தணர்க்கும் தவமதிச் செல்வர்க்கும் மாதர்களுக்கும் விருத்தர்களுக்கும் பாலர்களுக்கும் துன்பம் விளைவிப்பது நம்போன்றவர்களுக்கு இயற்கையல்ல. ஆகையினால், இவனை நம்முடைய கண்

முன்னே வைக்காமல் விரைவிலே கொண்டுபோய், ஒரு வெளி யில் வட்டக்கோடு ஒன்று கிழித்து அதனுள் நல்ல கடுமையான வெயில் வேளையில் நிறுத்திப் பொருளை வாங்குங்கள்'' என்று மறுபடியும் தண்டற்காரர்களுக்கு ஆக்ஞையிட்டான்.

தண்டற்காரர் உடனே வாதவூரரைப் பற்றி அழைத்துக் கொண்டுபோய்ச் சிறைச்சாலையிலே வைத்திருந்து, பொழுது விடிந்ததும் நல்ல வெயில் வந்த பிறகு அரசனுக்ஞைப்படி அவரை வெயிலில் நிறுத்தி வைத்தார்கள்.

இன்பத்திலும் துன்பத்திலும் இறைவனடி மறவாத வாத வூரர், சிவபெருமானை நினைந்துருகி,

"தொல்லையோ ரிருவர் தேடுஞ் சோதியே யாது செய்வேன்
றில்லையோர் பரவ நின்ற தெய்வமே யாது செய்வேன்
இல்லையோ கருணை நின்பா லின்றெனை யடிமை கொண்டாய்
அல்லையோ தமியே னின்ன லறிதியோ வறிந்தி லாயோ."

"பரித்திர ணரியே யான பான்மைகண் டடியேன் றன்னை
வருத்தின ரிதனை மாற்ற வல்லநீ மாற்றா யென்னிற்
றரித்தனை விடத்தை யென்னுந் தன்மையும் புரங்கண் முன்னாள்
எரித்தது மிலையா மென்றென் றிரங்கின ரெவர்க்கு மிக்கார்."

---

## 4. மண்சுமந்த சருக்கம்

இவ்வாறு திருவாதவூரர் மனமிரங்கி வருந்தவே, சிவபெரு மான் அவருடைய துன்பத்தை நீக்கத் திருவுள்ளங்கொண்டு, கங்கையை அழைத்து, "விரைவிலே நமது அன்பன் படும் துய ரத்தை நீக்கக் கடவாய்'' என்றாக்ஞை யிட்டார். கங்காதேவி உடனே பெருக்கெடுத்து வைகை நதியிலே சேர்ந்து, சமுத்தி ரம் போல் பெருகி ஜலப்பிரவாகமாய் எங்கும் புரண்டது.

அப்படிப் பெருகி வரும் வைகையானது, வெண்மையான முத்துக்களாகிய பற்களால் நகைத்து, ஜலமாகிய வஸ்திர முடுத்துக் கரங்களாகிய சிவந்த மரங்களை வீசிக்கொண்டு மாந்தளிராகிய பாதங்களால் அலையென்னும் சிலம்புகள் ஒலிக்க நடக்கும் ஒரு கணிகைமாதை ஒத்திருந்தது.

அலையாகிய பெரிய கொம்பினாலே இரண்டு பக்கத்துக் கரைகளையும் குத்தி, மரக்கூட்டங்களை முறித்து, நெல் விளைந்துள்ள கழனிகளையெல்லாம் அழித்து, வாயினாலே நுரைகளைச் சிந்தி, மேலே நுண்ணிய மணலை இறைத்துக்கொண்டு வண்டுகள் வரிசையாக மொய்க்க வருதலால் அந்த வைகை, மதங்கொண்ட ஒரு யானையைப் போலுமிருந்தது.

சூரிய கிரணங்களால் உண்டான வெப்பம் நீங்கப் பூமிதேவி போர்த்துக்கொண்ட ஒரு வெள்ளை வஸ்திரத்தைப் போல், வைகையாறு விசாலமாகப் பரவித் தென்னையளவு உயரம் பெருகி, மதுரைமா நகரின் மதிற்புறம் வரையிலே போய்த் தாக்கியது. அதனால், கொடிகள் கட்டிய விசாலமான கோபுர வாயிலையுடைய மதில் இடிந்தது. இடிந்ததும் வெள்ளம் ஊரெங்கும் பரவியது.

ஊரை அழிக்கப் பெருகிவரும் ஜலப்ரளயம்போல் வெள்ளம் வருவதைக் கண்ட மதுரைமூதூர் ஜனங்களெல்லோரும் பயந்து, "என்ன செய்வது? எங்கே ஓடுவது? ஈசா! உமையவள் நேசா! சொக்கநாதா!" என்றலறினார்கள். இதையறிந்த பாண்டியன் உடனே சேனையுடன் வைகை நதியின் கரையின் மேல் வந்து நின்று அதனை நோக்கி, "பூலோகத்தாருக்கு உயிராகிய தாயே! கோபந் தணிந்து எம்மை ஆதரித்தல் வேண்டும்" என்று வேண்டிக்கொண்டு, அந்த நதியில் முத்தையும் துகிலையும் அள்ளி யெறிந்தான்.

அந்நதி அவனுடைய பிரார்த்தனைக்கு இரங்காததுபோல் மலைபோன்ற அலைகள் கிளம்ப மேன்மேலும் பெருகியது. அது கண்ட வேந்தன் "என்னே இது" என வியந்து பயந்து,

"ஆதியாங் கடவு ளெந்தை யாலவா யமலன் மங்கை
பாதியான் சிறந்த பூசை பண்டையிற் குறைந்த துண்டோ
நீதியாந் தவத்தின் மிக்கார் நெஞ்சகம் புழுங்க மண்மேற்
றீதியாஞ் செய்த துண்டோ செப்புமி னமைச்சர்" என்றான்.

பேரறிஞராகிய அமைச்சர்கள், அரசனைப் பார்த்து, "வேந்தே, இது மகா சிவபக்த சிரோமணியாகிய வாதவூரரை வருத்தியதால் நேர்ந்த விபத்து என்று அறிகிறோம். அடியார்க்குச் செய்யும் நன்மையையும் தீமையையும் சிவபெருமான் தமக்கே செய்ததாகக் கொள்வர் என்பது பெரியோர்களுடைய துணிபு. அதுபோல், தாம் அடியவராகிய வாதவூரருக்குச் செய்த துன்பத்தை ஈசன் தமக்குச் செய்ததாகவே கொண்டு, இவ்வாறு நதியைப் பெருகவிட்டிருக்கிறார் என்று கருதுகிறோம். ஆகையினால், தாம் வாதவூரரை இப்பொழுதே மனமகிழும்படி செய்வித்தால், இந்த வெள்ளப் பெருக்கு அடங்கிவிடும். இன்றேல் ஊரையே கொண்டுபோய் விடும்" என்றனர்.

அரசன் இதைக் கேட்டதும் மகிழ்ந்து, அவர்களை அருளோடு பார்த்து, "நான் எதை எண்ணினேனோ அதையே நீங்களும் புகன்றீர்கள். ஆதலின், இது மகானை வருத்தியதால் வந்த விபத்தென்பதில் ஐயமில்லை" என்று கூறி, உடனே வாதவூரரைத் தன்முன் வரவழைத்து, அன்போடு பார்த்து மரியாதையுடன் வரவேற்று, "ஐயா, சிவனடியாரிடம் நீர் கொடுத்த பொருள் நம்முடையதேயானால் அந்தத் தருமத்தின் புண்ணியம் பிறருக்குப் போகுமோ? இந்த நன்மை செய்த உம்மை நான்

வருத்தியது என்னுடைய அறியாமை யென்பதை இப்போது நன்குணர்ந்தேன்; குற்றத்தை நம்மதாகக் கொண்டேன். என்னை மன்னித்து, இந்த நதி, இனியும் மேலே பெருகி வராமல் தடுத்து, நீரே ஊரைக் காப்பாற்ற வேண்டும்'' என்று வேண்டினான்.

இச்சமயம் பாண்டியன் பகர்ந்த அன்புரையைக் கேட்ட வாதவூரர், அவனிடம் விருப்பமுங் கொள்ளவில்லை. முன்பு அவன் இவர் மீது சினங்கொண்டு தண்டித்தபோது அவனிடம் வெறுப்புங் கொள்ளவில்லை. எல்லாம் இறைவன் செயலென் றெண்ணி யிருந்தாராதலால், இப்பொழுது அரசன் இவ்வாறு பிரார்த்திப்பதையும் ஈசன் திருவுளமென்று கருதி, அந்தப் பரம்பொருளைத் தியானித்து வேந்தனை நோக்கி, "நல்லது, கட்டளைப்படி நடக்கச் சித்தம்'' என்று கூறினர். அப்பால் அவர் தூதர்களை வரவழைத்து, "தூதர்களே! மண் வெட்டிக் கொட்டி இந்த வைகையின் கரையை அடைக்க இந்த ஊரிலுள்ளார் அனைவரும் இப்பொழுதே இங்குவந்து சேரும்படி பறையறைவித்துத் தெரி வியுங்கள்'' என்று கட்டளையிட் டனுப்பினர்.

தூதர்கள் உடனே சென்று வாதவூரரின் கட்டளைப்படி வள்ளுவர்களை ஏவி, வீதி தவருமல் பறையறையும்படி செய் வித்தனர். உடனே மதுரையிலுள்ள மாந்தரனைவரும் மண் வெட்டியும் கூடையும் எடுத்துக்கொண்டு வைகை நதிக்கரைக்கு வந்து சேர்ந்தார்கள்.

அப்பால் வாதவூரர் அவர்களனைவரையும் அன்போடு பார்த்து; "உங்களொவ்வொருவருக்கும் இந்த நதியின் கரை யில் ஒவ்வொரு பாகம் அளந்து கொடுக்கப்படும். அவரவ ருடைய பாகத்தை அவரவர் மண்ணை வெட்டிக் கொட்டி அடைத்து ஊருக்குச் சேதம் வராமல் காப்பாற்றவேண்டும்'' என்ருர்.

ஜனங்கள் வாதவூராருடைய ஆக்ஞையைப் பெரு மகிழ்ச்சியோடும் வந்தனத்தோடும் ஏற்றுக்கொண்டனர். தூதர்கள் அவர்கள் ஒவ்வொருவருக்கும் கரையை அளந்து கொடுத்தார்கள். பின்பு அவர்கள் பெரிய ஆரவாரம் செய்துகொண்டு கரையை அடைக்கத் தொடங்கினர்.

பிரவாகத்தினலுண்டாகும் அலையானது மூங்கிலிலே பிறந்த முத்துக்களையும், யானைக்கொம்பிலே பிறந்த முத்துக்களையும், சங்கிலே பிறந்த முத்துக்களையும் கரும்பிலே பிறந்த முத்துக்களையும், மலைமலையாகக் கொண்டுவந்து கரையோரமாகக் குவித்தது. அவைகளை ஜனங்கள் அப்படி அப்படியே திரட்டிக் கரையிலே பதியும்படி செய்து. கரையை வலுப்படுத்தினார்கள்; குதிரைப்பாய்ச்சலாக மரங்களை நிறுத்தியும் வைக்கோற் பிரிகளைக் கொண்டுவந்து போட்டு மிதித்தும் அணையைக் கட்டினார்கள்.

இவ்வாறுக யாவரும் அணைகட்டி வருகையில், ஒரு பங்கு மாத்திரம் அடைப்பவ ரில்லாமல் சும்மா விடப்பட்டிருந்தது. அவ்வழியே வெள்ளம் பெருகிக் கரையை உடைக்கத் தொடங்கியபடியால் அரசனுடைய ஏவலாளர், "இது யாருடைய பங்கு?" என விசாரித்தனர். அவ்வூரில் பிட்டு சுட்டு விற்கும் ஒரு கிழவியின் பங்கெனத் தெரிந்து, அவர்கள் அக்கிழவியினிடம் போய், "நீ யேன் உன் பங்கை அடைக்கவில்லை?" என்று அதட்டினர்.

கிழவி, "நான் தள்ளாத கிழவியாகையினால், யாரையேனும் ஒரு கூலியாளை விட்டு என்பங்கை அடைத்து விடலாமென்று பார்க்கிறேன், ஆனால் கூலியாள் கிடைக்கவில்லை. கூலிக்காக என்றால் ஒரு காசும் கொடுக்க இயலாது. நான் சுடும் பிட்டிலே கொஞ்சம் தருவேன், பிட்டினைக் கூலிகொண்டு அடைப்பவர்

ஒருவரையும் காணேமே? என்ன செய்வேன்'' என்று அழுதாள். தூதர்கள், "நீ என்ன செய்வாயோ எங்களுக்குத் தெரியாது. எப்படியாவது உன் பங்கை நீ அடைத்தே தீரவேண்டும்" என்றார்கள்.

கிழவி பிட்டு சுட்டு விற்கும் பரம ஏழையேயானாலும் சிவபெருமானிடம் அன்புடையவள் ; சிறந்த தவமதி யுடைய உத்தமி. ஆகையினால் அவள் சிவபெருமானை எண்ணி, "அரவாபரணனே, மங்கை பங்காளனே, அடியவர்கள் நேயனே! அநாதை ரக்ஷகனே! உன்னுடைய கிருபா கடாட்சத்தினால் பிட்டு விற்று ஜீவனம் செய்யும் எனக்கு இப்படிப்பட்ட துக்கமுண்டாகலாமா? என்னால் பொறுக்க முடியுமோ இதை? உன்னை யன்றி வேறு துணையுண்டோ எனக்கு? இப்படிப்பட்டதில் என்னைக் கைவிடலாமோ நீ?

" யாருடனு மினிப்புகல்வே னெனையுடையாய் வைகையினன்
நீருடையா தடைக்கும்வகை நீசிறிதின் றருளாயேற்
சீருடையா யுனக்கடிமை செய்யுமவர்க் கெளியையெனும்
பேருடையா யெனப்பலரும் பேசுமொழி பழுதாமே."

" தாயுமிலை தந்தையிலை தமருமிலை தமியேனைப்
பேயினுட னின்றாலும் பிரித்தறிய வொண்ணாது
தீயதென திலம்பாடென் சிந்தையில்வெந் துயர்தீர
நீயருளா தொழியினுயிர் நீப்பேன்மற் றென்செய்கேன்."

இவ்வாறு கிழவி துதிக்கவே, சிவபெருமான் அவள் மீது இரக்கங்கொண்டு இடையில் கிழிந்துபோன கந்தலும் தலையில் ஒரு கூடையும் தோளில் ஒரு மண்வெட்டியு முடைய ஒரு கூலியாளாக அந்தக் கிழவிமுன் போய் நின்று, " என்னை யாரேனும் கூலியாளாகக் கொள்வா ருண்டோ ?'' என்று கேட்டார்.

கிழவி அதைக் கேட்டதும் மகிழ்ந்து, "அப்பா எனக்கோர் ஆள் வேண்டும். வா" என்று அழைத்தாள்.

கூலியாள் : "அம்மே, முன்னே கூலி கொடுப்பாயே யானால் வருவேன் நான்" என்றான்.

கிழவி : "இப்பொழுது தேவாமிர்தத்துக்கு ஒப்பான பிட்டு தருகிறேன். மாலையில் பிட்டு விற்றபணம் கையிலிருக்கும். அப்போது உன் கூலியைத் தருகிறேன்" என்றாள்.

கூலியாள்: "அம்மா, மெத்தவும் பசியுடையவனா யிருக்கிறேன். இனிய பிட்டு தருவாயாயின் தின்று பசியாறி உன் பங்கை அடைப்பேன்" என்றான்.

கிழவி உடனே "இதோ தருகிறேன்" என்று கூறிப் பிட்டைக் கை நிறைய எடுத்துக் கொடுத்தாள். கூலியாள் அதனை வாங்கி யுண்டு, பின் "இன்னுங் கொஞ்சம் பிட்டு கொடு" என்று துணியை ஏந்தி அதில் நிறைய வாங்கித் தின்று, கரையை அடைக்கப் போய், "நான் பிட்டுவாணி யம்மையின் கூலியாக வந்தவன். அவள் அடைக்க வேண்டிய பங்கைக் காட்டுங்கள்" என்று சேவகர்களைக் கேட்டான். சேவகன் கிழவி அடைக்க வேண்டிய இடத்தைக் காட்டினான். சொக்கநாயகராகிய கூலியாள், "இதோ அடைக்கிறேன்" என்று கூறி,

"பேர்ப்பர்மண் கூடை பெய்வர் பிறைமுடி மேற்சும் மாடு
சேர்ப்பர்பின் சுமந்து சென்றச் செய்கரை சிந்தி மீள்வர்
வேர்ப்பர்மெய் யிளைப்பார் போல மென்றுபிட் டிரத நாவிற்
பார்ப்பரவ் வன்னை தன்மேற் பரிந்தருட் பார்வை செய்வர்."

பிட்டுநன் றென்று கூறிப் பிறைமுடி யசைப்பர் வேடன்
இட்டமென் றசையிற் சால வீசனுக் காமி தென்பர்
கொட்டுடன் கவித்த கூடை கொண்டுதின் றூடல் செய்வர்
வெட்டிமண் குவிப்ப ரோடி விரைந்தடிப் பாய்ந்து மீள்வர்."

சிவபெருமான் இப்படி விளையாடவே, கிழவி, "அந்தோ! என்ன இவன் இப்படிக் கூத்தாடுகிறான். ஏவலாளர் கண்டால் இவனைத் தண்டிப்பார்களே" என்றெண்ணி, "ஈசா இதற்கென் செய்வேன்?" என்று மனங்கலங்கினாள்.

கிழவி மனங்கலங்குவதை யறிந்த ஈசன், "தாயே, கலங்காதே! கவலைப்படாதே! விரைவில் கரையை அடைக்கிறேன். சிந்தியாமல் நீ வீட்டிற்குப் போ" என்றார். கிழவி "எப்படியாவது சீக்கிரமாக வேலையை முடித்துவிட்டு வா. உன் கூலியை உனக்குத் தருகிறேன்" என்று சொல்லி வீட்டிற்குப் போய்விட்டாள்.

அப்பால் சிவபெருமான், கொஞ்சம் மண்ணெடுத்துக் கொட்டிக் கரையை அடைத்துவிட்டு, ஒரு பக்கம் போய்க் கூடையைத் தலைக்குயரமாக வைத்துக்கொண்டு வேலை செய்து களைத்தவரைப்போல் படுத்துக்கொண்டார்.

இச்சமயத்தில் வாதவூரர் கையிலே ஒரு பிரம்பு வைத்துக் கொண்டு ஏவலாளரைப் பார்த்து, "நீங்கள் கரை நெடுகலும் போய், ஒவ்வொருவரும் அவரவர் பங்கைச் சரிவர அடைத்திருக்கிறார்களா என்று பார்த்து வாருங்கள்" என்றனுப்பிட்டார். உடனே அவர்கள் கரை நெடுகலும் போய்ப் பார்த்து ஒவ்வொருவரும் அவரவர் பங்கை நன்றாய் அடைத்திருப்பது கண்டு மகிழ்ந்தார்கள். பிட்டு வாணிச்சி பங்கு மாத்திம் மற்ற இடங்களுக்குச் சற்றுத் தாழ்ந்திருந்தது. அதைக் கண்டதும் ஏவலாளரில் தலைவனாக வந்தவன், "இந்தப் பங்கை அடைத்தவர் யாவர்?" என, அங்கிருந்தார் "பிட்டு வாணிச்சிக்குக் கூலியாளாக ஒருவன் வந்தான். அவன் பெரிய பைத்தியம் போலக் காணப்பட்டான்; மண்ணை வெட்டிக் கூடையிலெடுப்பதும் பின் அயர்ந்தவன்போல் நிற்பதும் அப்பால் கொட்டுவதும் பின்

கக்கடவெனத் தானே நகைப்பதுமா யிருந்தான். ஆகா என்னென்பது அவன் செய்த செய்கைகளே.

"பாடுவ னுடல் செய்வன் பையவோர் கூடை மண்ணை
நீடுதிண் கரையி லேறச் சொரிகுவ னெடிது நிற்பன்
ஓடுவ னோடி மீள்வ னொருகைமண் கரையி லேறப்
போடுவன் போக வென்னில் வருவன்வா வென்னிற் போவன்.

பிட்டினை நுகர்வ னையா பெரிதுநன் றென்று செங்கை
கொட்டுவன் செய்கை காணி லரசிளங் குமர னொப்பான்
நெட்டலர்க் கொன்றை நீழ னெடுந்துயில் கொள்கின் றுனங்
கட்டுரை சிறிதுங் கேளா னவன்றனைக் காண்மி னென்றார்."

இவ்வாறு அங்கிருந்தோர் கூறவே, தலைமைத் தூதன் தன்னொடு வந்த ஏவலாளர் சிலரைப் பார்த்து "அந்தப் போக்கிலியை என்முன் கொண்டு வாருங்கள்" என்று கூறி அனுப்பினுன். அவர்கள் புறப்பட்டு அந்த மரத்தினருகிலே செல்லும் தருணத்தில் பகவான் நித்திரை தெளிந்தவர்போல் எழுந்து நாற்புறமும் விழித்துப் பார்த்துக்கொண்டு நின்றார். அப்படி நிற்கும் அவரைக் கண்ட ஏவலாளர், "இவன் உண்மையில் பைத்தியம் தான்" என நினைத்து, அவனை நெருங்கி, "அடே வா எஜமானன் முன். நீ தானே பிட்டு வாணிச்சிக்குக் கூலியாளாக வந்தவன்? ஏன் உன் வேலையை நீ சரியாய்ச் செய்யவில்லை? வா இங்கே" என்றழைத்தார்கள்.

சிவபெருமான், அவர்களோடு செல்லப் பயந்தவர்போல் தயங்கி நின்றார். அவர்கள், "ஏன் தயங்குகிறாய்? வா" என்றதட்டி, அவருடைய கரத்தைப் பற்றி இழுத்துக்கொண்டு போய்த் தங்கள் தலைவன் முன்னே நிறுத்தினார்கள். அவன் தன்முன் மன்மதனைப்போல் நிற்கும் சிவபெருமானைப் பார்த்து

தும், "இவன் யாவனோ தெரியவில்லை? மகா ரூபவானாக விளங்கு கின்றான். இவனைத் தண்டிக்க என் மனம் பிந்துகிறது" என வியந்து, "அடே நீயேன் சரியாய்க் கரையை அடைக்கவில்லை?" என்று கேட்டான்.

பக்திமான்களுக் கன்றி எவர்க்கும் அடங்காத சிவபெரு மான், தூதர் தலைவன் முன், பயத்தினால் அடங்கியவர் போல் நின்று, அவன் கேட்டதற்கு ஒன்றும் பதிற் சொல்லாமல் தலை யைச் சொரிந்து கொண்டு விழித்தார். அப்போது அவர்களில் சிலர்,

" பித்தனோ விவன்றா னென்பா ரல்லது பேய்கோட் பட்ட
மத்தனோ விவன்றா னென்பார் வந்தியை யலைப்பான் வந்த
வெத்தனோ விவன்றா னென்பா ரிந்திர ஜாலங் காட்டும்
சித்தனோ விவன்றா னென்பா ராரென்றுந் தெளியோ மென்பார்.

பாடல் விஞ்சையனோ வென்பார் பண்ணினாற் பாணிக் கேற
வாடல் விஞ்சையனோ வென்பா ரரும்பெறற் செல்வத் தாழ்ந்து
வாடிய மகனோ வென்பா ரிசைபட வாழ்ந்து கெட்ட
வேடவிழ் தாரி னருள் யார்மக னிவன்கொ லென்பார்.

கரும்பனும் விரும்ப நின்ற கட்டழ குடைய னென்பா
ரரும்பெற விவன்றான் கூலிக் காட்செய்த தெவனோ வென்பா
ரிரும்பெருங் குரவ ரற்ற தமியனோ வென்பார். வேலை
புரிந்தவ னல்ல னென்பா ரதுமேனி புகலு மென்பார்."

இவ்வாறு அவர்கள் வியந்து பேசவே, தூதர் தலைவன் "இவனை நாம் ஒன்றும் செய்வதற் கில்லை. அமைச்சர் முன்னே கொண்டுபோய் இவனுடைய நடத்தையைக் கூறுவோம். அவர் பார்த்து இவனுக்குத் தண்டனை விதிக்கட்டும்" எனக் கூறி, எல் லாம் வல்ல இறைவனை வாதவூரர்முன் கொண்டுபோனான்.

இச்சமயத்தில் அரிமர்த்தன பாண்டியனும் வாதவூரரிடம்

வந்து கரை சரியாய் அடைபட்டதா என விசாரித்துக்கொண்டிருந்தான். கூலியாளாக வந்த சிவபெருமானை அழைத்துச் சென்ற தூதர் தலைவன் அவர்களிருவரையும் வணங்கி, பரம பித்தன் போல் நின்ற பகவானை அவர்கள் முன்னே நெட்டித் தள்ளி நிற்கவைத்து, "இவன் பிட்டு வாணிச்சிக்குக் கூலியாளாக வந்து கரையை யடைக்க உடன்பட்டான். அப்படி வந்த இவன் சரியாய் வேலை செய்யவில்லை. கூலியை மாத்திரம் அவளிடமிருந்து முன்பே வாங்கிக்கொண்டானும். அன்றியும் இவன் வேலை செய்யும்போது, செல்வப் புத்திரர்களைப்போல் களிப்பதும் ஆடுவதும் பாடுவதுமாயிருந்து காலம் போக்கினனும். இவனைப் பார்த்தால், நன்ருய் வாழ்ந்துவந்து இளைத்தவருடைய குடும்பத்தைச் சார்ந்தவனைப்போல் காணப்பட்டமையால் தண்டிக்க மனமில்லாமல் சமுகத்துக்குக் கொண்டு வந்தோம்" என்ருன்.

பாண்டியன், "அப்படியா! இவன் யாராயிருந்தால் நமக்கென்ன? செய்வேனென ஒப்புக்கொண்ட வேலையைச் செய்யாமல் வீண்காலம் போக்கின னல்லவா?" எனச் சினங்கொண்டு வாதவூரரிடமிருந்த பிரம்பை வாங்கி, பல்லாயிரங்கோடி அண்டங்களையும் அவற்றிலுள்ள அளவில்லாத உயிர்களையும் தமது திருமேனியாகக் கொண்ட சிவபெருமானுடைய முதுகிலே அடித்தான். அடித்தமாத்திரத்தில் அவர் ஒருவர் கண்ணுக்குந் தெரியாமல் மறைந்து விட்டார். ஆனல் பாண்டியன் அடித்த அந்த அடி,

"தார்மேனின் றிலங்குபுய வழுதி மேலுந்
தன்மனைமங் கையர்மேலு மமைச்சர் மேலும்
ஆர்மேலுஞ் சென்றுபொருஞ் சேனை மேலு
மயன் மேலு மரிமேலு மறவோர் மேலுந்

தேர்மேல்வெம் பகன்மேலு மதியின் மேலுஞ்
சிறந்துளவிந் திரன்மேலுந் தேவர் மேலும்
பார்மேலுங் கடன்மேலு மாங்கண்மேலும்
பட்டதான் மெய்யிலடி பட்ட போதில்"

ஒவ்வொருவர் மேலும் படவே எல்லோரும் "ஆகா இஃது என்ன விந்தை? என்னை யார் அடித்தது? என்னை யார் அடித்தது?" என்று ஒவ்வொருவரும் சொல்லிக்கொண்டு பற்பல வாருகப் பேசத் தொடங்கினுர்கள். அந்த இரைச்சல் யுகமுடிவு காலத்திலே சப்திக்கின்ற சப்த சமுத்திரங்களின் முழக்கம்போ லிருந்தது.

இந்த அடி வாதவூரரின்மேல் மட்டும் படாமலிருக்குமா? அவர் மேலும் பட்டது. கடவுள் இல்லாத இடமெது? எல்லாம் அவர் மயமே யன்றோ? வாதவூரர்மேல் அடிபட்டதும் அவர் அயர்வடைந்து, "நான் உய்யும்படி என்னை அடிமை கொண்டருள மனமிரங்கி, சொக்கநாயகரே இங்கு ஒருவர்க்குக் கூலியாளாக வந்தார்" என அறிந்து வருத்தமுற்று உடனே, ஜகதீசன் மண்சுமந்து கொட்டிய இடத்திற்குப் போய்ப் பார்த்து "அடியேன் கொடிய நரகத்திலே விழாமற் காத்தருள எழுந்தருளிய ஐயனே, நீ எங்கே இருக்கின்றுய்? நீ எங்கே இருக்கின்றுய்?" என்று கூவிக்கொண்டு, சிரசின் மேலே காங்கூப்பித் தொழுத வண்ணம் கண்களிலிருந்து நீர் பெருக மனமுருகியவ ராய் அந்த இடத்திலே விழுந்து புரண்டு,

"நீறுபடும் பொன்மேனி நின்மலனே நெடுங்கங்கை
ஆறுபடுஞ் சடைமுடியா யடியவர்கட் கெளியானே
மாறுபடும் புரமெரித்தாய் மாறுபடும் போதுடலிற்
கூறுபடுஞ் சிவஞானக் கொம்பினுளங் குழையாதோ.

" பிரமனுடன் றிருமாலும் பிறப்பகலப் பலகாலும்
பரவியிடு நறுமலரோ பத்தரிடும் பச்சிலையோ
புரிதருசெஞ் சடையோநற் புதுமதியோ வாயிரவாய்
வரியரவின் பலபடமோ மண்சுமந்த சும்மாடு "

என்று கதறி எழுந்து நின்று, " ஆகா என்ன சொல்வேன் நான்! இந்த ஆற்றங்கரையை வெள்ளியம்பலத்துக்குச் சமான மாகவும் இந்த ஆற்றில் எழும் அலையின் ஓசையைத் தேவ துந்துபியாகவும் இங்கிருந்தவர்களை பதஞ்சலி வியாக்ரபாதர்களா கவும் கொண்டு திருவிளையாடல் செய்தார் போலிருக்கிறது சிவ பெருமான்! யார் அறிவார் அவர் மகிமையை?

" மீனேறுங் கொடித்தென்னன் விழிக்கேற விரைதூக்கந்
தானேறு வதுகண்டு தருங்கலைபொற் செண்டேறத்
தேனேறு மலர்க்கொன்றைத் திருமுடிமேன் மண்ணேற
யானேறுஞ் சிவபதமு மெனக்கேற வின்றோ "

என இரங்கிப் பின்னும், " என் ஐயனே, மூவர்க்கும் முதல் வனே, பிட்டு வாணிச்சி யம்மைக்குக் கூலியாளாய் அமைந்து, வைகை நதியை அடைத்து அரசன் கைப்பிரம்பினால் அடிபட்டு என்னை உமக்கு அடிமையாக்கிக் கொண்ட உன் கருணையை நான் என்னென்று கூறுவேன்? யாருக்குக் கிடைக்கும் இந்த பாக்கியம்? என் அப்பனே—

" தாரூருஞ் சடைமுடியாய் தவம்பெரிது முயன்றவர்கள்
நீரூரும் புகழ்வைகை நெடுங்கரைமே னின்றாரோ
சீரூருங் கனகமுடித் தென்னவனோ மதுரையெனும்
பேரூரி லிருப்பவரோ பிட்டமுதிட் டருள்வாளோ."

ஆகா—என்ன ஆச்சரியமிது?—

" பொன்மௌலித் தலைமீது புண்ணியர்மண் சுமந்தேறுங்
கொன்மலியுங் கோலறையுங் குளிர்வைகைப் போராறுங்

கன்மமெனும் பகைநீங்கக் கண்ணுதல்வெம் பரியேறுந்
தென்மதுரை மூதூரு மல்லவோ சிவலோகம்."

வாதவூரர் இவ்வாறு பன்னிப்பன்னிப் பலவாறு இறைவனைப் புகழ்ந்து மனமுருகியவராய் நிற்கையில் ஆற்றின் வெள்ளமும் வடிந்தது.

இப்பொழுது பாண்டியன், இவையாவும் சிவபெருமானுடைய செயலெனத் தெளிந்தபடியால், திருவாதவூரரிடம் வந்து அவரை வணங்கி, " அந்தணர் குலத்திலே அவதரித்து அடியேனிடம் அமைச்சரா யமர்ந்து, சகலலோக சரண்யனாகிய சிவபெருமானை வெற்றி பொருந்திய வெள்ளைக் குதிரையின்மேல் எனக்குக் காட்டி, என்னுடைய பாபத்தை யொழித்துப் புனிதனாக்கிய வாதவூரரே! உமது பெருமையை யறியாதவனாகிய நான், தமக்குப் பெரும் பிழைகள் செய்தேன்; அவற்றையெல்லாம் பொறுத்தருளல் வேண்டும். அந்தோ, என்னுடைய பிறவிப்பிணி தீரத் தம் திருமேனி காட்டியதை யுணராமல் குதிரையேறி வந்த என் தந்தைக்கு அடிக்காடை கொடுத்தேனே! என் ஐயனே! என்ன பிழை செய்தேன் நான்? ஆ்கா! சிவபெருமானைக் குதிரைக் காரராகக் காட்டிய உம்மை, மெய்ப்பொருளென் றறியாமல், தீவினைக்குக் காரணமாகிய பொருளைக் கொடுக்கும்படி எவ்வளவோ கொடுமைகள் செய்தே னல்லவா? அவைகளை எண்ணினால் என் நெஞ்சம் நடுங்குகிறது. என்னுடைய எல்லாப் பிழைகளையும் பொறுத்து, என்னை உமது பணிவிடைக் காளாக்கிக் கொண்டு இவ்வுலகத்தை நீரே யாளவேண்டும். அரவாபரணராகிய சொக்கநாதர், பரியின்மே லேறிவந்து காட்சி தந்ததும் ஜடா மகுடத்திலே மண்சுமந்ததும் எனக்கு என்றும் அழியாத கீர்த்தியைத் தருவனவாகும். ஆகையினால் அவைகளே எனக்குப் போதுமானவை" என்றான்.

வாதவூரர், பாண்டிய ராஜனைக் கருணையோடு பார்த்து, "என்னை நீர் இனித் திருப்பெருந்துறைக்கு அனுப்புதல் வேண்டும். அஃது ஒன்றே நீர் எனக்கு உலக ஆட்சியைத் தந்ததாகும்" என்று கூறினர்.

என்ன செய்வான் பாண்டியன்! வேறு பேச வழியில்லாதவனாய், "சிவபெருமானுடைய அடியவர்க்கு இராஜ்ய ஸம்பத்திலே ஆசை யுண்டாகுமா? உண்டாகா தன்றோ? நான் அறியாதது அறியாமையையே யாகும்" எனச் சொல்லி அவரைப் பணிந்து, "ஐயா, தமக்கு விருப்பமான தெதுவோ அதையே செய்யலாம்" என்று கூறி மீண்டும் பணிந்து எழுந்து வலம் வந்து விடை கொண்டு அவரைப் பிரிய மனமில்லாமல் பிரிந்து அரண்மனை சென்றான்.

அப்பால் வாதவூரர், இராஜங்கத்திற்குரிய தமது உடைகளைக் களைந்துவிட்டுத் துறவிக்குரிய வேஷங்கொண்டு, சொக்கநாதருடைய ஆலயஞ் சென்று, சுவாமியையும் அம்மையாரையும் பணிந்து விடைகொண்டு புறப்பட்டு மதுரையம்பதியைக் கடந்து, இளங்கன்றை நாடி ஓடும் பசுவைப் போலவும் மடை யுடைந்து பெருகியோடும் தண்ணீர்போலவும் வேகமாக நடந்து, திருப்பெருந்துறையை அடைந்து, அங்கே முன்பு தாம் உபதேசம் பெற்ற சோலைக்குள்ளே போய்த் தம் குருநாதனைக் கண்டு அவர் திருவடியிலே விழுந்து பணிந்தார்; அப்பால் எழுந்து சிரசிலே கரங்கூப்பி நின்று,

"அண்டருக் கரியாய் போற்றி யடியவர்க் கெளியாய் போற்றி
வண்டமிழ்ப் பாண்டி நாடு வாழமண் சுமந்தாய் போற்றி
கண்டனக் கினிய மேனி காட்டியென் சென்னி மீது
முண்டகத் திருத்தாள் வைத்த முத்தனே போற்றி போற்றி"

என்று துதித்தார்.

இவ்வாறு போற்றிய வாதவூரருடைய சிரசிலே, ஆசிரியராக வந்த சிவபெருமான் தமது திருக்கரத்தை வைத்து இனிய சொல் சொல்லி விபூதி யளித்துக் கிருபாகடாக்ஷம் செய்தருளினர்; அப்பால் அவர் வாதவூரரைத் தம் அடியார்களுள் ஒருவராய் இருக்கப் பணித்து "நாம் இங்கே வந்த காரியம் முடிந்தது; கயிலாயத்தி லிருப்பவர்கள் எமது திருவுருவ தரிசனஞ் செய்ய நினைவு கொண்டார்கள். ஆகையினல் நாம் இனி அங்கே போக வேண்டும். நீங்கள் இங்கே வாழ்ந்துகொண் டிருங்கள்" என்றார்.

அடியார் எல்லோரும் சுவாமியை வணங்கித் "தங்களைப் பிரிந்து நாங்கள் வாழமாட்டோம்" என்று கூறி வருந்தினர். சிவபெருமான், "வருந்தாதீர்கள்; இந்தக் குருந்த மரத்தினடியில் ஒரு தெய்வபீடத்தையும் அதன் மேல் நம்முடைய திருவடியையும் அமைத்துத் தினந்தோறும் அவைகளைப் பூசித்துக்கொண் டிருங்கள். அப்பால் ஒருநாள் இந்தப் பொய்கையில் அக்னி மூண்டு எரியும். அந்தத் தழலில் நீங்கள் எல்லோரும் வீழ்வீர்களானல் எம்மிடம் வந்து சேர்வீர்கள்" என்று திருவாய் மலர்ந்தருளி, குருநாதர் எழுந்து கயிலாசத்திற்குப் புறப்பட்டார். அன்பர்கள் யாவரும் அவருடன் தொடரவே, சிவபெருமான் அவர்களை நோக்கி "நீங்கள் எல்லோரும் நில்லுங்கள்" என்று கூறிச் சென்றார்.

அடியார்க ளனைவரும் நின்று விட்டார்கள். ஆனல் வாதவூரர் மாத்திரம் தாயைத் தொடர்ந்துசெல்லும் கன்றைப்போல் அவர்பின் செல்லலாயினர். அதுகண்ட சிவபெருமான் சிறிது தூரம் போனதும் அங்கிருந்த ஒரு கொன்றை மரத்தடியில் அமர்ந்தார். மாணிக்கவாசகர் விரைந்துபோய் அவருடைய திருவடியிலே பணிந்து கண்களிலிருந்து நீர்பெருக நின்றார். சிவபெருமான் அவரைப் பார்த்து, "இங்குவரும் நம்மடியவரு

டைய தீவினையை நீக்கியாளும் பொருட்டு இந்தத் திவ்விய க்ஷேத்திரத்தின் குருந்த மரத்தடியிலே நாம் என்றும் எழுந்தருளியிருப்போம். நீ எமதடியாருடன் இங்கேயே இரு. நாம் முன் கூறியபடி அவர்கள் தடாகத்திலே எழும் தீயில் விழும்போது நீ மட்டும் விழாமல் இங்கிருந்து புறப்பட்டு உத்தரகோசமங்கை என்னும் ஊருக்குப் போ; அங்கே அஷ்டமாசித்திகளையும் அடைவாய். பின்னர் நீ எந்த ஸ்தலத்துக்குச் சென்று எம்மை வணங்கினாலும் அங்கெல்லாம் எமது திருவுருவங் கண்டு ஆநந்தமடைவாய். ஆதலால் நீ திருக்கழுக்குன்றம் என்னும் நமது ஸ்தலத்துக்குப்போய் அங்கே எம்மை வணங்கித் துதித்து மீண்டும் சிதம்பரம் என்னும் திவ்விய ஸ்தலத்துக்குப் போ. அங்கே புத்தர்கள் உன்னோடு வாதிடுவார்கள். வாதத்தில் நீ அவர்களை வெல்வாய். அதன் பின் நீ எமது சாயுஜ்ய பதவியை அடைவாய்''—என்று திருவாய் மலர்ந்தருளினர்.

---

## 5. திருவம்பலச் சருக்கம்

மாணிக்கவாசகர் அவ்வாறு அருளிச்செய்த பகவானை நோக்கி, "எந்தையே, திருப்பெருந்துறையி லல்லாமல் சிதம்பரத்திலே பரமுக்தி கிட்டும் என்று கூறியதேன்?'' என்று வினவினர். சிவபெருமான், "சிதம்பரம், நாமுவந்து நர்த்தனம் செய்யும் அம்பலமாகையால், உலகத்திலே வசிப்பவர்களில் எவர் வந்து அதைத் தரிசனம் செய்தாலும் அவர்க்கு முத்தியை யளிக்கும் தெய்வஸ்தலம் அதுவேயாம். பிரமாதி தேவரும் பதஞ்சலி வியாக்ரபாத முனிவரும் தில்லை மூவாயிரவர் முதலியவர்களும் போற்றும் மகிமையை யுடையது தில்லை யம்பலம். ஆதலின் நாம் கூறியபடி செய்'' எனத் தெரிவித்து மறைந்தார்.

சிவபெருமான் மறையவே மாணிக்கவாசகர், விசன மடைந்து தொழுது சிரமேற் கரங்கூப்பி நின்று அவரைத் தியானித்தபடியே திரும்பி அடியார்க ளிருக்குமிடம் போய்ச் சேர்ந்தார். அப்பால், அவர்கள் யாவரும் குருந்தமர நிழலில் தெய்வ பீடமமைத்து, அதில் ஈசன் திருவடியை வகுத்துப் பூசித்து வருவாராயினர்.

இவ்வா றிருக்கையில் மாணிக்கவாசகர், அன்பில்லாதவர் களானலும் தம்மைப் பாடுகின்றவர்களுக்குச்சிவ பெருமான் இரங்கியருள்வார் என்று எண்ணி "நமச்சிவாய வாழ்க! நாதன்தாள் வாழ்க" என்று தொடங்கித் திருவாசகம் பாடியருளினர். அதில், மன வாக்குக் கெட்டாத ஈசன், தன் தரிசனம் தந்து கிருபை செய்தருளும் அற்புதம் அறியேன் என்றும், அதிசயம் கண்டேன் என்றும், என் மனத்தை உருக்கிய என் ஐயனே என்றும், உன்னைக் காண ஆசைப்பட்டேன் என்றும், உன்னடைக்கலம் நானென்றும் பாடி யருளினர்; பின்னும் உய்கிலேன்! வாழேன்! செத்திலேன்! என்றும், பொய்யர்க்குப் பொய்யனே, உன் பாதத்தை அடைவது எப்பொழுது என்றும், ஆதரித் தழைக்கில் அதெந்துவே என்றும், அருளாய் என்றும் பாடல்கள் பல அருளினர்; அன்றியும், திருவார்த்தையும் எண்ணப் பதிகமும் இருபத்தெட்டு வெண்பாவும், திருப்பள்ளி யெழுச்சி, திருவேசறவு, ஆநந்த மாலை, உயிருண்ணிப் பத்து, பிரார்த்தனைப் பத்து, திருப்பாண்டி விருத்தம் முதலியனவும் கூறியருளினர்.

இவ்வாறு மாணிக்கவாசகர் திருவாசகம் பாடியருளுவதற்கு முன், கைலையிலிருந்து தம்முடன் வந்த அடியவர்களுக்குச் சிவபெருமான் தெரிவித்துச் சென்றபடி, பொய்கையில் நெருப்பு எழுந்தது. அந்த நெருப்பில் அங்கிருந்த சிவனடியா

ரனைவரும் பஞ்சாக்ஷர மந்திரம் ஜபித்துக்கொண்டே விழுந்த னர். மாணிக்க வாசகர் மாத்திரம், தமக்கு இறைவனிட்ட கட்டளைப்படி அந்த அழலில் விழாமலிருந்தார். பொய்கையிலே விழுந்த அடியார்களுக்குச் சிவபெருமான் ஆகாயத்தில் விருஷப வாகனத்தின்மீது காட்சி தந்தருளினார். விழுந்த அடியா ரனைவரும் அப்பொழுதே முன்போல் சிவகணங்களாய் மாறிச் சிவபெருமானை வணங்கி நின்றனர். சிவபெருமான் அவர்களைப் பார்த்து, "உத்தமனாகிய வாதவூரனுக்காகவே நாம் உங்களனைவரையும் இவ்வளவுநா ளங்கிருக்கும்படி செய்தோம்; பொய்யாய்த் தோன்றிய உங்கள் மாயாதேகத்தை அக்னியிலே வேகும்படி செய்து மறுபடியும் இந்த தேகத்தைக் கொடுத்தோம்" என்று கூறிக் கணநாதருடன் மறைந்தார்.

அப்பால், மாணிக்கவாசகர் ஒரு கொன்றைமர நிழலிலே இருந்து சிவயோகம் செய்தார். அந்த யோகத்தில், அடியார்கள் அக்னியிலே புகுந்த விதமும், கடவுள் விருஷபவாகனத்தின் மீது வந்து காட்சி தந்த விதமும், இனித் தாம் கனகசபையிலே போய் அடையப் போவதுமாகிய இவைகளை யெல்லாம் அவர் ஏககாலத்திலே கண்டார். கண்டபின், எழுந்து கைகுவித்துக்கொண்டு கண்களில் ஆநந்த பாஷ்பம் பெருக நின்று, "என் தந்தையே, இங்கே வந்து எங்கே மறைந்தாய்?" என மயங்கிப் பொய்கைக் கரைக் கேகி அங்கே நின்று, "என் ஐயன் விருஷப வாகனத்தின் மீது காட்சி தந்த இடம் இது வல்லவா?" என்று கூறி, அந்த இடத்திலே விழுந்து புரண்டு அழுது, ஐயோ எனவொரந்து, "கிருபாநிதியே எங்கே ஒளித்துக் கொண்டீர்?" என்றலறிப் பின் தெளிந்து அங்கிருந்து குருந்த நிழலுக்குப் போய் அங்கே இறைவன் திருவடி தொழுது நின்று, மெய்தானரும்பி என்று தொடங்கித் திருச்சதகம் பாடினார்.

அப்பால், உத்தரகோசமங்கை யென்னும் ஸ்தலத்துக்குப் போகும்படி முன் இறைவன் கூறியருளியது நினைவுக்கு வந்தமையினால், அவர் உடனே அங்கிருந்து புறப்பட்டு உத்தரகோசமங்கைக்குப் போய் ஆலய தரிசனம் செய்தார். தம்மை வந்து அடிமை கொண்ட சிவபெருமானுடைய திருவடிவம் அங்கே காணப்படாமையினால், மயங்கி வெய்துயிர்த்து வீழ்ந்து, விடுதி கோல் என்னையென நீத்தல் விண்ணப்பம்—என்னும் பாடல் பாடினார்; பாடிமுடித்ததும் ஈசன் தம்மை அடிமை கொண்ட போது காட்டிய திருவுருவத்தை அங்கே கண்டு மகிழ்ந்தார்.

அதன் பின் மாணிக்கவாசகர் அந்த ஸ்தலத்திலே சில நாட்க ளிருந்துவிட்டுத் திருவிடைமருதூர் என்னும் திவ்விய ஸ்தலத்துக் கெழுந்தருளினார். அங்கே சுவாமி தரிசனம் செய்து திருப்புலம்பல் பாடித் துதித்து, அப்பால் இறைவன் இயம்பிய பதிகளெல்லாம் சென்று சுவாமியை வணங்கிப் பின் சீர்காழிக் குப்போய் அங்கே இறைவன் சந்நிதியில் வணங்கிநின்று பிடித்த பத்து என்னும் பதிகம் பாடித் துதித்தார். அப்பால் விருத்தாஜலத்துக்குப்போய் இறைவனை வணங்கிப் பின் திருப்பெருந் துறை போய் அதன்பின் திருவெண்ணெய்நல்லூர் சென்றார்; அங்கே ஈசனை வணங்கிப் பின் திருவண்ணாமலையை அடைந் தார்; அங்கே தம்மை அடிமைகொண்ட குருநாதனுடைய திரு வுருவங் கண்டு மகிழ்ந்தார்.

"நெடியவன் கேழ லாகி நீணில மகழ்ந்துங் காணா
அடிகளென் றலைமேல் வைத்த வருட்பெருங் கடலே போற்றி"

என்று போற்றிசெய்து அங்கே சிலநாள் தங்கியிருந்தார்.

அந்த மாதம் மார்கழி மாதமாயிருந்ததால் அங்கிருந்த மாத ரெல்லாம் திருவாதிரைக்கு முன் பத்துத் தினங்களிலும் வீடு கள்தோறும் போய்த் தத்தம் 'தோழிமார்களை அழைத்துக்

கொண்டு விடியற்காலத்தில் குளத்திலே நீராடித் தெய்வம் தொழுதுவந்தனர். அவர்களுடைய செயல்கண்ட மாணிக்கவாசகர், மங்கையர்கள் சொன்னதாகத் திருவெம்பாவை பாடினார்; அப்பால் அம்மங்கையர் அம்மானை பாடி ஆடியதைக் கண்டு, தாமும் அவர்கள் பாடியதாகத் திருவம்மானை பாடியருளினார்.

அதற்கப்பால் மாணிக்கவாசகர் அங்கிருந்து புறப்பட்டுக் காஞ்சிபுரம்போய்ச் சுவாமி தரிசனம் செய்துகொண்டு திருக்கழுக்குன்றம் போனார். அங்கே, ஒவ்வொரு பாடலிலும் கடையடி காட்டினாய் கழுக்குன்றிலே என்று வரும்படி பதிகம் பாடித் துதித்துச் சிலநாள் தங்கியிருந்து அப்பால் சிதம்பரத்துக்குப் புறப்பட்டுப் போனார். அங்கே,

"வேதந்தரு மொலியுந்தொழும் விண்ணோர்தம தொலியுங்
கீதந்தரு மொலியுங்கிளர் முழவங்களி னொலியும்
போதந்தரு சிவஞானிகள் புகலாகம வொலியும்
ஓதுந்தமி ழொலியுங்கட லொலி செய்தன...."

அதைக்கேட்டு மாணிக்கவாசகர் மகிழ்ந்து சிவபெருமானைத் தியானித்தவாறு ஆலயத்துக்குள்ளே போய்ச் சித்சபையைக் கண்டார். அங்கே இறைவன் அவர்க்குக் குருநாதராய்க் காட்சிதந்தார். அதைக்கண்டு, அவர், "மன்னா உயிரன்னாய் மணிமன்று சரண்" எனச் சொல்லிப் பலகால் அன்போடு தொழுது அழுது கீழே விழுந்து பணிந்து எழுந்து "உமாதேவிக்கு நாயகனாகிய சிவபெருமானைத் தில்லையிலே கண்டேன்! கண்டேன்!" எனக் கண்டபத்து மனங்கொள்ள உரைத்தருளினார்.

அப்பால் அவர் ஒரு சித்திரம்போலானார். அவர் கையும் காலும் அசைவற்றிருந்தன; கண்களும் இமைத்தில. அவரைக் கண்ட கோவிற் காவலாளர், "நீர் இங்கே செய்யும் காரியம்

என்ன ? போம் அப்பால்'' என்று அதட்டினர். அவர் ஒன்றுக்கும் பதில் கூறவில்லை. அதுகண்டு காவலாளிகள், 'இவர் பைத்தியம் போலிருக்கிறது' என்றெண்ணித் திகைத்தனர். அச்சமயத்தில் மாணிக்கவாசகர் தமது கரங்களைச் சிரசின்மேலே குவித்துக்கொண்டு சிவசிவபோற்றி என்றார். அதன்பின் காவலாளிகள் மயக்கம் நீங்கி, யாரோ மெய்யன்பரெனக் கண்டு விலகினார்கள்.

மாணிக்கவாசகர் பின் அங்கே மூலஸ்தானக் கடவுளை வணங்கி அப்பால் உமாதேவியாரைத் தொழுது, அதன்பின் அந்தக் கோவிலுக்கு மேற்குப் பக்கத்திலுள்ள திருப்புலீச்சரம் போனார் ; அங்கே சுவாமி தரிசனம் செய்து, பின் தில்லை மூவாயிரவர் வாழ்கின்ற சிதம்பரத்தைச் சூழ்ந்துள்ள திருவீதிக்கு எழுந்தருளினார்.

அங்கே போகும்போது மாணிக்கவாசகர், அமிர்தமயமாகிய திருவாசகம் சொல்லத் தொடங்கி, குலாப்பத்து, கோயில் திருப்பதிகம், கோயின்மூத்த திருப்பதிகம் முதலியன பாடிப் பின் கீர்த்தித் திருவகவல், திருவண்டப்பகுதி, போற்றித் திருவகவல் ஆகிய மூன்று அகவல்களையும் பாடியருளினார். அதன் பின் திருப்பொற் சுண்ணம் பாடி, அப்பால் அங்கிருந்த ஒரு சோலைப்பக்கம் போனார். அங்கே பெண்களெல்லோரும் விளையாடிக் கொண்டிருக்கக் கண்டு, "வீண்பேச்சுப் பேசாமல் எமது கடவுளையே சொல்லுங்கள் நீங்கள்'' என்று அவர்கள் சொல்லியதாக, திருத்தெள்ளேணம், திருவுந்தியார், திருத்தோணேக்கம், திருப்பூவல்லி, திருப்பொன்னூசல் முதலியன பாடியருளினார். அப்பால், ஒரு சிறுபெண் தன் தாயைப் பார்த்துச் சொல்லியதுபோல் அன்னைப்பத்தும், பின் வண்டுகளை நோக்கிக் "கடவுளை நோக்கித் துதி செய்'' எனச் சொல்வது போல

கோத்தும்பி என்னும் பதிகமும் பாடியருளினார். அதற்கப்பால் சோலையிலுள்ள குயிலைப் பார்த்து, "எமது கடவுளைக் கூவி யழை" என்பதாகக் குயில்பத்துப் பாடிப் பின் கிளியைப் பார்த்து, "சந்திரனைத் தரித்த சிவபிரானைச் சொல்லுங்கள்" எனத் திருத்தசாங்கம் பாடியருளினார்.

இவ்வாறு பாடியபின் உறுதிமேலிட்ட மாணிக்கவாசகர், "என்னை யடிமையாகக் கொண்ட கடவுளை யல்லாமல் வேறொரு வரைத் தெய்வமென்பதற்கு அஞ்சுகிறேன்" என அச்சப்பத்து பாடியருளினார்; அதன் பிறகு அந்நகர்ப் புறத்திலே ஒரு பன்னகசாலை யேற்படுத்திக்கொண்டு அதிலே தங்கியிருந்தார். இத்தகைய மகிமைவாய்ந்த மாணிக்கவாசகரைப் பற்றி அந் நகரில் யாவரும் இரவும் பகலும் பேசிப் புகழ்வாராயினர்.

---

## 6. புத்தரை வாதில்வென்ற சருக்கம்

மாணிக்கவாசக சுவாமிகள் இவ்வாறு சிதம்பரத்தில் இருந்து வருகையில், ஒரு தபோதனர் அங்கே வந்து நடனசபேசரைத் தரிசித்துப் பரமானந்த மடைந்து எப்போதும் சிவசிதம் பரம் தில்லையம்பலம் என்று சொல்லிக்கொண்டே ஸ்தலந் தோறும் போய்வரத் தலைப்பட்டார். அப்படி ஸ்தலயாத்திரை செய்யும் அவர், பூமி முழுவதும் சுற்றிப்பார்க்க எண்ணங் கொண்டு ஈழநாட்டிற்குச் சென்றார். அங்கே போனவர் வழக்கம்போல் சிவசிதம்பரம் தில்லையம்பலம் என்று சொல்லிக் கொண்டும் தில்லையம்பலத்திற்கு மேற்பட்ட ஸ்தலமில்லை யென்று பாடிக்கொண்டும் நெடுகலும் சுற்றிப் பார்த்தார்.

அவர் இவ்வாறு சொல்லிக்கொண்டிருப்பதை யறிந்த புத்தர், அந்நாட்டு வேந்தனிடம்போய், "சோழநாட்டிலிருந்து இங்

கொரு பிச்சைக்காரன் வந்திருக்கிறான். அவன் தேக முழுவதும் விபூதியும் உருத்திராக்ஷ மாலையும் பூண்டு, தெருத்தெருவாய்ப் பிச்சை யெடுத்துக்கொண்டு திரிகிறான். அந்த மூடன் சதாகால மும் 'சிவசிதம்பரம் தில்லையம்பலம்' என்று சொல்லிக்கொண்டும் அந்தப் பதியையே மேலான ஸ்தலமென்று பாடிக்கொண்டும் இருக்கிறான். அது நமக்குப் பெருங் குறைவாகத் தெரிகிறது" என்றார்.

அரசன் "அப்படியா!" எனக் கூறி அருகிலிருந்த ஏவ லாளரை யழைத்து "இப்போது நம்மூரிலே வந்து 'சிவசிதம் பரம்' என்று சொல்லிக்கொண்டு யாரோ ஒரு பிச்சைக்காரன் திரிகிறானும். அவனைக் கைப்பிடியாய்ப் பிடித்து நம் முன்னே கொண்டு வாருங்கள்" என்று கட்டளையிட்டான்.

ஏவளாலர் உடனே புறப்பட்டுப்போய் நெடுகலுந் தேடிப் பார்த்து, ஓரிடத்தில் 'சிவசிதம்பரம் தில்லையம்பலம்' என்று சொல்லிக்கொண் டிருந்த தபோதனரைக் கண்டு, "ஐயா, உம்மை எமதரசர் அழைத்துவரச் சொன்னார்; வாரும்" என் றனர். தபோதனர், "பிச்சை எடுத்துண்பதை யன்றி வேறொன் றையும் கருதாத எம்போன்றவர்க ளிடத்தும் அரசனுக்குக் காரியமுண்டோ?" என்று கேட்டார்.

ஏவலாளர், "வேறு பேசாதேயும், அரசன் உம்மை அழைத்துவரச் சொன்னார். அவர் கட்டளையை மறுப்பதற்கு நீர் யார்? வாரும்" என்று கூறி அவரை அழைத்துக் கொண்டுபோய் வேந்தன் முன் நிறுத்தினார்கள்.

தபோதனர் அங்கே போனதும் வழக்கம் போல் "சிவ சிதம்பரம் தில்லையம்பலம்" என்று கூறினார். புத்தர், அரசனை நோக்கிப் "பார்த்தீர்களா இவனுடைய குறும்பை?" எனக் கூறி அரசனுக்குக் கோபத்தை உண்டாக்கினார்.

அரசன் அந்தத் தபோதனரைப் பார்த்து, "நீர் யார்? எந்த ஊர்? இங்கே வந்து ஏன் இப்படிச் 'சிவசிதம்பரம் தில்லையம்பலம்' என்று கூறுகிறீர்?" என்று கேட்டான். தபோதனர் "இந்த ஏழை, சிவபெருமானுடைய அடிமை. இந்த ஏழைக்கு எந்த ஊரும் ஊர்தான். இந்த ஏழை இந்த நாட்டைப் பார்க்க வேண்டும் என்று இங்கே வந்ததேயன்றி வேறொன்று மில்லை. பிரபுவே, எந்த ஸ்தலம் முன்னே தில்லைவனமா யிருந்ததோ அதே மூன்று புவனங்களுக்குள் முன்னுண்டாகிய தெய்வ ஸ்தலம். அதனால், அதனை மூலஸ்தானமென்றும் சொல்லலாம். அது பூமிக்கு நடுவே விளங்கும் சித்சபை. அங்கே, உமாதேவியார் காண சபாநாயகர் நிர்த்தனம் செய்தருளினார். அதனுள் சிவகங்கை என்றோர் தடாகமுண்டு. அந்தத் தடாகத்திலே மூழ்கிய இரண்யவன்மனென்னும் ஒரு வேந்தன், தன்னை நெடுநாட்களாக வருத்திய குட்டநோய் நீங்கித் திவ்விய தேகம் பெற்றான். அந்தத் தடாகத்தில் மூழ்கி, நடராஜரைத் தரிசிப்பவர்கள் மறுபடியும் இந்த உலகத்திலே வந்து பிறவார்கள். பிறவியை நீக்கி ஆத்ம கோடிகளுக்கு நன்மையைச் செய்யும் அநேக சமய தெய்வங்களில், தாமே வல்லவரென்பது விளங்கத் தமது காலில் வீரக் கழலை அணிந்துகொண்டு, அருட் சத்தியாகிய உமாதேவியார் காணச் சிவபெருமான் திருநடனம் செய்கிறார். அந்தச் சிவபெருமானைக் கருதாத மனமும் துதியாத வாக்கும் அவர்க்குரிய பணிசெய்யாத அவயவங்களுடைய கொடியவரும், ஒருமுறை பொன்னம்பலமென்று சொன்னால், அவர் பஞ்சாக்ஷரத்தை இருபத்தோராயிரத்து அறுநூறு தரம் ஜபித்ததற்கு நிகராகும்; ஆதலாலேதான் இந்த ஏழை அடிக்கடி தில்லையம்பலம் என்று கூறுவது" என்றார்.

இப்படித் தபோதனர் கூறக்கேட்டதும் புத்தர், "புத்

தரை யல்லாமல் வேறு கடவுள் உண்டோ?" என்று கோபங் கொண்டு, "அப்படியானால் நான் தில்லைமாநகருக்குப்போய் வாது செய்து நர்த்தனம் செய்யும் இவனுடைய தெய்வம் தன் காலில் அணிந்துகொண்டிருக்கும் வீரக்கழலைக் கழற்றியெறியும்படி செய்கிறேன். அல்லாமலும் அந்த ஸ்தலத்தை இனி எவரும் அரசமர நிழலில் வைகும் புத்தருடைய ஆலயமென்றும் கூறும் படி செய்கிறேன்" என்று அரசனை நோக்கிக் கூறி, உடனே தம் பரிசனங்களுடன் ஆடம்பரமாகப் புறப்பட்டு நாடுகளும் காடுகளும் கடந்து சிதம்பரத்துக்கு வந்து சேர்ந்தார்.

புத்தகுரு புறப்படவே புத்தராஜனும் தன்னுடைய அருமைப் புத்திரியின் ஊமைத்தன்மை நீங்கச் சிதம்பரத்துக்குப் போக வேண்டுமென்று கருதி, உடனே தன் படை சூழப் புறப்பட்டுப்போய் அந்தத் திவ்விய ஸ்தலத்தை யடைந்தான். அரசன் தில்லையை அடைவதற்கு முன்பே அங்குச் சென்ற புத்தகுரு, சிதம்பரம் கோவிலுக்குள் ஒருபக்கத்தி லிருந்துவந்தார். அரசனும் அங்கே போய் அவரைக்கண்டு பணிந்து நின்றான்.

புத்தகுரு அங்குவந்து இவ்வாறு ஆடம்பரமாய் அமர்ந்திருப்பதைக் கண்ட கோவில் பணியாளர்கள், "நீவிர் யாவர்? இங்கேன் இப்படிவந்து வீண் ஆடம்பரங்கள் செய்கிறீர்கள்? போங்கள் வெளியே" என்றனர். புத்தகுரு, "உங்கள் அரசன் முன்பிருந்து தர்க்கம் பேசி, நீங்கள் கைக்கொண்டிருக்கும் சைவமார்க்கம் நிலையற்றதென ரூபித்து புத்தரே உயர்ந்த தெய்வமென்று நிலைநாட்ட நாங்கள் வந்தோமாதலால், அதை முடிக்காமல் வெளியே போகமாட்டோம்" என்றார்.

பணியாளர்கள் ஓடி புத்தர் சொன்ன இந்தச் சபதத்தைத் தில்லை மூவாயிரவர்களுக்கும் பரிகலத்தார்களுக்கும் தெரிவித்தனர். புண்ணிலே வேல் நுழைந்ததுபோன்ற இச்சொற்களைக்

கேட்டதும், அவர்கள் எல்லோரும் சபாநாயகருடைய ஆலயத்தில் ஒன்றுகூடி, புத்த குருவை அங்கே வரவழைத்து, "நீர் எதற்காக இங்கேகினீர்?" என்று வினவினார்கள்.

புத்தகுரு, "ஆறு சாஸ்திரமும் நான்கு வேதமும் இருபத்தெட்டு ஆகமங்களும் பதினெண் புராணங்களும் ஆதாரமாகக் கொண்டு நீங்கள், உங்களுடைய தெய்வமே தெய்வமென்று கூறுவீர்களானால், நான் எங்கள் தெய்வமே தெய்வமென்று கூறுவேன். அதைச் சாதிப்பதற்கே நாங்கள் இங்கே வந்திருக்கிறோம்" என்றார்.

அந்தணர்கள் இதைக்கேட்டதும் வெகுண்டு "வித்வான்கள் உம்மை 'இவன் தோற்றுப்போனான்' என்று சொல்லும்படி செய்கிறோம். இனி உம்முடன் பேசுவது சேற்றிலே கல்லெறிவதுபோ லாகும். அன்றியும் ஒரு நாய் கோபங்கொண்டு குரைக்குமானால் அதன் கோபத்தைத் தணிப்பதே முறையென்று சொல்லுவர் பெரியோர். ஆதலாலேதான் மிகவும் இழிவான உம்மோடு பேசுவது எமக்குத் தகாதகாரியமானாலும் உம்மைப் பொருட்படுத்திப் பேசினோம்" என்று கூறி, உடனே, "நாளைய தினம் கோவிலுக்கு வரவேண்டுகிறோம்" எனக் குறிப்பிட்டு ஓர் ஓலை எழுதிச் சோழராஜனுக்கு அனுப்பினார்கள்.

அப்பொழுது சூரியாஸ்தமனமாகும் வேளையாதலால், "நாளைய தினம் வந்து பேசிக்கொள்கிறோம்" என்று புத்தகுருவிடம் கூறிவிட்டு அவர்களனைவரும் தத்தம் வீட்டிற்குச் சென்றனர். இரவில் நித்திரை செய்யும்போது அவர்கள் ஒவ்வொருவருடைய கனவிலும் சிவபெருமான் தோன்றி, "நீங்கள் கவலைப்பட வேண்டாம். நம்மூரெல்லையில் திருவாதவூரிலிருந்து ஒருவன் வந்திருக்கிறான். அவனிடம் போய் 'மாணிக்கவாசகா' என்றழைத்து இச்செய்தி கூறுங்கள். அவன் இந்தச்

செய்தியைக் கேட்டால் தர்க்க சாஸ்திரங்களைக் கொண்டு புத்தரை வாதில் வெல்வான். ஆதலால் நீங்கள் போய் அவனை அழைத்து வாருங்கள்" என்று கூறியருளி மறைந்தார்.

இவ்வாறு கனவு கண்டதும் அவர்கள் ஒவ்வொருவரும் பெருமகிழ்ச்சி யடைந்தனர். மறுநாள் சபைக்கு வந்ததும் தாங்கள் கண்ட கனவை ஒருவர்க்கொருவர் சொல்லிக்கொண்டு "இனி வென்றோம் இந்தப் புத்தனை" என்று கூவி, சிவபெருமானைப் புகழ்ந்து துதித்துக்கொண்டே மாணிக்கவாசகரிடம் போய் அவரை வணங்கி 'மாணிக்க வாசகரே' என்றழைத்து, சிவபெருமான் தங்கள் கனவில் தோன்றிக் கூறியவைகளைத் தெரிவித்து, அவரைச் சபைக்கு வரும்படி வேண்டிக் கொண்டார்கள்.

சிவபெருமான், புத்தரோடு வாதிக்கும் விஷயமாய் முன்பே மாணிக்கவாசகர்க்குச் சொல்லியிருக்கிறு ராதலால், சுவாமிகள் அதனை யெண்ணி இச்சமயம் மனமகிழ்ந்து உடனே பன்னகசாலையை விட்டுப் புறப்பட்டு ஆலயம் போய், புத்தரிருக்கும் இரத்தின மண்டபத்தை யடைந்து, அவரைப் பார்க்க விரும்பாமல் திரையொன்று போடச் செய்து, அதற்குப் பின்னே உட்கார்ந்து கொண்டார்.

மாணிக்க வாசகர் அங்கே போய்ச் சேர்ந்த சிறிது நேரத்திற்கெல்லாம், சோழ மகாராஜனும் அவ்விடம் வந்து சுவாமிகளைப் பணிந்து அவரருகே உட்கார்ந்து கொண்டான். அப்பால் மாணிக்கவாசகர் புத்தகுருவை யழைத்து "நீர் எங்கே வந்தீர்?" என்று கேட்டார். புத்தகுரு,

"மன்னுமெங் கடவு ளல்லான் மற்றிலை கடவு ளென்றே
இந்நெடும் பதியி லெய்தி யியம்பியிங் கெவருங் காணப்
பொன்னினம் பலத்தே யெங்கள் புத்தரை வைத்தல் வேண்டி
யென்னல்வந் திருந்தே னீங்கு வேறிலை நினைந்த தென்றான்."

இதைக் கேட்டதும் மாணிக்க வாசகர் சிறுநகை செய்து, "முயல் எங்கேயாவது யானையாவ துண்டா? நல்லது, உம்முடைய தெய்வமே தெய்வமென்பதையும் ஆன்மாக்கள் அவனடியிலே சேரும் செய்தியையும் கூறும்" என்றார்.

புத்தகுரு கோபமடைந்து, "கண்ணில்லாதவனுக்குச் சூரிய கிரணத்தின் ஒளியைக் காட்டக் கூடுமோ? எங்கள் புத்த தேவனுடைய நல்ல கீர்த்தியைப்பற்றிப் பேசவேண்டுமானால் பல்லாயிரம் நாக்கள் வேண்டும். இந்த ஒரு நா போதாது" என்று கூறிப் பின், "எங்கள் தெய்வம் அநேகம் பிறவிகள் எடுத்து, ஆன்ம கோடிகளுக்கு உறுதி செய்து, பொல்லாங்கைத் தருவனவாகிய கொலை, களவு, பொய், கள்ளுண்ணல் ஆகிய நான்கு குற்றங்களையும் நீக்கி மேன்மையான அரசமர நிழலிலே இருப்பார்"—என்றார்.

அப்பால் மாணிக்கவாசகர், புத்த குருவுடன் அவர் கூறிய கடவுளின் இலக்ஷணங்களைக் கொண்டே நெடுநேரம் தர்க்கம் செய்தார். புத்த குருவும் மாணிக்கவாசகரை மறுத்து நெடுநேரம் வரையில் வீண்வாதம் பேசித் தர்க்கித்தார். அப்பால் மாணிக்கவாசகர் சினங்கொண்டு, ஸரஸ்வதி தேவியை அந்தப் புத்த குருவினுடைய நாவினின்றும் விலகும்படி வேண்டினார். வேண்டிய வளவில், ஸரஸ்வதி தேவி அவ்வாறே விலகினள். உடனே புத்தகுருவே யன்றி அங்கு வந்திருந்த புத்தர்களனைவரும் ஊமையானார்கள்.

இதைக் கண்ட ஈழநாட்டரசன் வியப்படைந்து, மாணிக்க வாசகரை வணங்கி, "ஐயா, உமது மகிமையினால் பேசத்தக்கவர்களும் ஊமையானது இன்று கண்டேன். பிறவியிலே ஊமையாயிருக்கும் என் புதல்விக்கு ஊமை நீங்கும்படி அநுக்கிரகம் செய்வீரானால் நானுமக்கு அடிமையாவேன்" என்றான்.

மாணிக்கவாசகர் உடனே அம்மன்னனுடைய புதல்வியைத் தம்முன் வரவழைத்துக் கிருபாநோக்கம் செய்து, "பெண்ணே, இந்தப் புத்தகுரு சொன்ன தர்க்கங்களுக் கெல்லாம் நீயே உத்தரஞ் சொல்" என்றார். அப்படிக் கூறியவளவில், புத்தகுரு கேட்ட வினக்களுக்கெல்லாம், கற்றறிந்தவள் போல் அந்தப்பெண் உத்தரம் சொல்லலானாள். அப்படி அப்பெண் சொன்ன உத்தரங்களின் பொருளை யெடுத்துத் திருச்சாழல் விளையாட்டாக மாணிக்கவாசகர் பாடியருளினார்.

அதன்பின் ஈழநாட்டரசன், விபூதி தரித்துக்கொண்டு சிவபெருமானைத் துதித்து மாணிக்கவாசகரை வணங்கி, "தமியேனை அடிமைகொள்ள வேண்டும்" என்று வேண்டிக் கொண்டான். அப்பால் சோழராஜனும் தில்லை மூவாயிரவரும் "அம்பலம் வாழ்க!" என்று துதித்து மாணிக்கவாசகரைப் புகழ்ந்து வணங்கினார்கள்.

மாணிக்கவாசகர் அப்பால் புத்தரிடம் இரக்கங்கொண்டு, அவர்களை எப்போதும்போல் பேசும்படி அநுக்கிரகம் செய்தார். புத்தரனைவரும் அதனால் பெருமகிழ்ச்சி யடைந்து, மாணிக்கவாசகரை வணங்கி அவரிடம் விபூதிவாங்கி நெற்றியிலணிந்துகொண்டு, சிவபெருமானிடம் அன்புடையவராயினர். அதன்பின் யாவரும் அம்மண்டபம் விட்டெழுந்து ஸந்நிதிக்குப்போய் நடராஜ மூர்த்தியை வணங்கித் தரிசித்து விடைபெற்றுத் தத்தம் இருப்பிடத்திற்குச் சென்றனர். மாணிக்கவாசகரும் தமது பன்னகசாலைக்குச் சென்றார்.

## 7. திருவடிபெற்ற சருக்கம்

மாணிக்கவாசகர் அந்தப் பன்னகசாலையி லிருந்து கொண்டே சிவபெருமானை நினைந்து, திருப்படையாட்சி, திருப் படையெழுச்சி, அச்சோப்பத்து, யாத்திரைப்பத்து என்னும் பதிகங்களைப் பாடித் துதித்து, ஒன்றைத் தேடுதலும் திகைத் தலும் பின் தெளிதலும், சிறுமைகொண்டு வாடுதலும் களித்த லும் இல்லாமல் பெருவாழ்வு வாழ்ந்து வந்தார். அந்தச் சிதம் பரம் அவர்க்கு மேலான சிவபதமாயிருந்தது.

அவ்வாறிருக்கையில், ஒருநாள் சிவபெருமான் ஒரு பிராம ணத் திருமேனியுடன் அவரிடம் போய் நின்றார். மாணிக்க வாசகர் அவரைக் கண்டதும் "உட்காரும். நீர் யார்? எங்கே வந்தீர்கள்?" என்று விசாரித்தார். பிராம்மணர் "நான் இருப்பது பாண்டிய தேசம்" என்றார். மாணிக்கவாசகர் மிகவும் சந்தோ ஷமடைந்து, "பாண்டிய நாடா நீரிருப்பது? நல்லது. இங்கே வந்த காரியமென்னவோ?" என்று கேட்டார்.

பிராமணர், "ஐயனே, உம்மைப் பார்க்கவே நான் வந்தேன், பிரம விஷ்ணுக்களாலும் தேடி அடைதற்கரிய கடவுளை, குதி ரையின்மீது வரும்படி செய்த உம்முடைய மகிமையினாலே பாண்டி நாடு மேன்மை யடைந்தது. திருப்பெருந்துறையில் ஐய னுடைய திருவடி தொழுது, பின் திருக்கழுக்குன்றஞ் சென்று அப்பால் இந்தச் சிதம்பரம் வந்து புத்தரை வாதில்வென்றதையும் கேட்டு நாங்களெல்லோரும் பெருமகிழ்ச்சி யடைந்தோம். சித் சபையிலே நடனமிடும் நடராஜப் பெருமானைத் தாம் இனிய தமிழிலே பாடித் துதித்த பாடல்களை யெல்லாம் ஓதவேண்டு மென்கிற அவாமேலிட்டு நான் இங்கே வந்தேன். அவற்றை யெல்

லாம் தாம் பாடிக்கொண்டே வந்தால் நான் எழுதிக்கொள்வேன்; தயைசெய்ய வேண்டும்" என்று கேட்டார்.

மாணிக்கவாசகர் அதைக் கேட்டதும் மகிழ்ந்து, சிவபெருமானைத் தியானித்துத் திருவாசகம் முழுவதையும் பிராமணர் எழுதத் தாம் பாடிக்கொண்டே வந்தார். அது எழுதி முடிந்ததும் பிராமணர், "உமாதேவியாரை இடது பாகங்கொண்ட சிவபெருமானைப் பாட்டுடைத் தலைவனாக வைத்துக் கோவை யொன்று பாடியருளும்படி வேண்டிக்கொண்டார். மாணிக்கவாசகர் மனமுவந்து அவ்வாறே கோவை யொன்று பாடி யருளினார். அதையும் அந்தப் பிராமணர் புத்தகத்திலே எழுதிக்கொண்டார்.

அப்பால் அடுத்த நிமிஷத்திலே பிராமணர் அந்தப் புத்தகத்துடன் மாயமாய் மறைந்து விட்டார். மாணிக்கவாசகர் அது கண்டு அதிசயமடைந்து "இது இறைவன் திருவிளையாடல்" என்றறிந்து கண்களிலே ஆநந்தபாஷ்பம் பெருக நின்று சிவபெருமானைத் தியானித்துத் தம்மையே மறந்தார்.

புத்தகத்துடன் சென்ற சிவபெருமானாகிய பிராமணர், நேரே தமது சபைக்குச் சென்று, "நம்முடைய அடிமையாகிய மாணிக்கவாசகன் பாடிய பாடல்களைப் பாருங்கள்" என்று பிரமாதி தேவர்களுக்கு அவைகளைக் காட்டினார். அவர்கள் அந்தப் பாடல்களைப் பார்த்து மகிழ்ந்து சென்றனர். அப்பால் சிவபெருமான், கோவையின் கடைசியேட்டில், "இந்தப் புத்தகம் மாணிக்கவாசகன் பாட நடனசபேசன் எழுதியது" என்று எழுதி, அதற்கும் தம் திருக்கரத்தினாலேயே மைக்காப்பு செய்து, மாணிக்கவாசகருடைய மகிமையை உலகத்துக்கு உணர்த்த வெண்ணி அந்தச் சபையின் வாயிற்படியிலே அதனை வைத்துவிட்டு மறைந்தார்.

அங்கே பூஜை செய்யவந்த ஓர் அந்தணர் அந்தப் புத்தகத்தைப் பார்த்து அதிசயித்து "ஒரு புத்தகம் சபையின் வாயிற்படியிலே இருக்கிறது" என்று தில்லையில் உள்ள பல அன்பர்களுக்குங் கூறி• அவர்களையும் அழைத்துவந்து காட்டினர். அவர்களும் அதைப் பார்த்து அதிசயமடைந்து "இது நமக்கென்று இறைவன் தந்தருளிய திருநூலாகும்" என வியந்து தங்களுள் ஒருவனைநோக்கி "அதை யெடுத்துப் பிரித்துப் படி" என்றார்கள். அவன் சிவபெருமானைத் தியானித்துக்கொண்டே அப்புத்தகத்தை எடுத்துப் படித்தான்.

அந்தப் புத்தகத்திலடங்கிய திருச்சதகம் முதலாக அறுநூறு பாடல்களையும் கோவை நானூறு பாடல்களையும் படித்துப் பின் கடைசியில் 'மாணிக்கவாசகன் பாட நடனசபேசன் எழுதியது' என்று எழுதியிருந்ததையும் படித்தார்.

இந்தத் திருமுறையைப் படிக்கக் கேட்டவர்களனைவரும் மெய்ப்புளகமுற ஆநந்தமடைந்து, "மாணிக்கவாசகர் திருவாய் மலர்ந்தருளிய இந்தத் திருநூலல்லாமல் மோக்ஷமார்க்கத்திற்கு வேறு நூலும் உண்டோ" என்று பெருவியப்புற்றனர்; பின்னர், யாவரும் மாணிக்கவாசகரிடம் சென்று, அவர் முன் அந்தப் புத்தகத்தை வைத்துப் பணிந்து, "சிவபெருமான் செய்த காரியம் இது" என்று கூறினார்கள்.

மாணிக்கவாசகர் அதைக் கேட்டதும், "அடியேன் பொருட்டு இறைவன் இப்படி விளையாட யான் செய்த தவம் யாதோ அறியேன்" என நினைந்து ஆநந்தமடைந்தார். அவரை நோக்கிச் சிவநேயரெல்லாம், "சுவாமி, தம்மிடம் சிவபெருமான் வந்து இதனை எழுதிய தெப்படி?" எனக் கேட்டனர். வாதவூரர், நடந்ததை அவர்கட்குப் பெருமகிழ்ச்சியோடு நவின்றனர். அதுகேட்டு அவர்கள் ஆச்சரியத்துடன் அவரைப்



ராமதாஸன் ஸ்ரீ ராமபிரானைத் துதித்தல்

# II

# ஸ்ரீ ராமதாஸர்

## 1. இளமைப் பருவம்

நீர்வளமும் நிலவளமும் நிறைந்த நெல்கொண்டா என்னும் ஒரு கிராமத்தில், ஆத்திரேய கோத்திரத்தைச் சேர்ந்தவரான லிங்கன்ன என்னும் ஒரு நியோகிப் பிராமணர் இருந்தார். அவருக்குக் காமாம்பாள் என்னும் பெயர் கொண்ட ஓர் உத்தமி மனைவியாயிருந்தாள்.

இவர்களிருவரும் ஒழுக்கத்திலே சிறந்தவர்களாகவும் உத்தம குணங்களுக்கு இருப்பிடமாகவும் விளங்கினர்கள். இவை கட்கேற்ப இவர்கள் பகவத் பக்தி வாய்ந்தவர்களாகவு மிருந்தனர். இவ்வாறிருக்கையில் பகவானுடைய திருவருளினால் இவர்களுக்கு ஒரு புத்திரன் பிறந்தான்.

அந்தப் புத்திரன் பிறந்த பன்னிரண்டாவது நாள், லிங்கன்னவின் உறவினர் சிலரும் நெல்கொண்டாவில் வசித்த பிராமணப் பெரியாரில் சிலரும் சேர்ந்து, அக்குழந்தைக்குக் கோபன்ன என்று திருப்பெயரிட்டு ஆசீர்வாதஞ் செய்தனர்.

அப்பால் லிங்கன்னவும் அவர் மனைவியாகிய காமாம்பாளும் கோபன்னவைத் தங்கள் உயிரைப்போல் எண்ணி மிகவும் அருமையாக வளர்த்துவந்தனர்; பின் தக்கவயது வந்ததும், கோபன்னவுக்கு வித்யாப்பியாஸம் செய்வித்து, அப்பால் அந்தணர் மரபிற்கேற்றபடி உபநயனமும் செய்வித்தார்கள்.

கோபன்னுவுக்கு ஏழுவயது நிரம்பியது. அவர் அந்த ஊரில் இங்கும் அங்கும் போய் விளையாடிவரத் தொடங்கித் தம் வயதுப் பிள்ளைகளுடன் சிறுவர்க்குரிய பல விளையாட்டுக்களை விளையாடிவரத் தலைப்பட்டார். ஆனால், விளையாடும் வேளை தவிர மற்ற நேரங்களில் தமது தந்தைக்கும் உபாத்தியாயருக்கும் பணிந்து நடந்து அவர்கள் கற்பிப்பதைக் கருத்துடன் ஓதிவருவார்; தமக்குக் கற்பிப்ப தெதையும் அவர் மறவாமல் கற்றுவந்தார். அதுகண்டு அவர் தந்தை மிகவும் மகிழ்வடைந்தார்.

இப்படி வளர்ந்துவந்த கோபன்னு, தாம் வெளியே விளையாடப் போகாத நேரங்களில் வீட்டில் ஸ்ரீ ராமபிரானுடைய படத்தை வைத்துத் தாமே தம்மிஷ்டப்படி வாயில் வந்தவைகளைச் சொல்லிப் பூஜை செய்வார். அவர் எங்கேயாவது வெளியே போகும்பொழுது ஸ்ரீ ராமபிரானுடைய படத்தைக் கண்டுவிட்டால் அங்கு நின்று அதைக் கும்பிடுவார்; அந்த மூர்த்தியின் திருக்கோயிலைக் காணுந்தோறும் ஸந்நிதியிலே விழுந்து பணிந்து செல்வார்.

இவ்வாறு இளமையிலேயே கோபன்னுவுக்கு ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தியினிடம் ஒருவித பக்தி ஏற்பட்டு வந்தது. ஒரு சமயம் அவ்வூரில் நடந்த ஸ்ரீ ராமாயணப் பிரசங்கம் கேட்க அவர் சில பிள்ளைகளுடன் போயிருந்தார். அப்போது அவருக்கு வயது ஒன்பது. அவர் பிரசங்கம் கேட்டு முடிந்து வீட்டுக்கு வருகையில், தம்மோடு வந்து பிரசங்கங் கேட்ட பிள்ளைகளைப் பார்த்து, "ஸ்ரீ ராமபிரான் அவதரித்த காலத்திலேயே நான் பிறந்திராமற் போனேன்! பிறந்திருப்பின் சுக்ரீவன் முதலியவர்களைப் போல் நானும் ஸ்ரீ ராமபிரானுக்குச் சேவை செய்திருப்பேன்! அவருக்குப் பணிவிடை செய்யாத இந்த ஜன்மம் எடுத்து என்ன பயன்?" என்று

கூறி வருத்தப்பட்டார். இந்தச் சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டு வந்த ஒரு பெரியவர், பெருமகிழ்ச்சியுடன் கோபன்னாவைத் தழுவிக்கொண்டு, அவர் திருமுகத்தைப் பார்த்து "அப்பா, உனக்கு உதித்திருக்கும் இந்த பக்தி நாளுக்குநாள் விருத்தியடையக் கடவது" என்றாசீர்வதித்து, "கண்மணி, ஸ்ரீ ராமபிரானை மறவாதே! அவர் திருவருள் புரிந்து உன்னை என்றும் காப்பாற்றுவார்" என்று கூறிப் போனார். கோபன்னாவும் நண்பர்களுடன் வீடு சென்றார்.

வீடுசென்றதும், இந்த விசேஷத்தைக் கோபன்னாவுடைய தாய் தந்தையரிடம் அவருடன் சென்ற நண்பர்களாகிய சிறுவர்கள் கூறினார்கள். அவர்கள் அதைக் கேட்டதும் தங்கள் அருமை மைந்தனைக் கட்டித் தழுவி முத்தமிட்டு மகிழ்ந்து, "போய் விளையாடு! முரட்டு விளையாட்டு விளையாடாதே! கொஞ்சநேரம் விளையாடிவிட்டுப் பிறகு படி" என்று கூறியனுப்பிப் பின் தங்கள் குழந்தை ஸ்ரீ ராம பக்தியில் ஈடுபட்டிருப்பதைப் பற்றிப் பேசி, மகிழ்ந்து, "இதனாலே தான்,

'பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற'

என்று கூறினார் ஒரு பெரியார்" எனவியந்து, "புண்ணியவசத்தினாலே புத்திரபாக்கியம் கிடைக்கிறது. அந்தப் புத்திரன் அறிவிலே சிறந்தவனா யிருப்பானாகில் அதைவிட வேறு பாக்கியமும் பெற்றோர்களுக்கு வேண்டுமோ?" என மகிழ்ந்தனர்.

கோபன்னாவுடைய தந்தைக்கு அன்ன வஸ்திரத்துக்குப் போதுமான பூஸ்திதி இருந்தது. அவர் அதில் வரும் வருவாயைக் கொண்டு மிகச் செட்டாய்ச் செலவிட்டுத் தம் காலத்தைக் கழித்துவந்தார். இக்காலத்தைப்போல் அக்காலத்தில் படிப்புக்கென்று ஏராளமான பொருள் செலவழிக்க வேண்

டிய அவசியமில்லை. படிப்பவர் எவரும் உத்தியோகத்திற் கென்றும் படிப்பதில்லை.

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு"

என்று திருக்குறள் என்னும் தமிழ்வேதம் போதிக்கிறபடி, தோண்டத் தோண்ட மணற்கேணியில் நீர் ஊறுவதுபோல் படிக்கப் படிக்க மாந்தர்க்கு அறிவு விருத்தியாகு மாதலால், படிப்பவர்கள் அறிவின் அபிவிர்த்தியைக் கருதியே படித்து வந்தார்கள். போதிப்பவரும் பரோபகார சிந்தையுடையவரா யிருந்து மாணவரின் அபிவிருத்தியைக் கருதி, அன்போடு போதித்து வந்தனர்.

அறிவு பிறரால் அழிக்கமுடியாத ஓர் அரணுகும்,

"அறிவுடையா ரெல்லா முடையா ரறிவிலா
ரென்னுடைய ரேனு மிலர்"

என்று தமிழ் வேதம் கூறுகின்றபடி, அறிவுடையவர் வேறொன்று மில்லாதவரா யிருந்தாலும் எல்லாமுடையவராவர்; அறிவில்லாதவர் எல்லாமுடையவரா யிருந்தாலும் ஒன்றுமில்லாதவராவர். ஆதலால் கோபன்ன, அரும்பெரும் செல்வமாகிய அறிவை அடைவதிலேயே முயற்சியுடையவராயிருந்தார்.

கோபன்ன கௌமார பருவத்தை அடையுங் காலத்தில் சகல சாஸ்திரங்களையும் உணர்ந்து பெரியோர்கள் மதிக்கும்படியான விவேக சீலராய் விளங்கினர்.

இவ்வளவு சிறந்த விவேகியான பிறகுங்கூடக் கோபன்ன படிக்காம லிருப்பதில்லை. ஒவ்வொரு நாளும் அவர் தமக்கு ஒழிவு கிடைத்தபோதெல்லாம் எதையேனும் சாஸ்திரங்களை ஓதி மகிழ்

வார். "பாடமேறினும் ஏடது கைவிடேல்" என்னும் பழமொழி அவருக்கு இலக்காக விளங்கிற்று.

ஆகவே கோபன்ன அறிவிலும் பக்தியிலும் நாளுக்கு நாள் விருத்தியடைந்து, தம்மை எல்லோரும் விரும்பி அன்பு பாராட்டத்தக்க ஒழுக்கமுடையவராய் விளங்கினர். இந்தக் காலத்தில் அவர் தந்தை, குலத்திலும், குணத்திலும், நலத்திலும் சிறந்த ஒரு பெண்ணைத் தேடி அவருக்கு விவாகம் செய்வித்தார்.

கோபன்ன இவ்வாறு விவாகஞ் செய்துகொண்டபிறகு தமது மனைவியுடன் இல்லறநெறி தவறாமலிருந்து வந்தார். அவர் மனைவியும் அவருடைய மனம் கோணாமல் பணிவிடை புரிந்து வந்தாள். கோபன்ன நாடோறும் ஸ்ரீ ராமபிரானுக்குப் பூஜை நைவேத்தியம்செய்யாமல் போஜனம் செய்யார்; சதா காலமும் ஸ்ரீ ராமபிரானுடைய புகழைக் கேட்பதிலேயே பிரியமுடையவரா யிருந்தார். இதனால் அவ்வூரினர் யாவரும் அவரிடம் மதிப்பு வைத்து அவரைப் பெருமைப்படுத்திவரத் தலைப்பட்டார்கள். கோபன்ன, "எல்லாம் இறைவன் செயல்" என எண்ணித் தமக்குள் மகிழ்ந்தவராய், சற்குரு கடாக்ஷத்தை எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்.

இவ்வாறிருக்கையில் கோபன்னவின் வீட்டிற்கு அருகேயுள்ள ஒரு வீட்டில், ஒரு பாகவதர் ஸ்ரீ ராம பஜனை செய்து கொண்டு பரமானந்த முடையவரா யிருந்தார். அந்த வீட்டில் பஜனை நடக்கும் பொழுதெல்லாம் கோபன்ன அங்கே போய் அந்தப் பாகவத சிரோமணியைப் பணிந்து, அவர் பாடித் துதிக்கும் துதிகளைக் கேட்டுக்கொண்டிருப்பார்; சில சமயம் அவரோடு சேர்ந்து பாடிப் பகவானைத் துதித்து மகிழ்வார்; பஜனைக்கு வேண்டிய பணிவிடைகளையும் மனமுவந்து செய்வார்.

இப்படி பகவானுடைய கைங்கரியத்திலே ஈடுபட்டு விளங்கும் கோபன்னாவிடம் பாகவதருக்கு மிகுந்த அன்புண்டாயிற்று. அப்பால் ஒருநாள் அவர் கோபன்னாவின் திருமுகப் பொலிவை நோக்கி, "இவர் உத்தம குணங்களுக்கு இருப்பிடமாக விளங்கக் கூடியவர். இன்னும் சிலநாளில் இவர் உலகம் புகழத்தக்க உத்தம பக்தராகக் கூடியவர்" என்று அறிந்தவராய் அன்று பஜனை முடிந்ததும் அவரைத் தனியே ஓரிடத்திற்கு அழைத்துப் போய், "அப்பா, நீ சீக்கிரத்தில் உத்தம பக்தனாவாய்! இதில் ஐயமில்லை! உனக்குப் பகவானுடைய அநுக்கிரகம் பரிபூர்ணமாய்க் கிடைக்கும்! ஸ்ரீ ராமபிரானுடைய திருவடியை மறவாதே! அவனையே சரணமாக அடை. அந்த ஜகத் ரக்ஷகனுடைய திருவருட் செல்வம் பெற்றவர்க்கு இகத்திலும் பரத்திலும் கிட்டாததில்லை. அவனிடம் பக்தி செலுத்தும்படியான அரிய குணம் உன்னிடத்தில் இந்தச் சிறு வயதிலேயே குடிகொண்டிருக்கிறபடியால், நீ பெரிய புண்ணியம் செய்தவனாகின்றாய். உன்னிடம் எனக்கும் பரம சந்தோஷமுண்டாயிருக்கிறது. ஆகையினால், உனக்கு ரக்ஷகமாகும் ஒன்றை இப்போது உபதேசிக்கிறேன். நீ அதைத் தவறாமல் அநுஷ்டித்து வரவேண்டும்" என்று கூறி, ஸ்ரீ ராம தாரக மந்திரத்தைக் கோபன்னாவுக்கு உபதேசித்தருளிய பின், அவர் அவ்வீட்டை விட்டுச் சென்றுவிட்டார்.

தமக்கு இவ்வாறு அரிய உபதேசம் செய்த குரு சென்றதும், கோபன்னா அவரைப்பற்றிச் சிலரை விசாரிக்கலானார். விசாரித்தவளவில், சென்றவர் கபீர் தாஸர் என்னும் பெயர்கொண்ட ஒரு பக்தரென்றும், காசியிலிருந்து சேது யாத்திரை செய்து கொண்டு செல்பவரென்றும், வழியில் யாதுகாரணத்தாலோ அங்கே சில காலம் தங்கியிருந்தாரென்றும் அவருக்குத் தெரிய வந்தது.

அப்பால் கோபன்ன, தமக்கு உபதேசிக்கவே ஸ்ரீ ராமச் சந்திரப் பிரபு அந்த மகானை அனுப்பியதாகத் தீர்மானித்துப் பரமானந்தமடைந்து, அவருடைய உபதேசப்படி தாரக மந்திர ஜபஞ்செய்து ஸ்ரீ ராமபிரானை எப்பொழுதும் ஆராதித்து வந்தார். இப்படி யிருக்கையில், கோபன்னவுக்கு இந்த உலகப் பொருள் எதிலும் புத்தி செல்லவில்லை. திருவடி நினைப்பவர் தம் தீமைகளைக் களைந்தருளும் பரம தயாபரனாகிய ஸ்ரீ ராமபிரானையே எப்போதும் அவர் தியானித்து வந்தார். ஸ்ரீ ராமபிரானைத் தம் தந்தையாகவும் ஸீதாதேவியைத் தம் அன்னையாகவும் ஸ்ரீ ராமபிரானுடைய அன்பரைத் தம் சுற்றமாகவும் எண்ணிப் பரம சாந்தகுண சீலராக விளங்கினார்.

---

## 2. உத்தியோகம் பெறுதல்

கோபன்ன இப்படிப்பட்ட நிலைமையை யடைந்த இரண்டு வருஷங்களுக்கெல்லாம் அவருடைய தந்தை காலஞ் சென்றார். அப்பால் அவர் தாயும் மரணமடைந்தாள். கோபன்ன அதனால் மிகுந்த துயரமடைந்தா ரெனினும் ஸ்ரீ ராமபிரானுடைய நாம ஸ்மரணை அதனை நாளடைவில் மாற்றியது. மேலும், அவர் நல்ல விவேகியானதால், உலகத்தில் மாந்தர் பிறப்பதும் இறப்பதும் உலக இயல்பு என்று உணர்ந்தார். அப்பால் தமக்குள்ள பொருள்களை ஸத்விஷயங்களிலே செலவழிக்கத் தொடங்கினார். "தனக்கு மிஞ்சி யல்லவா தானம்?" என்று வழங்கும் பழமொழியை அவர் கவனிக்கவில்லை. அவர்க்குப் பொருள் பெரிதாகத் தோன்றவில்லை.

கோபன்ன நாள்தோறும் தாம் காணும் ஸ்ரீ ராம பக்தர்களுக்கெல்லாம் அன்ன மிடுவார்; அவர்களுக்கு வேண்டியதைக்

கேட்டுத் தம்மாலியன்றவரையில் உதவுவார் ; அவர்களோடு சேர்ந்து பகவானுடைய பெருமைகளைப் பேசி மகிழ்வார் ; அவர்கள் கூறுவதெதையும் அமைதியோடு கேட்பார். இதனால் உலக வாழ்விற்கு ஆதாரமாகிய பொருளீட்டுவதில் அவர் சற்றும் முயற்சி யெடுத்துக் கொள்ளவில்லை.

இவ்வாறு எல்லாவற்றையும் மறந்து, ஸ்ரீ ராமபிரானுடைய பக்தியி லீடுபட்டு நிற்கும் இந்தக் காலத்தில் கோபன்னவுக்கு ஒரு புத்திரன் பிறந்தான். புத்திரபாக்கிய மடைந்ததனால் அவர் பரம சந்தோஷமடைந்தார். அதனையும் அப்பொழுது மேலிட்ட வறுமை மாற்றிவிட்டது. தமக்குத் தம் தந்தை வைத்திருந்த சொத்தை யெல்லாம் கோபன்ன விற்றுச் செலவிட்டு வந்தாரே தவிர, அதை விருத்திக்குக் கொண்டுவரச் சிறிதும் கருதினரில்லை. கல்விச் செல்வம்போல் பொருட்செல்வம் செலவழிக்கச் செலவழிக்க விருத்தியாகா தாகையினால், நாளடைவில் அது குறைந்தது. மாந்தரைப் பலவாறான இழிவுக் குட்படுத்தும் வறுமை மேலிட்டது. பின் உதர போஷணத்துக்குங் கூட வழியில்லாமல் கோபன்ன கஷ்டப்பட்டார்.

பொருளில்லாதவனுடைய வாழ்க்கையைக் கோபன்ன இப்பொழுது வெறுத்தார். சத்கருமங்களைச் செய்பவனுக்கும் துஷ்கருமங்களைச் செய்பவனுக்கும் பொருளே ஆதாரமாதலால், கோபன்ன தாம் அநுஷ்டித்து வந்தபடி சத்கருமங்களைச் செய்துவருவதற்கு இப்போது ஒரு சிறிதும் இயலாதவராகவே, அவர் கலங்கி நின்றார். ஆனாலும், அவர் தமக்குத் தம் குரு உபதேசித்தபடி ஸ்ரீ ராமதாரக மந்திர ஜபம் செய்து வந்தபடியால், அவருக் குண்டான கலக்கம், விண்ணிலே தோன்றி மறையும் மின்னலைப்போல் மறைந்தது. அது மறையவே, அவர் சித்தம் தெளிவடைந்தது. அதனால்

அவர் ஸ்ரீ ராம ஸ்மரணையைத் தவிர இதர அநுஷ்டானங்கள் அவசியமற்றன வென்றும் ஸ்ரீ ராமனுடைய கல்யாணகுணங்களில் ஈடுபட்டால் அவை அநந்த ஜன்மங்களிலே செய்த பாபங்களையு மொழித்துப் பரமானந்தத்தை அளிக்குமென்றும் கண்டுணர்ந்தார்.

அப்பால், அவர் உஞ்சவிருத்தி யெடுத்துக் காலக்ஷேபம் செய்வதெனத் தீர்மானித்தார். இவருடைய முன்னோர்கள் பிராமணராக இருந்தும் லௌகிக விருத்திகளிலேயே ஜீவனம் செய்து வந்தார்கள். ஆகையினால் கோபன்னாவின் உறவினரிற் சிலர், உஞ்சவிருத்தியிலே காலக்ஷேபம் செய்வது யுக்த மல்லவென்று கூறி, அதில் அவரைப் பிரவேசிக்க வொட்டாமல் தடுத்து விட்டனர். கோபன்னா குடும்ப சம்ரக்ஷணை செய்வதற்கு வழி தெரியாமல் பல வழிகளில் அல்ல லடைந்தார். முடிவில் 'கட்டுவதற்குக் கந்தலுமில்லாதவரானார்' 'குடிப்பதற்குக் கூழுமில்லாதவரானார்' என்று இகழத்தக்க பரிதாபமான நிலையை அடைந்தார்.

ஆயினும், அவர் பரம சாந்தகுணமுடைய பக்த சிரோமணி யாதலால், வறிஞரென அவரை ஒருவரும் இகழ்வதில்லை. அவ்வூரில் யாவரும் அவரைப் பெருமைப்படுத்தியே வந்தார்கள். கோபன்னா தமக்குள் "வறிஞனாகிய நான் பிறர் மதிக்கப் பெருமையுடன் வாழ்வது ஸ்ரீ ராமபிரான் திருவருளே" என்று எண்ணி ஆறுதலடைவார்.

கோபன்னாவின் மனைவி, தன் கணவனையே தான் தொழத்தக்க தெய்வமாக எண்ணிவந்த மகா உத்தமி யாகையால், "இல்லாளை இல்லாளும் வேண்டாள்" என்று சொல்லியுள்ள நீதியும் அவளிடம் பலியா தொழிந்தது. அவள், கோபன்னாவினிடம் மாறாத அன்பும் குறை கூறுவதற்கில்லாத பணிவிடை

புரியும் குணமும் மேலிட்டவளா யிருந்தாள். தன் கணவனைப் போல் அவளும் தெய்வ பக்தியிலே சிறந்து, "எல்லாம் ஈசன் செயல்" என மனங்கனிந்து தளரா நிலையிலிருந்தாள். பல சொல்வானேன்?

"தங்கமா னதுதழலில் நின்றுருகி மறுகினுந்
தன்னொளி மழுங்கிடாது
சந்தனக் குறடுதான் மெலிந்துதேய்ந் தாலுமோ
தன்மணங் குன்றிடாது
பொங்குமிகு சங்குசெந் தழலில்வெந் தாலுமோ
பொலிவெண்மை குறைவுறாது
போதவே காய்ந்துநன் பால்குறுகி னாலும்
பொருந்துசுவை போய்விடாது
துங்கமணி சாணையிற் றேய்ந்துவிட் டாலுந்
துலங்குகுண மொழியாதுபின்
றூன்மைதரு பெரியோர் மடிந்தாலு மவர்களது
தூயநிறை தவறுறுமோ
மங்களகல் யாணகுற மங்கைசுர குஞ்சரியை
மருவுதிண் புயவாசனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே"

என்று வழங்கும் செய்யுள் இந்தப் பக்த சிரோமணிகளின் மாறாத நிலையைக் கண்டுதான் பாடியதோ என்று வியந்து பேசும் படி இருவரும் விளங்கினார்கள்.

கோபன்னாவுக்கு அக்கன்னா, மாதன்னா என்று இரண்டு மாமன்மார்கள் ஐதராபாத்தில் நவாபாயிருந்த தானேஷா என்பவரிடம் மந்திரிகளாயிருந்தனர். அவர்களிடம் போய்த் தமது வரலாற்றைக் கூறி ஏதாவது ஜீவனோபாயத்தை யடையலாமா வென்று, ஒரு நாள் கோபன்னா தம் மனைவியுடனிருந்து ஆலோசித்தார். மனைவி நாயகன் முன் பணிவாய் நின்று, "நாதா, வறு

மையை அடைந்த நாம் உறவினரிடம் போனால், அவர்கள் இச் சமயம் நம்மை இலக்ஷியம் செய்யமாட்டார்கள். உறவெல்லாம் உண்டானபோதே யல்லாமல் இல்லாதபோ தல்ல. இது உலக இயல்பென்பது தாமறியாததா? 'எடுப்பின் கிளையட் கழிந் தாரை எடுப்ப' என்று கூறியுள்ளபடி, தங்கள் உறவினரில் வறுமையினால் மெலிந்தவர்களைத் தாங்குவதே சிறந்த தருமம் என்று கருதி நடக்கும் தனவந்தர் உலகத்தில் மிகச் சிலரே இருப்பர். அன்றியும்,

'பெருத்திடு செல்வமாம் பிணிவந் துற்றிடில்
உருத்தெரி யாமலே யொளிம ழுங்கிடும்'

என்கிறபடி, செல்வமாகிய நோய் வந்தடையுமாயின் எதிரில் நிற்பவருடைய உருவத்தையும் காணமுடியாதபடி. கண் ஒளி மழுங்கி விடுவதுண்டு. அப்படி ஒளி குறைந்த கண் ஒளி பெறுவதற்கு,

'மருத்துள தோவெனின் வாகடத் தில்லை
தரித்திர மென்னுமோர் மருந்தில் தீருமால்'

என்றபடி, மருந்துள்ளதோவென்றால் வைத்திய நூலில் அதற்கு மருந்தில்லை. தரித்திரமென்கிற ஒரு மருந்தினால் அது தீரும் என்று பெரியோர் சொல்லி யிருக்கிறார்க ளல்லவா? இதற் கேற்ப, செல்வத்திலும் அதிகாரத்திலும் மேன்மை யடைந் துள்ள தங்கள் மாமன்மார்களின் தன்மையும் இருக்குமானால், நாம் வீணே அவமானமடைய நேரிடுமாதலால் இது பற்றித் தீர ஆலோசித்துத் துணியவேண்டும்" என்றாள்.

இந்த அருமையான நீதியைக் கேட்டதும் கோபன்னா கரை கடந்த மகிழ்ச்சியடைந்து, மனைவியை அன்போடு நோக்கி, "நீ சொல்வது நியாயந்தான். அதைப்பற்றி ஆலோசிக்க வேண்டி

யதும் அவசியந்தான். ஆயினும் என் மாமன்மார்க ளிருவரும் சிறந்த நீதிமான்க ளாதலால் அவர்கள் செல்வத்திலே சிறந்திருந்தாலும் தங்கள் கடமையைச் செய்யத் தவறார்கள். எனக்கு அவர்களிடம் அந்த நம்பிக்கை யுண்டு; நான் போய் வருகிறேன்" என்று கூறி அன்று முழுவதும் அதைப் பற்றி ஆலோசித்துக் கொண்டிருந்து, மறுநாள் புறப்பட்டு ஐதராபாத்துக்குப் போய் மாமன்மார்களைக் கண்டு விஷயத்தைக் கூறினர்.

மாமன்மா ரிருவரும், கோபன்னவை வறிஞரென்று அவமதியாமல் உபசரிக்க வேண்டிய முறையில் உபசரித்து, "கவலைப்படாதே! நவாபினிடம் கூறி ஏதேனும் ஒரு உத்தியோகத்தில் உன்னை அமர்த்துகிறோம்" என்று தைரியப்படுத்தினர்கள். கோபன்ன இதைக் கேட்டதும் ஸ்ரீ ராமபிரானுடைய கிருபையை எண்ணி "நீதிமான்கள் எப்படிப்பட்ட நிலையிலிருந்தாலென்ன? தங்கள் கடமையைக் கைவிடுவார்களா?" என மகிழ்ந்தார். அவருடைய மாமன்மார்களும் கோபன்னவின் குணங்களையும் புத்திசாலித்தனத்தையும் அவர் தெய்வத்திற்குப் பயந்து நடக்கும் இயல்பினரா யிருப்பதையும் அவரிடம் சம்பாஷித்ததிலிருந்து தெரிந்துகொண்டு சந்தோஷமடைந்தனர்.

அப்பால் ஒருநாள் அவர்கள் கோபன்னவை நவாபினிடம் அழைத்துப்போய் "இவன் எங்கள் மருமகன்; நல்ல யோக்கியதை யுடையவன்; அறிவாளி; தெய்வபக்தியுடையவன்; இவனுக்கு ஏதேனும் ஓர் உத்தியோகம் கொடுத்து ஆதரிக்கவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்கள். கோபன்ன சத்புருஷனுக்குரிய சகல லக்ஷணங்களும் வாய்ந்தவர். அவரைக் கண்டதும் நவாபு அவரிடம் சம்பாஷிக்க ஆவல்கொண்டு அவரைச் சில விஷயங்கள் கேட்டார். கோபன்ன, நவாபு தம்மிடத்தில் ஈடுபடும்படி பதிலளித்தபடியால், நவாபு அவரைப்

புகழ்ந்து, "இவரிடம் நாம் சந்தோஷப்படுகிறோம். இவர் எந்த வேலைக்கு உதவுவார்?" என்று மந்திரிகளைக் கேட்டார்.

அமைச்சர்கள், "பிரபுவே, நம்முடைய இராஜ்யத்தில் பத்ராஜலமென்னும் தாலுகாவிற்கு ஒரு தாசில்தார் வேண்டும். அந்த வேலைக்கு இவரை அனுப்பலாம்" எனக் கூறினார்கள். நவாபு, "அப்படியே செய்வோம். வேலையைச் செவ்வையாய்க் கவனித்துப் பார்த்துவரவேண்டு மென்பதை எச்சரிக்கை செய்து, அதிகாரப்பத்திரம் கொடுத்தனுப்புங்கள்" என்றார்.

அமைச்சர்கள், "ஆக்ஞைப்படியே செய்கிறோம்" என்று அவரிடம் கூறி விடைபெற்றுக் கொண்டு கோபன்னாவுடன் தங்கள் கச்சேரிக்குப் போய் ஓர் அதிகாரப் பத்திரமெழுதி அதில் இராஜமுத்திரை யிட்டு, "கோபன்னா, இந்தா அதிகாரப் பத்திரம், பெற்றுக்கொள். பிரஜைகளுக்கு யாதொரு தொந்தரவுமில்லாமல் பரிபாலனம்செய்து, பகுதிப் பணத்தைப் பால்மாறாமல் வசூலித்து இங்கே பொக்கிஷசாலைக்கு அனுப்பிவரவேண்டும்; நீதியும் அமைதியும் நிலைபெறும்படி இராஜ விசுவாசமுடையவனா யிருத்தல்வேண்டும். உன்பொருட்டுச் சிபார்சு செய்த எங்களுக்குக் கெட்டபேர் வாராமல் நடந்து கொள்ளவேண்டும். இவை நீ ஞாபகத்திற் கொள்ளவேண்டிய முக்கியமான அம்சங்களில் சில" என்று கூறி அதிகாரப் பத்திரத்தை அவரிடம் கொடுத்து அவரைப் பத்ராஜலத்துக்கு அனுப்பினார்கள்.

---

### 3. உத்தியோகம் செய்தல்

அதிகாரப் பத்திரத்தைப் பெற்றுக்கொண்டதும் கோபன்னா நேரே தம் ஊருக்குப் போய், மனைவியிடம் நடந்த விஷயங்களைக் கூறி, அவ்வம்மையையும் அழைத்துக்கொண்டு பத்ராஜலம் போய்த் தம்முடைய உத்தியோகத்தைக் கவனிக்க

லானர். கோபன்ன மகா பக்திமான் என்பதை அறிந்த அவ்வூரினர் அவரிடம் அரிய மதிப்பு வைத்து மிகவும் மரியாதையாய் நடந்து வந்தார்கள். கோபன்ன ஒரு நாள் அவ்வூர்க் குடிகளை வர வழைத்து ஓரிடத்திலே கூட்டித் தாம் அவர்களுக்குச் சொல்ல வேண்டிய விஷயங்களையெல்லாம் சொல்லி, நெறிதவறாமல் நடந்துவரும்படி திட்டப்படுத்தி அனுப்பினர். அப்பால் அவ் வூரிலுள்ள பக்தர்க ளனைவரையும் ஒன்று சேர்த்து, ஸ்ரீ ராம பஜனையினல் உண்டாகும் நன்மைகளையும் ஸ்ரீ ராம நாம உச் சாரண மகிமையையும் எடுத்து விளக்கி, அவர்களோடு தாமும் கலந்துகொண்டு பரம அந்யோந்யமாக இருந்துவந்தார். இவைக ளுக்கேற்ப, அவர் முறை தவறாமல் அதிகாரத்தையுஞ் செலுத்தி வந்தபடியால், குடிகள் அரசனுக்குக் கட்டவேண்டிய பகுதிப் பணத்தைக் காலந்தவறாமல் செலுத்தி வந்தார்கள்.

அதனால் கோபன்ன ஒரு கவலையு மில்லாமல் வேலை பார்த்து வந்தார். குடிகளெல்லாம் அவரிடம் தந்தைக்குரிய மரியாதையுடன் நடந்து வந்தனர். கோபன்னவும் அவர்களைத் தம் மக்கள் போல் பாவித்து வந்தார். தானேஷாவுக்குச் செலுத்த வேண்டிய பகுதிப் பணத்தைத் தவணை தவறாமல் வசூலித் துக் கஜானவுக்கு அனுப்பிவந்தார். அதனால் தானேஷா கோபன் னவிடம் சந்தோஷங்கொண்டு, நகர பரிபாலனத்தின் பொருட்டு அவர் எந்தச் சீர்திருத்தம் செய்யவேண்டு மென்று கேட் டாலும் அவற்றை யெல்லாம் நிறைவேற்றத் தடை சொல்லாமல் அவ்வப்போது அநுமதி கொடுத்துவந்தார்.

கோபன்னவுக்கு வரவர ஸ்ரீராம பக்தி மேலிட்டு வந்ததால், அவர் தமக்குக் கிடைத்த உத்தியோகத்தையும் திரவியத்தையும் பொருட்படுத்தவே இல்லை. ஆதியில் இருந்ததுபோல் அவர் பாகவத கைங்கரியத்தி லீடுபட்டுத் தானமும் தருமமும் பரோப

காரமும் புரிந்துவந்தார் ; அடிக்கடி ஹரிப்பிரீதியாகத் ததியா ராதனை செய்து, பேரும் புகழும் பெருக விளங்கினர்.

இப்படியிருக்கையில், ஒருநாள் கோபன்னு அநேகம் பிரா மணர்களுக்குச் சமாராதனை செய்ய யத்தனித்து, அதற்கு வேண் டியவைகளை யெல்லாம் கவனித்துக்கொண் டிருந்தார். அவர் மனைவியும் அன்று போஜனசாலையில் கவனிக்க வேண்டியவை களைக் கவனித்துக்கொண் டிருந்தாள். சமையலெல்லாம் முடிந்து பிராமணர்கள் போஜனத்துக்கு உட்காரப்போகும் சமயத்தில், கோபன்னுவினுடைய குழந்தை, சமையலறைப் பக்கமோடி, அங்கு அடுப்பில் கொதித்துக் கொண்டிருந்த தைலப் பாத்திரத் தில் அகஸ்மாத்தாக விழுந்து உயிர் துறந்தது.

இதனைக் கோபன்னுவுடைய மனைவியும் சமையற்காரரில் சிலருமே அறிந்தனர். கோபன்னுவின் மனைவி மகா புத்திசாலி யாகையினால், இதனைக் கணவனுக்குத் தெரிவித்தால் ததியாராத னைக்கு விக்கினமுண்டாகுமென் றெண்ணி, ஒருவாறு தன் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு, சமையற்காரர்களை அழைத்து, “ மகன் இறந்த செய்தியை வெளியிட வேண்டாம்; வெளியிட்டால் பிராமண போஜனம் நின்றுவிடும் ” என்று கூறிக் குழந்தையை ஒரு பக்கத்தில் மறைத்து வைக்கத் திட்டப் படுத்திவிட்டு, அவர்களோடிருந்து எப்போதும்போல் கவனிக்க வேண்டியவைகளைக் கவனித்து வந்தாள்.

பிராமண போஜனம் நிர் விக்கினமாய் முடிந்தது. அப்பால் அவ்வம்மை மெதுவாய்த் தன் நாயகனை அழைத்து, மகன் இறந்த செய்தியைச் சொல்லி விசனப்பட்டாள். கோபன்னு அச்செய்தி கேட்டதும் பெருந்துயர மடைந்து, நாயகியைப் பார்த்து, “ என் கருத்தொத்த கண்மணியே, பிராமண போஜ னத்துக்கு யாதொரு விக்நமும் வாராமல் நடந்துகொண்ட உன்

புத்திசாலித் தனத்துக்கு மகிழ்கின்றேனாயினும் புத்திரசோகம் என் மார்பைப் பிளக்கின்றதே! ஆ என்ன செய்வேன்!'' என்று கண்களில் நீர் பெருக, இரு கரங்களையும் சிரசின்மேல் கூப்பிக் கொண்டு "ஏ ரகுகுல திலகா! இராவணாந்தகா! பக்த பரிபாலா! பரம காருண்ய சீலா! தாயும் தந்தையும் தேவரீரே என்றிருந்த எனக்கு இப்படிப்பட்ட துக்கம் சம்பவிக்கலாமா? ஒன்றுமறி யாத பாலகன் இப்படிப்பட்ட நல்ல சமயத்தில் மரண மடை வதா? இஃது உன் கருணைக் கழகா? இது முறையா? உன்னு டைய பக்தன் இப்படித் துயரப்படுவது உனக்குப் பெருமை யாகுமா? ஏ தயாநிதியே! முன் தாம் அயோத்தியில் அரசுபுரிந்த காலத்தில், ஒரு பிராமணக் குமாரன் மரணமடைய, அவன் தந்தை அந்தச் சவத்தைத் தம்முடைய ஸந்நிதியிலே கொண்டு வந்து போட்டு முறையிட, அவன்மீது இரக்கங்கொண்டு அந்தப் புத்திரனைப் பிழைப்பிக்கவில்லையா! ஏ ஜகந்நாதா! ஏ ஆபத் பாந் தவா! அடியேன் தேவரீருடைய தாஸன்; வேறு கதியில்லாதவன்; உம்மையே நம்பினவன். ஆகையால், அடியேனுக்கு இரங்கி இந்தப் பாலகனைப் பிழைப்பித் தருளவேண்டும்'' என்று முறையிட்டார்.

எங்கும் நிறைந்த பராபரனாகிய ஸ்ரீ ராமபிரான், கோபன்னா வின் மீது இரக்கங்கொண்டு அந்தக் குழந்தைக்கு உயிர் தந்தரு ளினார். குழந்தை உடனே தூங்கி எழுவதைப்போல் எழுந் திருந்தது. அது கண்டு கோபன்னாவும் அவர் மனைவியுமே யல் லாமல் எனையரும் ஸ்ரீ ராமபக்திப் பிரபாவத்தை உணர்ந்து பரம சந்தோஷ மடைந்தார்கள். கோபன்னா ஸ்ரீ ராமபிரானு டைய திருவடியைத் தியானித்துக் கொண்டே போஜன மருந் தினார். அவர் மனைவியும் மகனுக் குணவளித்துத் தானும் உண்டு சிரமபரிகாரம் செய்து கொண்டாள்.

## 4. ஸ்ரீ ராமபிரானுக்குக் கோவில் கட்டுதல்

இவ்வாறு கோபன்ன அநேக ஸத்கர்மங்களைச் செய்து கொண்டு வருகையில், சில வருஷங்களுக்குள் பொக்கிஷ சாலையில் ஆறு லக்ஷம் வராகன் சேர்ந்தது. இச்சமயத்தில் வழக்கம் போல் ஒருநாள் கோபன்ன அவ்வூரிலே விளங்கும் ஸ்ரீராமபிரானுடைய ஆலயத்திற்குச் சென்றார். அன்று அவர் ஸ்ரீ ராமபிரானைத் தரிசித்துப் பின் அவரைத் தியானித்துக்கொண் டிருக்கையில், அந்த ஆலயத்தை ஜீர்ணோத்தாரணம் செய்யவேண்டுமென்கிற எண்ணம் திடீரென அவர் மனத்திலுதித்தது.

இதற்கு வெகு காலத்திற்கு முன் பத்ராஜலத்திற்குச் சமீபத்தில் ஒரு கிராமத்தில் தம்மல தம்மக்காள் என்னுமொரு பெண்பிள்ளை வசித்து வந்தாள். அவள் நல்ல ஒழுக்கமுடையவளாயும் பகவானிடத்திலே பக்தியுடையவளாயு மிருந்தாள். அவளுடைய கனவில் ஒருநாள் ஸ்ரீ ராமபிரான் தோன்றி, "மாதே, நான் பத்ரகிரி சிகரத்திலிருக்கும் ஸ்ரீ ராமபிரான். நான் அங்கிருப்பதைப் பிரஜைகளுக்குத் தெரியப்படுத்தி என் ஆராதனையை நடத்திக்கொண்டு வா. அப்படிச் செய்வாயேயானால் நீ நல்ல பதவியை அடைவாய்" என்று சொல்லி மறைந்தார்.

மறுநாள் பொழுது விடிந்ததும் அந்த மாது, தான் கண்ட கனவை அவ்வூரா ரனைவர்க்கும் தெரிவித்து, அவர்களுடன் புறப்பட்டுப் பத்ரகிரிக்குப் போய், மலைமீதேறிப் பரிசோதித்துப் பார்த்தாள். அங்கே செடி கொடிகள் நிறைந்த ஓரிடத்தில் ஸீதா ராம லக்ஷ்மணர்களுடைய விக்கிரகமிருக்கக் கண்டு பரமானந்தமடைந்தாள். பிறகு எல்லோரும் சேர்ந்து அதற்குச் சம்ப்ரோக்ஷணை செய்வித்துப் பிரதிதினமும் பூஜை நடத்த ஏற்பாடு செய்தார்கள். அப்பால் அந்தக் கிராமாதிகாரியான பத்திரய்ய செட்டி என்பவன் கிராமத்தாரின் உதவியைக்கொண்டு

ஒரு சிறு ஆலயமும் அழகிய மண்டபமுங் கட்டி அதில் ஸ்ரீ ராமபிரானைப் பிரதிஷ்டை செய்வித்துப் பிரமோற்சவம் முதலியவைகளை நடத்திக்கொண்டு வந்தான்.

அந்த ஆலயந்தான் இது; கட்டி வெகுகால மானபடியால், சில பக்கங்களில் இடிந்தும் சரிந்தும் போயிருந்தது. அதனால், கோபன்னாவுக்கு அதனை நன்றாய்க் கட்டி முடிக்கவேண்டுமென்கிற சங்கற்பம் மனத்தில் உதித்தது. அவ்வெண்ண முதித்த மறுநாளே அவர் அவ்வூர்ப் பிரமுகர்களை வரவழைத்து ஒரு கூட்டங் கூட்டி, "அன்பர்களே! 'அரிது அரிது மானிடராத லரிது' என்று பெரியார் கூறியுள்ளபடி உலகத்தில் மானிடராய்ப் பிறப்ப தரிது. அப்படிப்பட்ட பிறப்பை யடைந்த நாம் மரண மடையுமுன், சகல லோக சரண்யனாகவும் சர்வாந்தர்யாமியாகவும் பக்த பரிபாலனாகவும் விளங்கும் மாதவனைச் சரண மடைந்து, அவருடைய ஆராதனையைத் தவறாமல் நாடோறும் செய்து, அவர்தம் திருவருட்செல்வம் பெற வழி தேடிக்கொள்ள வேண்டும். இல்லையானால், பிறப்பு இறப்பு என்கிற பெருங்கடலில் விழுந்து கரையேற மாட்டாமல் தவிக்க நேரிடும். ஆகையினால், ஆபத் பாந்தவரும் அநாதை ரக்ஷகருமாகிய ஸ்ரீ ராமச்சந்திரனுடைய திருவடியை மறவாதிருந்து உய்யும்வழி தேடிக்கொள்ள வேண்டியது நம்முடைய முதற் கடமையே யாகும். அந்த எண்ணத்தில் ஈடுபட்ட என்னுடைய மனத்தில், இந்த ஊரிலிருக்கும் ஸ்ரீ ராமபிரானுடைய ஆலயத்தை நன்றாய்க் கட்டி உந்நத நிலையில் வைக்க வேண்டுமென்கிற சங்கற்பம் ஒன்று அவருடைய திருவருளாலே உதித்திருக்கிறது. அந்த எனது சங்கற்பத்தை நிறைவேற்ற நீங்களனைவரும் உடனிருந்து வேண்டியவைகளை உதவி, ஸ்ரீ ராமபிரானுடைய ஆலயக் கைங்கரியபலனை அடையவேண்டுகிறேன்" என்றார்.

இதைக்கேட்டதும் அவர்களெல்லோரும் கோபன்னாவைக் கைகுவித்துக் கும்பிட்டு, "பிரபுவே, கரும்பு தின்னக் கூலியும் வேண்டுமா? தங்களுடைய சித்தப்படி எங்களா லியன்றதைச் செய்யக் காத்துக்கொண் டிருக்கிறோம். ஆலய சீர்திருத்தம் செய்யவேண்டியது மிகவும் அவசியமான ஒரு செய்கைதான். நாங்கள் இதைக்கேட்டு மிகவும் சந்தோஷப்படுகிறோம்" என்றனர்.

கோபன்னா, "நல்லது சந்தோஷம்! இனிச் சிற்பிகளை வரவழைத்துச் சீக்கிரம் வேலை தொடங்குகிறேன்; போய் வாருங்கள்" என்று சொல்லி அவர்களை அனுப்பிவிட்டுத் தாமும் தம தில்லஞ் சென்று, அடுத்த நாளே அநேக வேலைக்காரர்களையும் சிற்பிகளையும் வரவழைத்து, ஆலயத் திருப்பணியை நடத்தத் தொடங்கினர்.

வேலை தொடங்கிக் கட்டடம் ஆக ஆகக் கோபன்னாவுடைய மனத்தில் ஆலய அமைப்பில் பலமாதிரியான நூதன எண்ணங்கள் உதித்தன. அவைகட்கேற்றபடி அவர் ஆலயக் கட்டடத்தை அமைக்கச் சிற்பிகளுக்கு உத்தரவிட்டுக் கொண்டும் வேண்டிய அளவு பொருள் செலவுசெய்து கொண்டும் வந்தார்.

அப்படிச்செய்து வருகையில், சில நாட்களுக் கெல்லாம் அவருடைய கைப்பொருள் முழுவதும் செலவழிந்துபோயிற்று. அப்பால், மேலும் பொருள் வேண்டியதா யிருந்தது. அது கண்டு ஊரிலுள்ளாரும் தம்மாலியன்றவரையில் பொருளுதவி செய்தனர். அதுவும் போதாமல் இன்னமும் வேண்டியதா யிருந்தபடியால் கோபன்னா 'இதற்கு என்ன செய்யலாம்' என்று நெடுநேரம் ஆலோசித்து முடிவில், பொக்கிஷத்தில் சேமிதமாயிருக்கும் நவாபினுடைய பொருளை எடுத்துச் செலவழிப்பதென்று துணிந்தார். அப்படிச் செய்வதால் நவாபுக்கும் அவருடைய

ஆட்சிக்கும் பெருங் கீர்த்தியும் புகழு முண்டென்று அவர் மனத்திற்குத் தோன்றிற்று.

இந்தத் தீர்மானத்தை அவர் முடிக்கவேண்டிய விதமெப்படி? நவாபினுடைய உத்தரவு பெற்றல்லவா செய்யவேண்டும்? அதுதானே முறை? அந்த முறையை இவர் ஏன் மேற்கொள்ளவில்லை? நவாபு வேறு மதஸ்தரானதினால், ஸ்ரீ ராமபிரானுடைய ஆலயக் கைங்கரியத்தின் அவசியத்தையும், அதனால் அவர் அடையக்கூடிய பலனையும் எடுத்து விளக்கி, அவரைத் தம் வழிக்குக் கொண்டுவருவது அசாத்தியமென்று கோபன்னுவுக்குத் தோன்றினமையால், நவாபுக்குத் தெரிவித்து உத்தரவு பெறாமலே அவர் பொருளைச் செலவழிக்கச் சிறிதும் அச்சமின்றித் துணிந்தார்.

அப்பால் ஆலய வேலை வெகு விரைவில் நடந்தது. சில நாட்களில் மண்டபங்களும், பிராகாரங்களும், கோபுரங்களும், விமானங்களும் இன்னும் பகவானுடைய கைங்கரியத்திற்கு அநுகூலமான இரதம், வாகனம், சத்ரசாமரங்கள், ஆபரணங்கள் முதலியனவும் செய்து முடிந்தன.

அந்த ஆலயம் மகா உந்நதமாயும் அழகாயும் அமைந்தது கண்டு யாவரும் சந்தோஷமடைந்தனர். கோபன்னுவும் கண்டு மகிழ்ந்து, பெரும் பொருள் செலவிட்டுக் கும்பாபிஷேகத்தைச் செய்து முடித்தார். அப்பால், அவர் முறைப்படி நடத்த வேண்டிய உற்சவங்களை நடத்திப் பரமானந்த பரிதராயிருந்தார். பத்ராஜலம், மகாவிஷ்ணு எழுந்தருளியுள்ள ஸ்ரீ வைகுண்டம் போல் விளங்கியது.

## 5. இராஜத்துரோகக் குற்றத்திற்கு உள்ளாதல்

இங்கிப்படி யிருக்கையில், ஐதராபாத்தில் கணக்கர்கள் இராஜ்யத்தின் வரவுசெலவுக் கணக்குகளைப் பரிசோதிக்கலாயி னர். அப்பொழுது பத்ராஜலத்திலிருந்து ஆறு லக்ஷம் வராகன் வசூலாகாம லிருப்பது தெரியவந்தது. அவர்கள் உடனே அந்த விஷயத்தை அமைச்சர்களாகிய அக்கன்ன, மாதன்ன என்பவர் களிடம் தெரிவித்தனர். அவர்கள் அதைக் கேட்டதும், 'ஆகா வந்தது மோசம்! கோபன்ன ஏதோ தவறு செய்துவிட்டான்' என்று நிச்சயித்துப் பெருங் கவலை யடைந்து, அதைப்பற்றி விசாரித்துவரத் தங்களுக்கு ஆப்தனை ஒருவனைக் கோபன்ன விடம் அனுப்பினார்கள்.

அவன் போய்க் கோபன்னவைக் கண்டு, "பகுதிப் பணத்தை ஏன் வசூலித் தனுப்பவில்லை?" என்று கேட்டான். கோபன்ன, சிறிதும் அச்சமில்லாமல் அவனைப் பார்த்து, "பகுதிப்பண மெல்லாம் வசூலாய் ஆறு லக்ஷம் வராகன் சேர்ந் திருந்தது. அந்தப் பொருளை ஸ்ரீ ராம கைங்கரியத்தில் செல விட்டுவிட்டேனதலால் அங்கே அனுப்பக் கூடவில்லை; சீக்கிரத் தில் எனக்குப் பகவானுடைய கடாக்ஷமுண்டாகும். உண்டான வளவில் பொருளைக் குறைவின்றிச் செலுத்தி விடுகிறேன். சிறி தும் ஆலோசிக்கவேண்டாம்" என்றார்.

இதைக் கேட்டதும் அந்த மனிதன் பெரு விந்தை யடைந்து, "அரசனுடைய உத்தரவின்றி அவருடைய பொரு ளைச் செலவழித்துவிட்டு, 'பகவானுடைய கடாக்ஷமுண்டா கும்; உண்டான வளவில் பொருளைக் குறைவின்றிச் செலுத்தி விடுகிறேன்!' என்று துணிவாய்க் கூறுகிறாரே, இவருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதுபோ லிருக்கிறது. இப்படியும் செய்யலாமா ஓர் அதிகாரி! இந்தச் செய்கைக்கு விலங்கல்லவா

தண்டனை" என்றெண்ணிக் கோபன்னாவை நோக்கி, "அரச னுடைய பொருளை உத்தரவின்றிச் செலவழித்தது முறை யல்லவே! இஃது ஏன் தங்களுக்குத் தோன்றாமற் போயிற்று?" என்று கேட்டான்.

கோபன்னா, "நண்பரே, இராஜ திரவியத்தை உத்தரவின் றிச் செலவழித்தல் கூடாதென்பதையும் அது முறையல்ல வென்பதையும் நானறிவேன். ஆயினும், ஆலயத்தைப் புதுப் பிக்க வேண்டுமென்கிற அவா என்னுள்ளத்தி லெழுந்தபடியால், ஸ்ரீ ராமபிரானுடைய பக்தியி லீடுபட்ட எனக்கு அந்த அவாவை நிறைவேற்றாம லிருக்க முடியவில்லை. அதனாலே தான் இராஜ திரவியத்தைச் செலவிட்டேன். இதனால் மகாராஜா வுக்கும் தேசத்துக்கும் சுகிர்த முண்டாகும். சிறிதும் ஆலோ சிக்க வேண்டாம். ஸ்ரீ ராமபிரானுடைய திருவருளினால் வெகு சீக்கிரத்தில் இந்த ஆறு லக்ஷம் வராகனையும் செலுத்தி விடு கிறேன்" என்று சொல்லி யனுப்பினார்.

அவன் பெருவியப்புடன் ஐதராபாத்துக்குத் திரும்பிச் சென்று, மந்திரிகளிடம் கோபன்னா செய்த செய்கையையும் அவருடைய மன நிலையையும்பற்றிக் கூறினான். அவர்கள் அது கேட்டு, "தெய்வப்பித்துப் பிடித்த கோபன்னாவை நாம் இப்படி ஓர் அதிகாரியாக்கினது ஆலோசனை யில்லாத செய்கை. இனி யென்ன செய்வது? நவாபு இதை அறிவாராயின் நம்மீதுதான் கோபங் கொள்வார். இவனுக்கு இப்படி மதிபோகுமா? நல்ல புத்திசாலி யென்று எண்ணினோமே! அடடா! பிறர் பொரு ளைச் செலவழிப்பது தவறென்பதை இவன் அறியாமற் போன தேனோ?" என்று ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டு பெருங் கவலையிலாழ்ந்து, "நவாபினிடம் இதை எப்படிக் கூறுவது?

அவர்க்கு என்ன சமாதானம் சொல்வது?" என்று தெரியாதவர்களாய் மயங்கியிருந்தனர்.

இவர்களிப்படி யிருக்கையில், நகர உத்தியோகஸ்தர்களிலே சிலர் தானேஷாவினிடம் சென்று "கோபன்ன இராஜாங்க திரவியத்தை ஏராளமாகச் செலவிட்டுக் கோவில் கட்டிப் பெருமகிழ்ச்சியுட னிருக்கிறார். அடாத செய்கை இது! துரோகச் செய்கை இது! இதுவரையில் எவரும் செய்யத் துணிந்திராத செய்கை இது!" என்று தெரிவித்தனர்.

இதைக் கேட்டதும் தானேஷா கடுமையான கோபங் கொண்டு தம் அமைச்சர்களை வரவழைத்து, "கேட்டீர்களா உங்கள் கோபன்னவின் செய்கையை? மகா யோக்கியனைப்போல் இதுவரையில் இவன் நடந்து வந்தது, இப்படிப்பட்ட ஒரு பெருத்த துரோகம் செய்யவே என்று தீர்மானிக்கிறேன்." அமைச்சர்களே, இச்சமயம் உங்களுடைய துணையிருக்கிறதென் றெண்ணி இப்படிப்பட்ட செய்கையில் துணிந்து இறங்கினன் போலும். நல்லது, அவனை வெகு சீக்கிரத்தில் இங்கே வரவழையுங்கள்" என்று கட்டளையிட் டனுப்பினர்.

அமைச்சர்கள் இப்பொழுது சொல்ல முடியாத வருத்தமடைந்து, "பாவி தான் கெட்டது மல்லாமல் நமக்கும் கெட்ட பேர் வாங்கிவைத்தானே! இவனை என்ன செய்தால்தா னாகாது?" என்றெண்ணி விசனப்பட்டு, இரண்டு துருக்கச் சிபாய்மார்களை வரவழைத்து, "நீங்கள் பத்ராஜலம் போய்ச் சிறிதும் தாக்ஷண்யம் பாராமல் கோபன்னவைக் கைப்பிடியாய்க் கொண்டுவந்து இராஜ சபையில் ஆஜர்ப்படுத்த வேண்டும்" என்று கூறி அவர்களிடம் ஒரு லிகிதம் கொடுத்தனுப்பினர்.

வழக்கம்போல் கோபன்ன பத்ராஜலத்தில் தமது கச்சேரியிலிருந்து அலுவலைக் கவனித்துக் கொண்டிருந்தார். அச்சமயம்

ஐதராபாத்திலிருந்து புறப்பட்ட துருக்கச் சிபாய்மார்கள் அங்கே சென்று கோபன்னாவைக் கண்டு பணிந்து, அமைச்ச ரனுப்பிய லிகிதத்தை நீட்டினர். கோபன்னா அதை வாங்கிப் படித்துப்பார்த்து, ஆலோசித்தவாறு சற்றுநேர மிருந்தார். சிபாய்கள், "இராஜாங்க திரவியத்தை உமதிஷ்டப்படி செலவுசெய்து மகிழ்ந்திருக்கும் உம்மை நாங்கள் இன்று இலகுவில் விட்டுச் செல்லோம். உம்மைக் கைப்பிடியாய்ப் பிடித்துக்கொண்டு வரும்படி உத்தரவு எங்களுக்கு. நவாபு உம்மிடம் பெருங் கோபங் கொண்டிருக்கிறார். 'வேந்தன் சீறில் ஆந்துணையில்லை' என்பதை நீர் விரைவிலே காண்பீர்! புறப்படும் தாமதியாமல். நினைப்பதற்கும் அஞ்சதக்க கொடிய இராஜத் துரோகம் செய்த உமக்கு எப்படி மன்னிப்பேற்படும்?" என்று கூறி உருவின கத்தியுடன் நின்று அதட்டினர்.

கோபன்னா, பெருமூச்செறிந்து தலை நிமிர்ந்து ஸ்ரீ ராம் பிரானைத் தியானித்து, சகல பாரங்களையும் அவர்மே லிட்டு, "ஜகத் ரக்ஷகரே, ஆதிநாள் தொடங்கி அடியேன் உமது திருவடியையே துணையாகப் பிடித்தேன். பரம கருணா நிதியே, சரணாகத விருது தேவரீருக்கே தவிர வேறு எவருக்குமில்லை. எவ்விதமான துன்பம் வந்தாலும் அடியேன் உமது சரணாரவிந்த தியானபரனாயிருந்து பொறுத்துக்கொண் டிருப்பேன். இதோ உமது திருவருளின் துணைகொண்டு ஐதராபாத்துக்குச் செல்கிறேன். தேவரீர் தமது தம்பியுடன் வந்து அடியேனை இரக்ஷிக்கவேண்டும்" என்று ஜகத் பிரபுவாகிய ஸ்ரீ ராமச்சந்திர பிரபுவைத் துதித்துப் பிரார்த்தனை செய்துகொண்டு கச்சேரியை விட்டெழுந்து, சிபாய்களை நோக்கி "வாருங்கள் போகலாம்; இதோ வீட்டுவரையில் போய்விட்டு வருகிறேன்" என்று கூறி நடந்தார்.

சிபாய்களிருவரும் உருவினகத்தியுடன் இருமருங்கும் காவலாக வரக் கோபன்ன தமது வீட்டிற்குச் சென்று, மனைவி யிடம் செய்தி தெரிவித்தார். மனைவி நல்ல புத்திசாலியாயினும் அரசனால் தன் கணவனுக்கு என்ன தண்டனை கிடைக்குமோ என்று பயந்து கண் கலங்கினாள். கோபன்ன "பிரியே, கண் கலங்காதே! அஞ்சாதே! வருவதை நினைந்து மனமஞ்சுவது பேதைமையாகும். நாம் செய்த செய்கையானது அரசனையும் நல்லகதியில் சேர்க்கவல்லது. இதனை அரசன் உணர்ந்து நம் மிடம் நல்ல அபிப்பிராயம் கொள்ளும்படி ஸ்ரீ ராமபிரான் விரை வில் திருவருள் புரிவார். பக்தனை அவர் கைவிடவே மாட்டார். பரிசுத்தமான ஹிருதயமுள்ள வரையில் நமக்கு அச்சமில்லை. பகவத் பக்தியும், பொறுமையும், இரக்கமும், அடக்கமும், தன் னைப்போல் பிறரையுங் கருதும் தூயகுணமும் உடையவன், உலகத்தில் எப்படிப்பட்ட நெஞ்சம் படைத்தவர்களையும் வெகு இலகுவிலே வெல்வான். எப்போதும் அவன் பின்னே ஜயலட்சுமி தொடர்ந்து செல்வாள். ஆதலின் நீ அஞ்சாதே! நான் போய்வரு கிறேன்" என்று கூறித் தம்முடைய் புதல்வனை யெடுத்து மார் போடணைத்து முத்தமிட்டு, "கண்மணி, நான் ஐதராபாத்துக்குப் போய் வருகிறேன். நீ உன் தாயார் சொல்லுகிறபடி நடந்து உன் பாடங்களைப் படித்துக்கொண்டும் விளையாடிக்கொண்டும் இரு. துஷ்டப் பிள்ளைகளோடு சேராதே! உன் தாயாருக்கு விருப்பமில்லாத காரியத்தைச் செய்யாதே! நாள்தோறும் காலையி லெழுந்ததும் நான் உனக்குச் சொல்லிக் கொடுத்தபடி ஸ்ரீ ராம பிரானைத் துதித்து நமஸ்காரஞ்செய்து, பின் உன் அலுவலைக் கவனித்து வா. எல்லோருக்கும் நல்லவனா யிரு. பெரியோர்கள் எவரேனும் நம்முடைய வீட்டிற்கு வந்தால், அவர்களிடம் பணி வாயிருந்து அவர்கள் சொல்வதைக் கேட்டு அதன்படி நட.

நான் போய் வருகிறேன்" என்று விடைகொண்டு சிபாய்களுடன் ஐதராபாத்துக்குப் புறப்பட்டுச் சென்றார்.

---

## 6. தண்டனையடைதல்

கோபன்ன ஐதராபாத்துக்குப் போனதும் நேரே நவாபுவின் கொலுமண்டபத்திற்குச் சென்று, நவாபிற்குச் செலுத்த வேண்டிய மரியாதைகளுடன் தமது வரவைத் தெரிவித்துக் கொண்டார். நவாபுவினுடைய கொலுமண்டபத்தில் அக்கன்ன மாதன்ன இருவருமே யன்றி இராஜாங்க உத்தியோகஸ்தர்களில் வேறு சிலரும் அச்சமயம் வீற்றிருந்தனர். அக்கன்ன, மாதன்ன இருவரும் கோபன்னவின்மேல் பெருங் கோபங்கொண்டிருந்தாராதலால் அவர்கள் அவரைத் தலைநிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை. கோபன்ன மாத்திரம் அவர்களுக்கு வந்தனஞ் செய்து நின்றார்.

நவாபு கோபன்னவை வெகு கோபமாய்க் கண்கள் சிவக்க விழித்துப் பார்த்து, "இந்நாள் வரையில் வசூலித்த பகுதிப் பணத்தை யெல்லாம் என்ன செய்தீர்? உடனே தாமதமின்றிப் பணத்தைச் செலுத்தும். உம்மைப் பரம யோக்கியரென்றும், தெய்வபக்தி யுடையவரென்றும் சிபார்சு செய்த உமது மாதுலர்க்கு நல்ல பேர் வாங்கி வைத்தீர்! இப்படிப்பட்ட யோக்கியர்தாம் நமக்கு வேண்டும்! மெச்சினேன் உம்மை!" என்று கூறிச் சிரமசைத்தார்.

கோபன்ன நவாபை மிக்வும் சாந்தமாகப் பார்த்து, "பிரபுவே, உமது திரவியத்தை நான் எடுத்துக் கொள்ளவில்லை; வீணாக்கவுமில்லை; பகவத் விஷயமாகச் செலவிட்டு உமக்கும் பெருங் கீர்த்தி யுண்டாக்கி யிருக்கிறேன்" என்றார்.

நவாபு இதைக் கேட்டதும் நகைத்து, "நல்லது செய்தீர்! என் பொருளை என்னைக் கேளாமல் செலவு செய்வதற்கு உமக்

கென்ன அதிகாரமிருக்கிறது ? உமது கஷ்டார்ஜித திரவியத்தை ஈசுவரப் பிரீதியாகச் செலவு செய்தால் நீர் பயனடைதல் கூடும். பிறர் பொருளை இப்படிச் செலவழிப்பதால் உமக்கென்ன பயனுண்டாகும்? உமக்கேன் இப்படிப் புத்தி போயிற்று ?" என்று கூறினர்.

கோபன்ன, "எனக்கு ஈசுவர கைங்கரியம் செய்யவேண்டுமென்கிற சங்கற்பம் உதித்தது. உதித்தவுடன் அதனை முடிக்கப் பேரவா உண்டாயிற்று. இந்தத் தேகம் அநித்தியமாதலால், அந்த அவாவை நிறைவேற்றுவதில் தங்களுடைய அநுமதி பெறுமலே பிரவேசித்து முடித்து விட்டேன். தமது பொருளால் அமைக்கப்பட்டுள்ள கோபுரங்களும், பிராகாரங்களும், மண்டபங்களும் தங்களுடைய பெயரையும் புகழையும் இந்த உலகமுள்ள வரையில் நிலைநாட்டும். தவிரவும், நான் இந்த ஆலயக் கைங்கரியத்திற்காகச் செலவிட்ட பொருள் தம்முடைய ஒரு நாள் செலவிற்குக்கூட ஈடாகாது " என்றார்.

நவாபு இதைக்கேட்டதும் பெருமூச்சுடன் கோபன்னவை விழித்துப் பார்த்து, " நீர் யாருடைய முன்னின்று பேசுகிறீர் இப்போது? அதாவது தெரியுமா உமக்கு?—என்ன இது ? வீண் அகடவிகடம் பேசுகிறீர்? மதிமயக்க முண்டோ உமக்கு? எமது கருத்தை அறியீர் போலும்?" என்றார்.

கோபன்ன, " பிரபுவே, தாம் நியமித்த வேலையில் நியமந் தவருமல் இருந்து வந்தேன் ; ஏழையின் மனம் பகவத் பக்தியிலீடுபட்டு நிற்கின்றமையினல், புல்லும் செடியும் மண்டி இடிந்து கிடந்த ஆலயத்தைப் புதுக்கினேன். அதனை நான் உம்முடைய ஆளாயிருந்து செய்துவந்தேனகையால் அந்தத் தருமம் உமக்கே உரியதாம் " என்றார்.

இதைக் கேட்டதும் நவாபினுடைய நெஞ்சிற் குடிகொண்

டிருந்த கோபங் கொஞ்சந் தணிந்தது. ஆயினும் அவர் சற்றுலோசித்து, "இவன் நமக்குப் பெருங் கீர்த்தியைத் தேடி வைத்தானெனினும் இவனை இக்குற்றத்திற்காகத் தண்டியாமல் விடுவது கூடாது. விட்டுவிட்டால் இராஜாங்க திரவியத்தையெடுத்து ஏனைய உத்தியயோகஸ்தர்களும் இப்படிச் செலவு செய்யத் துணிந்து விடுவார்கள். ஆதலின் இவனைத் தண்டிப்பதே முறை" என்றெண்ணி, "கோபன்னரே, எனக்குப் புகழ்ச்சி தருவதாயினும் சரி, இகழ்ச்சி தருவதாயினும் சரி, என்னுடைய உத்தியோகஸ்தராகிய நீர் என் உத்தரவு பெறுமல் என் பொருளை எப்படிச் செலவு செய்தல் கூடும்? தவிர, ஆறு லக்ஷம் வராகனை எமது அநுமதியின்றி உமக்கு இஷ்டமான வழியில் செலவழித்த உம்மை நான் என்ன செய்தால்தாஞகாது? இருக்கட்டும்; ஒன்று சொல்லுகிறேன். அதன்படி செய்யும். இன்றுமுதல் எட்டு நாட்களுக்குள் நீர் அந்தப் பொருளைச் செலுத்திவிட வேண்டும்; இன்றேல் பொருளைச் செலுத்தும் வரையில் நீர் சிறைச்சாலையிலேயே அடைபட்டுக் கிடக்கவேண்டும்" என்று அவருக்குத் தண்டனை விதித்துச் சபையை விட்டு எழுந்து சென்றார்.

சிபாய்கள் உடனே கோபன்னாவைச் சிறைச்சாலைக்கு அழைத்துக்கொண்டு சென்றனர். அக்கன்னா மாதன்னா இருவரும் குனிந்த தலை நிமிராமல் தம் வீடுபோய்ச் சேர்ந்தனர். கோபன்னா சிறைக்குப் போகும்வழியில் அவருடைய பரிதாப நிலையைக் கண்ட ஜனங்கள், "ஆகா! பகவத் பக்தியில் ஈடுபட்ட இந்த மகா புருஷனுக்கு இப்படிப்பட்ட தண்டனை கிடைக்க வேண்டுமா? பகவானுக்குக் கண்ணில்லை போலும்! அருளில்லைபோலும்!" என்று பேசிக்கொண்டார்கள்.

வேறு சிலர், "இவருடைய மதியை என்னென்று சொல்லு

வது? பகுதிப் பணத்தை வசூலித்து அவ்வப்போது இங்கே பொக்கிஷத்திற்கு அனுப்பவேண்டிய தல்லவா இவருடைய கடமை. அதை விட்டு இவர் இப்படித் துரோகம் செய்யலாமா? இராஜத் துரோகம் பொல்லாதல்லவா? கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைத்த கதையாக வல்லவா இருக்கிறது இவர் செய்கை? பத்ராஜலத்தில் தாசில்தாராக இருந் தவர்களுக்குள்ளே இவர்க்குத்தான் நல்லபே ரிருந்தது. நவாபு அவர்களும் இவரிடத்தில் நல்ல மதிப்பு வைத்திருந்ததாகச் சொல்லுவார்கள். பொல்லாத வேளை போலும் இவர்க்கு இப் படிப் புத்திபோனது" என்றனர்.

வேறு சிலர், "இவர் நல்ல அறிஞர்; மகான்; பகவா னுடைய பக்தியி லீடுபட்டவர்; தம்முயிர்போல் பிறர் நன் மையை நாடி உழைக்கும் பெரியார்; சத்யசீலர். ஆகையினுல், இவர் இப்படிப்பட்ட செய்கையை ஏதேனும் ஒரு நல்ல காரண மின்றித் துணிந்து செய்யார். தக்க காரணமிருக்க வேண்டு மிதற்கு. இதனுல் நவாபுவுக்கும் ஏதேனும் நன்மை யேற்படு மென்பதில் ஐயமில்லை. பெரியோர்கள் எப்பொழுதும் ஆலோ சனையின்றி ஒரு காரியத்தைச் செய்யமாட்டார்கள். அவர்கள் செய்யும் செய்கை, முதலில் நம்போன்றவர்க்குத் தகாதகாரிய மாகத் தோன்றினுலும் முடிவில் அது தக்க செய்கையாகவே தெரியவரும். இவருக்குப் பகவான் ஸ்ரீ ராமச்சந்திர பிரபு இரங்கி அருள் புரிவார். இது திண்ணம்" என்றனர்.

## 7. நவாபு ராமதாஸரின் மகிமை அறிதல்

இவ்வாறு ஜனங்கள் பேசிக்கொண்டிருக்கையில், கோபன்ன தமது சித்தத்தை ஸ்ரீ ராமபிரானிடம் வைத்து, அவருடைய நாமஸ்மரணை செய்துகொண்டே சிறைச்சாலையினுள் புகுந்தார். ஒருநாள் கழிந்தது; இரண்டு நாட்கள் கழிந்தன; எட்டு நாட்களும் கழிந்தன. கோபன்னவுக்கு யார் பணங்கொடுப்பார்கள்? ஒருவரும் கொடுக்க முன்வராமையினால் நவாபுக்குக் கோபமுண்டாகிக் கோபன்னவைப் பலவாறு ஹிம்சிக்கும்படி ஏவலாளர்க்கு ஆக்ஞாபித்தார்.

அப்பால் கோபன்னவுக்கு, உப்பு அதிகம் கலந்து அன்னமளிக்கப்பட்டது. அதையும் அவர் மறுக்காமல் புசித்து வந்தார். சேவகர்கள் அவரைப் பிரம்புகொண்டும், கொரடாக் கொண்டும் வருத்தத் தலைப்பட்டனர். அடி பொறுக்காமல் கோபன்ன கண்ணீர்விட்டழுது ஸ்ரீ ராமபிரானிடம் முறையிட்டார். அப்பால் அவரை அடிக்கும் அடிகளெல்லாம் சிபாய்களின் மேலேயே பட்டன. அதுகண்டு சிபாய்கள் ஆச்சரியமடைந்து அவரை உண்மையில் ஓர் மகானெனக் கருதினர்.

கோபன்ன சதாகாலமும் ஸ்ரீ ராமநாம மகிமையைக் கொண்டாடிப் பாடுவார்; சிறைச்சாலைக்குள்ளேயே ஆடுவார்; சில சமயம் தம்மை மறந்து ஆநந்திப்பார்; தம்மிடம் வந்து பேசும் காவலாளிகளுக்கும் ஸ்ரீ ராமநாமப் பிரபாவத்தை எடுத்துப்பேசி அவர்களையும் ஸ்ரீ ராமபக்தியி லீடுபடும்படி செய்வார்.

இவ்வாறு கோபன்ன நாட்களைக் கழித்துக்கொண்டிருந்தாலும், பொருள் கொடாமையினால் நவாபு இன்னும் கடுமையான தண்டனை விதித்தார். அதன்மேல், சேவகர்கள் தேள்களையும் நண்டுவாய்க்காலிகளையும் கோபன்னவின்மேலே விட்டுக் கொட்

டும்படி செய்தனர். அப்பொழுது கோபன்னு, ஸ்ரீ ராமநாம சங்கீர்த்தனம் பாடித் துதித்தார். ஸ்ரீ ராமபிரானுடைய கடாக்ஷத்தால் அவர் ஒரு தொந்தரவு மடையவில்லை. அதுகண்ட சேவகர்கள் அவர்மீது சர்ப்பங்களை ஏவிக் கடிக்கச் செய்தனர். அப்பொழுதும் கோபன்னு பகவானைக் குறித்துப் பாடி அந்தத் தொந்தரவையும் விலக்கிக்கொண்டார்.

கோபன்னு பரம பாகவத சிரோமணியல்லவா? இவருக்குப் பகவான் இச் சமயத்தில் இரங்காமலிருப்பாரா? இப்படி எவ்விதமான தொந்தரவும் கோபன்னுவைப் பீடிக்காமலிருப்பதைச் சேவகர்கள் நவாபினிடம் தெரிவித்தார்கள். நவாபு "இவன் ஏதோ மந்திரபலத்தினுல் இவ்வாறு தப்பித்துக்கொள்கிறுன்" என்று கோபங்கொண்டு, சிறிதும் இரக்கமின்றி அவருக்கு உணவில் விஷங்கலந்து போடும்படி ஆணையிட்டார்.

கோபன்னுவுக்கு இச்செய்தி தெரிந்தது. அவர், உடனே பகவானை நினைந்து மனமுருகி நின்று துதித்து, "ஹே பரம கருணு நிதியே! சிறைச்சாலையில் கிடந்து அடியேன் இப்படித் துன்பப்படுவது உமக்கு நியாயமாகுமா? நீர் இரக்கமில்லாதவரா? அடியார்க் கடியனுய் அநுக்கிரகிக்கும் அமல மூர்த்தியல்லவா? ஆபத்பாந்தவ ராயிற்றே! அநாத ரக்ஷகராயிற்றே! இராஜாங்கத்துப் பொருளை நானென்ன செய்தேன்? உம்முடைய ஆலயங் கட்டுவதற்கும், உமக்கும் தேவியாருக்கும் ஆபரணங்கள் பூட்டுவதற்கும், உற்சவம் கொண்டாடுவதற்குந் தானே உமது திருவடிக் கடிமையாகிய நான் செலவழித்தேன்? இப்படிச் செலவிட்டது ஸத்விஷயந்தானே? ஸத் விஷயத்தில் ஈடுபட்டவன் இப்படிப்பட்ட தொந்தரவை யடைந்தால் உமக்கு என்ன பெருமை ஏற்படும்? 'கோபன்னு ஸ்ரீ ராமபிரானுக்குக் கோவில் கட்டிப் பட்ட பாடு தெரியாதா?' என்று சாதாரண

ஜனங்கள் உம்மை இகழமாட்டார்களா ? அடியேனாகிய நான் பெருமையடைவது உமக்குப் பெருமையே! இன்னும் எத்தனை காலம் நான் இப்படி அவஸ்தைப்பட வேண்டுமோ தெரியவில்லையே ; இதோ விஷங்கொடுக்கப் போகிறார்களே !'' என்று தம் குறைகளைக் கூறிக் கதறிவிட்டு, ஜகதம்பிகையாகிய ஸீதா தேவியை நினைத்துத் துதித்து வருந்துவாராயினர்.

" அம்மணீ ! தாயே ! பரதேவதே ! ஸீதாதேவி ! என் தந்தையாகிய ஸ்ரீ ராமபிரானுக்கு என்னிடம் இரக்கமுண்டாகாவிட்டாலும் என் அன்னையாராகிய தாம் என்னைக் கவனியாமலிருப்பது அழகாகுமா ? சேய்க்கிரங்காத் தாயுமுண்டோ? இவ்வேழை அழுது அலறுவது உம்முடைய செவியிற் படவில்லையோ ? இது நியாயமாகுமா ? உமக்கு நான் காசுமாலையும், கல் லிழைத்த பதக்கமும், வைரம் வைத்த கம்மலும், இரத்தின ஜடை சிங்காரமும் செய்து போடவில்லையா ? நீங்கள் என்னை மறந்தாலும் உங்கள்மீது பிரகாசிக்கும் ஆபரணங்கள் உங்களுக்கு அடியேனிருக்கும் நிலைமையைப் பற்றி ஞாபகப்படுத்துமே ! அப்படியிருந்தும் என்னிடம் தாமும் பராமுகமாயிருப்பதேன் ?''—என்று கதறினார்.

இவர் இப்படிக் கதறுவதை யறிந்த ஸீதாபிராட்டியார் ஸ்ரீராமபிரானை நோக்கி ''நாதா, தேவரீர் பக்த போஷகரென்றும், பதித பாவனரென்றும், ஆபத் சகாயரென்றும், சரணாகத ரக்ஷகரென்றும் திருநாமங்களை வைத்துக்கொண்டு, நம்மையே சரணமாக அடைந்து நமக்கு ஆலயங் கட்டுவித்த பரமபக்தனாகிய கோபன்னாவை நெடுநாட்களாகத் துன்பத்திலே கிடந்து வருந்தும்படி கவனியாமலிருப்பது தகுமா ?'' என்று வினவினர்.

பிராட்டியார் இவ்வாறு கூறவே, ஸ்ரீராமபிரான் புன்னகை புரிந்து " கண்மணி, இதோ அவன் குறையை நீக்குகிறேன் ''

என்று லக்ஷ்மணரை அழைத்து, அவரைப் பார்த்து, "கோபன்ன நவாபுவுக்குச் செலுத்தவேண்டிய பொருளைக் கணக்குப்படி எடுத்துக்கொண்டு புறப்படு; ஐதராபாத்துக்குப் போய் நவாபி னிடம் பொருளைச் செலுத்தி அவனைச் சிறையினின்றும் மீட்டு வருவோம்" என்றனர். லக்ஷ்மணர் "இதோ புறப்பட் டேன்; ஆக்ஞை" எனச் சென்றார்.

இந்தச் சமயத்திலெல்லாம் கோபன்னவுக்குச் சிறைச்சாலை அதிகாரிகள் சோற்றில் விஷங்கலந்து படைத்தனர். கோபன்ன ஸ்ரீ ராமபிரானைத் தியானித்துக்கொண்டே பெருந்துணிவுடன் அதனை உண்டார். அவர்க்கு அதனால் ஒருவிதத் துன்பமும் ஏற்படவில்லை. இதைக் கண்டு அங்கிருந்தாரனைவரும் வியப் படைந்து, "இவன் எப்படிப்பட்ட பிறப்போ தெரியவில்லை. தெய்வப் பிறப்புபோலும்" என்று பேசிக் கொண்டனர்.

ஆயினும், ஒருநாளிரவு கோபன்ன வெறுப்படைந்து "இனி நம்முடைய உயிரை வைத்துக்கொண் டிருப்பதிற் பய னில்லை; உயிரை மாய்த்துக் கொள்வதே நாம் செய்யத் தக்கது. ஸ்ரீ ராமபிரானுக்கு என்மீது இரக்க முண்டாகவில்லைபோலும்" என்றெண்ணி விசனத்துடன் தம்முயிரை மாய்த்துக்கொள்ள யத்தனித்தார்.

அன்றிரவே ஸ்ரீ ராமபிரான் லக்ஷ்மணனோடு புறப்பட்டு நவாபினிடம் சென்றார். அந்த வேளையில் நவாபு, தம்மிடம் இரண்டு சேவகர்கள் வந்து கோபன்ன செலுத்த வேண்டிய பொருளைச் செலுத்திவிட்டுத் தமது கைச்சாத்துப் பெற்றுக் கொண்டு போனதாகக் கனவுகண்டு விழித்தவராய்த் தம் முடைய மனைவியை எழுப்பித் தாம் கண்ட கனவைச் சொல் லிக்கொண் டிருந்தார்.

ஸ்ரீ ராம லக்ஷ்மணர்கள் இச்சமயத்தில் காவல்களை யெல் லாங் கடந்து அரண்மனைக்குள் பிரவேசித்து, மெதுவாய் அந்தப்

புரம் சென்று கதவைத் தட்டி, "கோபன்ன உமக்குச் செலுத்த வேண்டிய பொருளைக் கொண்டு வந்திருக்கிறோம்" என்றனர்.

நவாபு ஆச்சரியத்துடன் மஞ்சத்தை விட்டெழுந்து கதவைத் திறந்தார். இரண்டுபேர் கண்களைப் பறிக்கும் திவ்விய தேஜஸுடன் நிற்பதைக்கண்டு திடுக்கிட்டு வியப்புடன் அவர்களை நோக்கி "நீங்கள் யார்? எவ்விடமிருந்து வருகின்றீர்கள்? உங்களை யார் அனுப்பியது? எப்படிக் காவலைக் கடந்து இந்த இடத்துக்கு வந்தீர்கள்?" என்று கேட்டார்.

லக்ஷ்மணர்: "வேந்தே, நாங்களிருவரும் பத்ராஜலம் தாசில்தாராகிய கோபன்னவுடைய சேவகர்கள்; அவர் செலுத்த வேண்டிய பொருளைச் செலுத்தி அவரைச் சிறைமீட்க வந்தோம். காவலாளிகள் நாங்கள் வந்ததைக் கவனித்திலர். இதோ திரவியமிருக்கிறது; பெற்றுக்கொண்டு கைச்சாத்துக் கொடுங்கள்"—என்றார்.

நவாபு பின்னும் அவர்களைப் பார்த்து, "உங்கள் பெயரென்ன? குலமென்ன?" என்று கேட்டார். ஸ்ரீ ராமபிரான், "வேந்தே, என் பெயர் ராமோஜி. இளையவனாகிய இவன் பெயர் லக்ஷ்மோஜி. நாங்கள் சூரியகுலத்திலே உதித்தவர்கள்" என்று சொல்ல, நவாபு கேட்டுத் தமக்குள் "இவர்களுடைய தேஜஸும் இவர்களுடைய இனிய வார்த்தையும் என்னை வெட்கப்படுத்துகின்றன. கோபன்னவுடைய சேவகர்களா இவர்கள்! எனக்கு அப்படித் தோன்றவில்லையே! யாராயிருந்தாலென்ன? நமக்குப் பொருள் வருகிறது; பெற்றுக்கொள்வோம்" என்றெண்ணி அவர்களிடமிருந்து பொருளைப் பெற்றுக்கொண்டு தமது கைச்சாத்திட்டு ஒரு சீட்டு கொடுத்தார்.

ஸ்ரீ ராமபிரான் அதனைப் பெற்றுக்கொண்டு, லக்ஷ்மணனுடன் வெளியே வந்து, "நான் கோபன்னவிருக்கும் சிறைச்

சாலைக்குத் தானேஷாவைப்போல் வேஷங்கொண்டு போய்வருகிறேன். நீ பத்ராஜலத்துக்குப் போ" என்று கூறி லக்ஷ்மணனை அனுப்பிவிட்டு, ஸ்ரீ ராமபிரான் தானேஷா வேஷம் பூண்டு சிறைச்சாலைக்குச் சென்று கோபன்னாமுன் நின்றார். கோபன்னா அப்பொழுது "அந்தோ! ஜகத்ரக்ஷகராகிய ஸ்ரீ ராமபிரான் என்மீது இன்னும் இரக்கங்கொள்ள வில்லையே! என் செய்வேன். பக்தர்க்கிரங்கும் பரமகாருண்ய சீலன் என்னும் பெயர் இவர்க்கு எப்படி ஏற்பட்டதோ தெரியவில்லையே? இவர்தானா சரணாகத ரக்ஷகர்? இவரை யடைந்தவன் கதி இப்படியா முடியவேண்டும்?

'வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில'

என்று கூறுகிறார்களே, அது பொய்போ லிருக்கிறது?" என்று நிந்தாஸ்துதி செய்து தம் உயிரைவிடச் சித்தமானார்.

ஸ்ரீ ராமபிரான் அந்நிலையிலிருந்த கோபன்னாமுன் தோன்றி, அவருடைய பக்திக்கு மகிழ்ந்து, "ஓ ராமதாஸரே!" என்று பெயரிட்டழைத்து "நீர் எமக்குக் கொடுக்கவேண்டிய பொருள் வந்து சேர்ந்தது. இதோ கைச்சாத்து இருக்கிறது; பெற்றுக்கொள்ளும்" என்று சொல்லி மறைந்தார்.

இனி நாமும் கோபன்னாவை ராமதாஸர் என்றே அழைப்போம். பகவான் இப்படி மறையவே, ராமதாஸர் ஆச்சரியமடைந்து, இது ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தியின் திருவிளையாடல் எனக் கண்டு அவரைத் தியானித்து, "ஏ பரந்தாமா! பிரமதேவர் முதலியவர்களும் உமது மாயையைக் கடப்ப தரிதென்று சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. அப்படியிருக்க அடியேன் எம்மாத்திரம்? கருணையோடு எளியேனையாண்ட உமக்கு நான் செய்யும் கைம்மாறு யாதுளது?"—என்று கருதி மகிழ்ந்தார்.

ஸ்ரீ ராமபிரான் லக்ஷ்மணனோடு வந்து தம்மிடம் பொருள் கொடுத்ததும், தாம் அவரிடம் பொருள் பெற்றுக் கொண்டு கைச்சாத்து தந்ததும், தானேஷாவுக்கு ஒரு மயக் கத்திலே நடந்தவைபோ லிருந்தன. ஆயினும், கைவசம் பொரு ளிருந்தமையால் வியப்புற்று, தம்முடைய மனைவியை நோக்கி, "இங்கே வந்து என்னிடம் பொருள் கொடுத்துச் சென்றவர் கள், கோபன்னு வழிபடும் தெய்வத்தின் பிரதிநிதிகளாகவே இருக்கவேண்டுமென்று நினைக்கிறேன்; இல்லாவிட்டால் நமது கட்டுக்காவல்களைக் கடந்து, அந்தப்புரத்துக்கு இவ்வேளையிலே வர வேறு எவரால் முடியும்? அவர்களைக் கண்ட நான், அவர் களை இன்னும் சற்று விசாரித்து உண்மையறிந்து கொள்ளாமல் மோசம் போனேனே!" என்று கூறி வருந்திப் பொழுதுவிடியும் வரையில் அதே நினைப்பாய் இருந்தார்; பொழுது விடிந்ததும் கொலுமண்டபம் சென்று, அக்கன்னு மாதன்னு என்னும் அமைச்சர்களை வரவழைத்து, "இப்பொழுதே சிறைக்கூடம் போய்க் கோபன்னுவை அழைத்து வாரும். அவர் நமக்குக் கொடுக்க வேண்டிய பொருள் சேர்ந்துவிட்டது" என்று கூறி நடந்ததை விவரமாய்த் தெரிவித்து வியப்புற்றார்.

அமைச்சர்களிருவரும் சங்கதி யறிந்ததும் அளவிறந்த மகிழ்ச்சியடைந்து சிறைக்கூடம் போய், ஸ்ரீ ராமதாஸரை முக மலர்ச்சியோடு பார்த்து, "அப்பா, நீ தானேஷாவுக்குக் கொடுக்க வேண்டிய பொருளை, ராமோஜி லக்ஷ்மோஜி என்னும் இரண்டு பேர் வந்து 'கோபன்னு அனுப்பிய சேவகர்கள்' என்று கூறித் தானேஷாவினிடம் ஆறுலக்ஷம் வராகனையும் செலுத்திவிட்டுக் கைச்சாத்து பெற்றுக்கொண்டு போனார்களாம். தானேஷா உன்னைப் பார்க்கப் பெருமகிழ்ச்சியுடன் கொலுமண்டபத்திற்கு வந்திருக்கிறார்; உன்னை அழைத்துவர எங்களை அனுப்பினார். வா போகலாம்" என்று கூறி அழைத்தனர்.

ஸ்ரீ ராமதாஸர், ஸ்ரீ ராமபிரானுடைய திருவருளின் பெருமையை யெண்ணி மகிழ்ந்து அவர் திருவடியைத் தியானித்துத் தம்முடைய மாமன்மார்களைக் கைகூப்பி வணங்கி "பரம பக்தியின் கருணையிருந்ததைக் கவனித்தீர்களா ?" என்று சொல்லி அவர்களோடு கொலுமண்டபம் போனார்.

ஸ்ரீ ராமதாஸரைக் கண்டதும் தானேஷா சிம்மாஸனத்தி லிருந்து எழுந்து, எதிர்கொண்டு வந்து வந்தனஞ்செய்து வர வேற்று "உமது மகிமையினால் நான் ஸ்ரீ ராமமூர்த்தியைக் கண்டேன்; கரைகடந்த சந்தோஷங்கொண்டேன். உமது மகிமையை அறியாமல் உம்மைப் பலவாறாகத் தொந்தரை செய்தேன். என்னை மன்னிக்கவேண்டும்" என்று வேண்டிக் கொண்டு அவரை வீற்றிருக்கச் செய்து தாமும் தமது ஆசனத் தினே அமர்ந்தார்.

---

## 8. ராமதாஸர் ஸ்ரீ ராமதரிசனஞ் செய்தல்

ஸ்ரீ ராமதாஸர் தானேஷாவைப் பார்த்து, "பிரபுவே, உமது புண்ணியம் பெரிது. நீர் அநாயாஸமாக ஸ்ரீராமபிரானைத் தரிசித் தீர்! தரிசித்தது மல்லாமல் அவருடன் சம்பாஷணையும் செய்தீர்! உமது பாக்கியமே பாக்கியம்! கிடைத்தற்கரிய பகவத் தரிசனம் கிடைக்கப் பெற்ற உமக்கு இனி என்ன குறை யிருக்கப் போகிறது? அந்தப் பரமபதியைக் கண்ணாலே காணக் கடுந் தவம் புரிவோர் கணக்கிலடங்குவரோ? அவருடைய திரு வருட் செல்வம் பெறப் பாடுபடும் முனிவர்கள் எத்தனை பேர்? இப்படியிருக்க உமக்கு அவருடைய தரிசனம் கிடைத்ததை எண்ணினால் யார்தான் ஆச்சரியப்படமாட்டார்கள்?" என்றார்.

தானேஷா, "ஐயா, மகானாகிய தாம் என்னுடைய அரசாட் சியிலே வந்து உத்தியோகஸ்தராய் அமர்ந்து, என் பொருளை பகவானுடைய ஆலய கைங்கரியத்திற்கு உபயோகித்ததின்

பயன் இது எனத் தெரிந்துகொண்டேன். ஆகையினால், எனக்குக் கிடைத்த இந்த நன்மைக்குக் காரணம் பக்தராகிய தம்முடைய ஸத்ஸங்கமேயாம். ஸத்ஸங்கம் வீணாகாதென்று பெரியோர்கள் கூறுவதை இன்று கண்டேன்" என்று கூறி அமைச்சர்களை நோக்கி, "மந்திரிமார்களே, பத்ராஜலம் தாலூகாவை அந்த ஸ்ரீ ராமபிரானுக்கே உரிமையாக்கி ஸ்ரீ ராமதாஸரையே அதற்குப் பிரபுவாக நியமித்துவிடுங்கள். அவர் அந்தப் பகவானுடைய கைங்கரியத்தில் உழைத்துக் கொண்டு ஆநந்தமாயிருக்கட்டும்" என்று கட்டளையிட்டுப் பகவான் கொடுத்த ஆறு லக்ஷம் வராகனையும் அந்த க்ஷேத்திர கைங்கரியத்திற்கு மூலதனமாகவும் ஸ்ரீ ராமதாஸரிடம் கொடுத்தார்.

அப்பால் சபை கலைந்தது. ஸ்ரீ ராமதாஸர் அன்றைய தினமே அநேக பரிஜனங்கள் சூழப் பத்ராஜலத்திற்குப் புறப்பட்டுப் போனார். அவ்வூர்க்குடிகள் பெரிய ஆரவாரத்தோடு ஸ்ரீ ராமதாஸரை வரவேற்றார்கள். ஸ்ரீ ராமதாஸர் நேரே ஆலயத்திற்குச் சென்று ஸந்நிதியில் நின்று, "ஓ பத்ரகிரீசரே, வெகுகாலமாய் உமது தரிசனமில்லாமல் வருந்தினேன். இன்றைக்கேனும் உமது தரிசனம் கிடைக்கும்படி அநுக்கிரகம் செய்ததுபற்றி அடியேன் அடையும் சந்தோஷத்திற்கு அளவேயில்லை. பிரபுவே, என் ஜன்மம் சாபல்யமாயிற்று" என்று கூறித் துதித்துக் கோயிலை வலம்வந்து பணிந்தார்.

இப்பொழுது அவ்வூாரனைவரும் மேளவாத்திய முழக்கத்தோடும் பூர்ணகும்பத்தோடும் ஸ்ரீ ராமதாஸரைக் கண்டு வந்தனம் செய்து வரவேற்றனர். ஸ்ரீ ராமதாஸர் வெகுநேரம் வரையில் ஸந்நிதியில் நின்று ஆநந்தபரவசராகிக் கண்களில் நீர் பெருகப் பதுமைபோல் நின்று ஸ்ரீ ராமநாம கீர்த்தனம்பாடி "அடியேனை ஆண்ட கிருபாமூர்த்தியே! அன்பர்களைக் கைவிடாதானும் அச்சுதனே! அடியேனையும் இங்குவந்துள்ள அன்பர்

களையும் என்றும் பாதுகாத்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தார்.

இச்சமயம் அர்ச்சகர் பகவானுக்குத் தீபாராதனைசெய்து தீர்த்தப் பிரஸாதம் அளித்தார். அப்பால் எல்லோரும் ஸ்ரீ ராமதாஸரை மேளவாத்திய முழக்கத்தோடு அவருடைய கிரஹத்துக்கு அழைத்துக்கொண்டுபோய் விட்டுவிட்டுத் தத்தம் இல்லங்களுக் கேகினர்.

இந்த வைபவம் நடந்தபின், ஒருநாள் ஸீதாபிராட்டி ஸ்ரீ ராமபிரானை நோக்கி, "நாதா, அந்தரங்க பக்தரான ஸ்ரீராமதாஸருக்குத் தாம் முன்னே தரிசனங்கொடாமல் தானேஷாவுக்குத் தரிசனந் தந்ததேன்?" என்று கேட்டார்.

ஸ்ரீ ராமபிரான்: "அந்த விவரம் கூறுகிறேன் கேள்:—

தானேஷா, பூர்வஜன்மத்தில் சிவபிரானை வழிபடும் ஒரு சைவனாக இருந்தான். அக்காலத்தில் கங்கா நதிக்கரையில் ஓரிடத்தில் சிவாலயமொன் றிருந்தது. அந்த ஆலயத்திற்குப் போய் அவன் தினந்தோறும் சுவாமி தரிசனம் செய்வது வழக்கம். ஒருநாள் அவன் தான் எண்ணிய ஒரு கோரிக்கை நிறைவேறும் பொருட்டு ஒருவருஷகாலம் சுவாமிக்கு அபிஷேகம் செய்வதாக ஒரு நியமங்கொண்டு, அவ்வாறே அபிஷேகம் செய்துவந்தான். அப்படிச் செய்துவருகையில் ஓராண்டிற்கு ஒருநாள் குறைவாயிருக்கையில், 'இந்த லிங்கத்திலே பரமேசுவரன் இல்லை. இருந்தால் இத்தனை நாட்களாக அபிஷேகம் செய்தும் என்பொருட்டு வெளிவராம லிருப்பாரா?' என்றெண்ணித் தான் கொண்டுவந்த தண்ணீர்க் குடத்தை லிங்கத்தின்மேலே போட்டான்.

போட்ட அந்த க்ஷணமே சிவபெருமான் அந்த லிங்கத்தினின்றும் தோன்றி, 'நீ தாமச புத்தியால் அவசரப்பட்டுச் செய்த இந்த அபசாரத்திற்காகப் புவியிலே துருக்கனாகப் பிறப்

பாய்; ஆனால் ஓர் அரசனாக விளங்குவாய். அப்பொழுது ஒரு நாள் உனக்கு ஸ்ரீ ராமபிரானுடைய தரிசனம் கிடைக்கும்" என்று கூறி மறைந்தார்.

அந்த வரப்பிரசாதங் காரணமாகத்தான் நாம் முதலில் தானேஷாவுக்குத் தரிசனம் தந்தோம். ஸ்ரீ ராமதாஸன் பூர்வ ஜன்மத்தில் பெரும்புண்ணியம் செய்துகொண்டிருந்தான்; சிவபெருமானை ஆராதித்து வந்தான்; அவன் விளையாட்டுப் புத்தியினால் ஒரு கிளியைப் பிடித்துக் கூட்டிலடைத்து வளர்த்து வந்தான். ஆனால், அதற்கு ஸ்ரீ ராம நாமத்தை உச்சரிக்கக் கற்றுக்கொடுத்து வந்தான். அந்தக் காரணத்தினாலே அவன் இந்த ஜன்மத்தில் எமது பக்தியுடையவனாகப் பிறந்தான். கிளியைப் பஞ்சரத்திலடைத்து வைத்ததற்காக அவன் சிறைவாசம்செய்ய நேரிட்டது. இப்பொழுதுதான் அவனுக்குப் பூர்வ ஜன்ம கர்ம சேஷம் நீங்கிற்று" என்று திருவாய் மலர்ந்தருளினார். ஸீதா தேவியார் இதைக்கேட்டு மகிழ்ந்தார்.

அப்பால் ஸ்ரீ ராமதாஸர் ஸ்ரீ ராம பஜனை செய்துகொண்டும், ஸ்ரீ ராமபிரானுடைய மகிமையை அநேகருக்கு அடிக்கடி போதித்துக்கொண்டுமிருந்து பேரும் புகழும் பெற்றார்; வர வர வைராக்கியமடைந்து, தம்மை உணர்ந்து, பகவதாநுபவத்தைப் பெற்று எல்லாம் ராம மயமெனக் கண்டு தம் அநுபூதியை உலகத்தவர்க்கு அநுகூலமாகக் கீர்த்தனங்களாகப் பாடியருளினார். அதன்பின் ஒருநாள் பகவான் அவரைத் தமது திருநாட்டிற் கழைத்துக்கொண்டார். பிறகு அவர் மனைவியாரும் அந்தப் பத்ராஜலத்திலே துளஸீவன கைங்கைரியம் செய்துகொண்டிருந்து முடிவில் இன்பவாழ்வை யடைந்தார்.

சுபம்.

PRINTED AT THE B.N. PRESS, MOUNT ROAD, MADRAS.